www.tamilarangam.net

SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**இது எங்க பூமி!**

சிங்கக் கொடி நாட்டியெங்கள் சிறிலங்கா தேசத்தை
வங்கக் கடல் வரைக்கும் வளர்க்கவன்றோ - இங்குவந்தோம்
பங்கமென்ன? மனிதரிலாப் பாழ்நிலமே ஆயினுமீ(து)
எங்களது அன்றோ இனி?

-ஈழமோகம்

இதழ் 86 நவ.30 ~ டிசெ.13, 1995 விலை 7.00



யாழ் நகர் படையெடுப்பு:

# 'சமாதானத்தின்' சவ ஊர்வலம்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கொழும்புப் பத்திரிகைச் செய்திகள்

## புலிகளைத் தடை செய்ய அரசு நடவடிக்கை?

இராணுவ நடவடிக்கைளினூடாகத் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை யுத்தத்தில் தோல்வியுறச் செய்ய நடவடிக்கை எடுக்கும் அதே சமயம் அவ் இயக்கத்தைச் சட்டரீதியாகத் தடை செய்யும் நடவடிக்கைகளையும் துரிதப்படுத்த அரசு மிகுந்த கவனம் எடுத்து வருவதாக அரசின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இதுவரையுமே சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்படாத இயக்கமொன்று அல்ல.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக யுத்தமய ரீதியாகச் செயற்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் இச் சட்டத்தடை விரிவாக எழுந்துள்ளதாகப் பாதுகாப்புப் பிரிவுகளினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சிலவற்றைக் கருத்திலெடுத்து அரசு இக் கவனத்தைச் செலுத்தியிருப்பதுடன் அது தொடர்பாகத் தற்போது விஷேட விசாரணைக் குழுவொன்றின் மூலமாக விரிவாக ஆராயப்பட்டு வருவதாகவும் அவ் அரச பேச்சாளர் கூறினார்.

அதேசமயம் இச் சட்டத் தடை காரணமாகத் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட கட்சியொன்றாக இல்லாத தால்) பாதுகாப்புப் பிரிவுகளினால் கைது செய்யப்படும் தமிழ்ப் பயங்கரவாத சந்தேகநபர்கள் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யவோ அல்லது வேறு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கவோ, இன்று தடங்கல்கள் எழுவதாகவும் பாதுகாப்புப் பிரிவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

இந் நிலைமையின் கீழ் கடந்த காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் என ஒப்புக்கொண்ட தமிழ்ச் சந்தேகநபர்களும் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட பின்பு விடுதலையானதாகச் சுட்டிக்காட்டும் பாதுகாப்புப் பிரிவுகள் பிற்காலத்தில் அவர்கள் திரும்பவும் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரிய வந்ததாகக் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவருக்கோ அல்லது உறுப்பினருக்கோ எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடியதாயுள்ளது. அவர் சாதாரண /பொதுச் சட்ட முறையின் கீழ் ஏதாவது குற்றத்துடன் (செயலுடன்) தொடர்பானவர் என நிரூபிக்கப்பட்டால் மட்டுமேயாகும். குற்றம் புரிந்ததாக உறுதிப்படுத்தப்படாத, ஆனால் புலி உறுப்பினர்கள் என அவர்களினாலேயே கூறப்படும் தமிழர்களும் கடந்த காலங்களில் விடுதலையானதும் இப் பாதகமான நிலைமையின் கீழாகும்.

இதனால் பாதுகாப்புப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் மீது வழக்குத் தாக்கல் செய்யக் கூடிய விதத்தில் அவ் இயக்கத்தைச் சட்டமய ரீதியாகத் தடை செய்வதைப் பிரகடனப்படுத்துவது அவசர தேவை எனச் சுட்டிக் காட்டுகிறது.

சர்வதேச ஒத்துழைப்பை வைத்திருக்க புலிகள் இயக்கத்திற்கு முடிவதும் இது வரை உத்தியோகபூர்வமாகத் தடை செய்யப்படாச கட்சி என்ற முறையிலாகும்.

அவ் இயக்கத்தைச் சட்டரீதியாகத் தடை செய்யப்பட்ட இயக்கமாக இதற்கு முன்பே பிரகடனப் படுத்தியிருந்தால், அவர்களிற்குக் கிடைத்துள்ள சர்வதேச ஒத்துழைப்பைக் குறிப்பிடத்தக்களவு தவிர்த்திருக்கலாமெனவும் சுட்டிக் காட்டியுள்ளன.

இதே சமயம் எதிர்கால யுத்த நடவடிக்கைகளின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டால் அல்லது சரணடைந்தால் அவர்களுக்கு எதிராகச் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க இச் சட்டமய நிலைமையை ஏற்படுத்தி வைத்திருப்பது மிகவும் முக்கியமானதும், அவசியமானதுமான விடயமாகும் எனச் சட்ட வல்லுனர்கள் அரசிற்குச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

லங்காதீப -1995.11.25

## அரசு பின் வாங்கப் போவதில்லை!

புலிகள் இயக்கத்தை முழுமையாகவே தோல்வியுறச் செய்யாது இனிமேல் அரசு பின்வாங்கத் தயாராக இல்லையென பெருந்தெருக்கள், மின்சார, எரிபொருள் துறை அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தி, வடகிழக்கில் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலையை மிகவும் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ள அரசு பல சந்தர்ப்பங்களில் முயற்சி செய்தாலும் புலிகள் இயக்கம் அதனை விரும்பவில்லை. இதனால் அரசின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. அவ் எல்லையையும் மீறிச் சென்றதன் பின் யத்தத்தை ஆரம்பித்தது. புலிப் பயங்கரவாதத்தை இந்நாட்டிலிருந்து முழுமையாக ஒழிப்பதற்காகவே எனவும் அமைச்சர் கூறினார்.

அரசு முதலில் சமாதானத்திற்காக யுத்தத்தைச் செய்யாதிருப்போம் என்ற சுலோகத்தின் கீழ் சென்றது. ஆனாலும் அது சரிவரவில்லை. அதனால் தாம் இம் முறை விருப்பமின்றிக் கூடச் சமாதானத்திற்காக யுத்தம் என்ற சுலோகத்தை நோக்கிக் காலடி எடுத்து வைத்தோம். அதனூடாகத் தற்போது நாம் இந்நாட்டு மக்களுக்கு உண்மைச் சமாதானமொன்றை ஏற்படுத்துவதற்காக யுத்தமொன்றை ஆரம்பித்துள்ளோம் என அமைச்சர் தெரிவித்தார்.

லங்காதீப - 1995.11.26

## அவர்களுக்கு உரிமையில்லை!

கொழும்பு நகரில் அமைக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களுடன் தொடர்பானவர்களுக்கு வாகனங்களையோ, அவற்றில் பிரயாணம் செய்பவர்களையோ, அவர்களது அடையாள அட்டைகளையோ சோதிக்க எதுவித உரிமையும் இல்லையெனப் பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பொலிஸாரோ, பாதுகாப்புப் படையினரோ அன்றி இவ்வாறானவர்களுக்கு வீதித் தடைகள் போட்டு அவ்வாறான் நடவடிக்கையில் ஈடுபட அதிகாரம் இல்லை. அது சட்டவிரோதமானதென அவர் கூறினார்.

சிவில் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் இரவு நேரங்களில் தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகப் பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறான குழுக்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடமையானது சந்தேகத்திற்கிடமானவர்கள் செல்லும் வாகனங்கள் பற்றிப் பொலிசிற்கு அறிவிப்பது மட்டுமேயாகுமெனத் தெரிவித்த அவர், சிவில் பாதுகாப்பு என்ற போர்வையில் முறையற்ற நடவடிக்கைகளுக்குத் தயாராகுபவர்கள் பற்றி உடனடியாகவே பொலிசிடம் அறியத் தருமாறும் கூறினார்.

தனது சொந்த வாகனத்தின் சாரதியிடமிருந்து சிவில் பாதுகாப்புக் குழுவினர் எனப்படுவோர் சிலர் அவரது அடையாள அட்டையைப் பறிக்க முயன்றனர் என இன்னொரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். இவர்கள் பொலிஸ் அதிகாரங்களைக் கையிலெடுத்துள்ளதால் பொது மக்களுக்குப் பாரதூரமான பிரச்சினையொன்று ஏற்பட்டுள்ளதாகக் கூறிய அவ் அதிகாரி சில சிவில் பாதுகாப்புக் குழுவினர் எனக் கூறப்படுவோர் கொலைகாரக் கும்பலைச் சேர்ந்தோர் எனவும் கூறினார்.

திவயின -1995.11.17

## வவுனியாவிலிருந்து வெலிஓயாவரை பாதுகாப்பு வேலி?

தற்போது நடத்தப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கை காரணமாக பாரிய தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள விடுதலைப் புலிகள் கிழக்கு மற்றும் வட-மத்திய பிரதேசங்களிலுள்ள கிராமங்களின் மீது பழிவாங்கும் தாக்குதல்களில் ஈடுபடலாம் எனத் தெரியவருகிறது. இதனால் அப் பிரதேசங்களின் பாதுகாப்பு வலையத்தை உடனடியாக மேலும் விரிவு படுத்த வேண்டுமென அப் பிரதேச வாசிகளும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வாரங்களில் பதவியாக் குடியேற்றம் மற்றும் கப்பித்தகொல்லாவைக்கு அருகாமையிலுள்ள கிராமங்கள் மீதும் நடத்தப்பட்ட கடுந் தாக்குதல்கள் நிறுத்தப்படாது தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கின்றன. அப்பிரதேசங்களைப் பாதுகாக்கும் பொருட்டுத் தற்போது வவுனியாவிலுள்ள மாமடு வரையுள்ள பாதுகாப்பு வலையத்தை (Defence Line) வெலி ஓயா வரை நீடிப்பது அத்தியாவசியமானதாகும்.

தற்போதுள்ள நிலைமையின் கீழ் வடபகுதியில் நடைபெறும் நடவடிக்கைகளினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குப் பாரதூரமான அழிவுகள் ஏற்பட்டு வருகிறது. அதற்குப் பழிவாங்கும் முகமாகவும், ஏதாவது விதத்தில் வட பகுதியிலிருந்து பின்வாங்க வேண்டி ஏற்பட்டால் உபாயமாக ஒழிந்திருந்து இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் பொருத்தமான இடமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இப்பிரதேசங்களைக் கருதுவதாலுமே தாங்கள் தாக்கப்படலாம் என இப் பிரதேசவாசிகள் நம்புகின்றனர். ஒரு புறம் முல்லைத்தீவுக் காடும் , மறுபுறம் வவுனியாக் காடும் தொடர்பு படும் வெலிஓயா குடியேற்றப் பிரதேசத்தை மக்கள் சூனியப் பிரதேசமாக ஆக்கிக் கொள்ள முடிநதால தமழழ வடுதலைபபுலிகள் இயக்கத்திற்கு அது மிகுந்த பயன் மிக்கதெனக் கருதப்படுகிறது. கிழக்கு மற்றும் வட-மத்திய பிரதேசத்திலுள்ள ஏனைய கிராமங்களையும் அவ்வாறே மக்கள் சூனியப் பிரதேசங்களாக ஆக்குவது அவர்களின் திட்டமாகும்.

சில வாரங்களுக்கு முன் நடத்தப்பட்ட கடுந் தாக்குதல்கள் காரணமாக அவ் இடங்களிலுள்ள மக்கள் பாரிய அளவில் தமது கிராமங்களை கைவிட்டுச் சென்றபடி உள்ளனர். மேலும் அம் மக்களும், மக்கள் சூனியமாவதனூடாகத் தற்போது அவ் இடங்களில் ஆங்காங்கே உள்ள சிறு அளவிலான இராணுவ முகாம்களும் ஆபத்தான நிலைமைக்கு முகங் கொடுக்கின்றன.

அதனால் இப் பிரதேசத்திற்கான பாதுகாப்பு வேலைத் திட்டமொன்றை கூடிய விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டுமென அப்பிரதேசத்திலுள்ள பாதுகாப்பு அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர். அவ்வாறு செய்யாவிடின் கடும் அகதிகள் பிரச்சினையொன்று தோன்றும்.

இதற்காக முன் வைக்கப்படும் பாதுகாப்பு வலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகத் தற்போது வட பகுதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இராணுவப் படைப்பிரிவுகளைப் பாரியளவில் ஈடுபடுத்தும் அவசியம் இல்லை எனவும் கூறும் அவர்கள், பிரதேசத்தின் ஊர்காவற்படையினரதும், பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் தொண்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதனூடாகவும் இத் திட்டத்தை ஆரம்பிக்க முடியுமெனக் கூறுகின்றனர்.

எவ்வாறெனினும் பாதுகாப்பு வேலி நெடுகிலும் 200 மீற்றருக்கொரு இராணுவக் காவலரண்கள் அமைக்கப்பட வேண்டும்.

இதே சமயம் பதவியா பிரதேசத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அரசியல் அடிப்படையில் செய்யப்படுவதால் அதன் பாதுகாப்பு வேலைகள் குழம்பியுள்ளதெனப் பதவியாவாசிகள் தெரிவிக்கின்றனர். அதனால் முன்பு இருந்த பாதுகாப்புக் கூட இல்லாது போனதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

யுக்திய -1995.11.12

## படையினருக்கு காணி!

இன்று எமது இராணுவம் யாழ்ப்பாணக் குடா நாட்டில் போராடுவது அங்கு இல்லாது போன ஆட்சி அதிகாரத்தைத் திரும்ப ஸ்தாபிக்கவேயாகும்.

அதனைச் சரியான முறையில் ஸ்தாபிக்க மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் செல்லலாம். அதனால் இராணுவச் சிப்பாய்களுக்கு அங்கு காணிகள் வழங்கி, வீடுகளை அமைத்து நிரந்தரமாகக் குடியமர்த்த வேண்டுமெனக் கொழும்பு மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் சுசில் முனசிங்ஹ பாராளுமன்றத்தில் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது, எமது இராணுவத்தினர் உயிர்த் தியாகத்துடன் போராடுகின்றனர். நாம் அதற்காக அவர்களுக்கு எல்லாப் பிரதிபலன்களையும் கொடுக்க வேண்டும்.

அதே போல் யாழ்ப்பாணத்திலிருந்த 36,000 சிங்களவர்களைப் புனருத்தாரண வேலைத் திட்டத்தின் கீழ் மீளக் குடியமர்த்த வேண்டும். இங்கு இனங்களுக்கிடையே நட்புவளர வேண்டுமாயின் சிங்களவர்கள் தமிழர்களுடன் ஒன்றாக வாழ வேண்டும். மறுபுறம் நாகதீப, நாக விஹாரை ஆகிய வணக்க ஸ்தலங்களைத் திரும்பவும் புனர்நிர்மாணம் செய்ய வேண்டும்.

திவயின -1995.11.17

## புலிகள்–பிரித்தானிய வெளிவிவகார செயலர் சந்திப்பு?

புலிகள் இயக்க ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பிரித்தானிய வெளிநாட்டுச் செயலாளரை 95 நவ.24 அன்று பகல் சந்திக்க ஏற்பாடாகியிருந்ததாக அறியக் கிடைக்கிறது.

அவர் அதற்கு முன்பு அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்து இலங்கை நிலைமைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்பிற்கான காரணம், ஐரோப்பிய நாடொன்றை நடுவராகப் பாவித்துத் தற்போது வட பகுதியில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்துவதாகும் என இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது வட பகுதியில் நடத்தப்படும் 'ரிவிரச' நடவடிக்கை காரணமாகப் புலிகள் இயக்கம் படுதோல்வியடைவதால் இவ்வாறான முறைகளை உபயோகிக்க அவர்கள் முயற்சி எடுப்பார்கள் என்பதும் விமர்சகர்களின் கருத்தாகும்.

அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளை நடுவர்களாக ஈடுபடுத்தி, பொஸ்னியாவிற்குச் சமாதானத்திற்காக நிர்ப்பந்தித்த விதத்திலான யோசனையொன்றை அவர்கள் மூலமாக இலங்கைக்கு ஏற்படுத்தப் புலிகள் முயல்வதாக அறியக் கிடைக்கிறது.

இதன் அடிப்படை நோக்கம், தற்போது தோல்வியடைந்துள்ள புலிகள், மீண்டும் அப்பிரதேசங்களில் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வெளிநாடுகளை ஈடுபடுத்துவதாகும்.

திவயின- 1995.11.25

## புலிகளின் திட்டம்!

புலிகளின் ஈழ இராச்சியமாகப் பல காலமாக ஆக்கி வைத்திருந்த யாழ்ப்பாண நகரம் ''ரிவிறச'' இராணுவ படைப்பிரிவுகளிடம் வீழ்கையில், விமானமொன்றைக் கடத்தி, இராணுவத்தின் மீது விமானத் தாக்குதலொன்றை நடத்தப் புலிகள் திட்டமிட்டுச் செயற்படுவதாகப் பாதுகாப்புப் பிரிவுகளுக்குத் தற்போது சந்தேகம் எழுந்துள்ளது.

இதன்படி கட்டுநாயக்க, இரத்மலானை விமான நிலையங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் சில விமானப் பயணிகள் தொடர்பாகவும் பொலிஸார் மிகுந்த அவதானமாக உள்ளனர்.

ஜுத்றகிடையில் இந்திய விமான நிலையங்களுக்கும் கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளன.

இதனைவிட புத்தளம் முதல் பாணந்துறை வரையுமே கடற் பரப்பில் இடமிருப்பதாக அக் கடற் பரப்பில் கடற் படையின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

திவயின - 1995.11.27

## தீர்வு இல்லை!

அரசின் அரசியல் தீர்வுத் திட்டத்தைப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கும் திகதி தொடர்பாக இதுவரை இறுதி முடிவேதும் எடுக்கப்படவில்லையென நீதி, அரசியலமைப்பு நடவடிக்கை அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அரசியல் தீர்வுத்திட்டம், நவம்பர் 21ஆந் திகதி தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுமென அரசின் தொடர்பு சாதனங்களினூடாகச் செய்திருந்த அறிவிப்பு உண்மைக்குப் புறம்பானதாகுமென பீரிஸ் கூறினார்.

அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும் தினம் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டியது ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் தலைமையிலான அமைச்சரவையே எனவும் அவர் மேலும் கூறினார்.

திவியின -1995.11.17

## யுத்தத்தை நிறுத்துக!

வடபகுதி யுத்தத்தை உடனடியாக நிறுத்துவதற்காக யுத்த எதிர்ப்புக் கூட்டமொன்றைக் கொழும்பில் நடத்தத் தீர்மானித்துள்ளதுடன், தமிழ் மக்களுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய அதிகாரப் பரவலாக்கலொன்றை நடைமுறைப்படுத்த அரசை வலியுறுத்துவதெனவும் தேசத்தின் .பாதுகாப்பிற்கான ஆர்ப்பாட்டம் என்ற அமைப்பொன்று பத்திரிகை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அமைப்பாளர் குழு சாபாக இபபதத்ாிகை அறிக்கையை வெளியிட்டிருப்பவர்கள் கலாநிதி சுனில் விஜேசிறிவர்தன, பேராசிரியர், எம்.ஸ்ரீயானந்த, கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன, கலாநிதி க.வேலாயுதபிள்ளை, ஹரி அபேகுணவர்தன, ச.பாலகிருஷ்ணன், மொஹிர் ரஹ்மான், லீனஸ் ஜயதிலக்க, பீ.திருநாவுக்கரசு, பீ.டீ.சரணபால வைத்தியக் கலாநிதி சுனில் ரத்னப்பிரிய,சரணப்பால சில்வா, கலாநிதி எஸ்.பீ.விக்ரமசிங்ஹ, போல் டேவிட் ஆகியோராவர்.

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் எல்லோரும் அகதிகளாக்கப்பட்டுள்ளதாகவும், தமிழர்களை விடுவிக்கும் இலங்கை இராணுவத்தை நோக்கி மக்கள் வருவதற்குப் பதிலாகத் தென்மராட்சி, கிளிநொச்சிப் பிரதேசங்களிற்குத் தப்பியோட ஆரம்பித்துள்ளதாகவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திவயின -1995.11.17

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யுத்தத்தின் முடிவு என்ன?

ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் சரியான அரசியல் தலைமையின் காரணமாக இன்று யாழ் நகர் நோக்கி வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன அசர படைகள் என்று அறிவித்திருக்கின்றார் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அநுருத்ரத்வத்தை. 'யாழ் குடாநாட்டின் வலிகாமம் பகுதி முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்ட ரிவிரெச நடவடிக்கை யாழ்ப்பாணத்தை இன்னும் ஓரிரு தினங்களுக்குள் கைப்பற்றிவிடும். அவ்வாறு கைப்பற்றிக் கொண்டாலும். அது எமது முடிவாக அமைந்து விடப் போவதில்லை. அது ஒரு முடிவுக்கான தொடக்கம் மட்டுமே' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

'எந்த விலைகொடுத்தாவது நாம் இந்த நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வருவோம்' என்று ஆரம்பத்தில் ஜனாதிபதி அவர்கள் அறிவித்திருந்தபடி யுத்தமூலம் 'சமாதானத்தை'க் கொண்டு வருவதற்காக எந்த விலையையும் கொடுக்க அரசு தயார் என்பது இப்போது தெளிவாகி விட்டது. எவ்வளவு பிரதேசங்கள் அழிக்கப்பட்டாலும் எவ்வளவு உயிர்கள் கொல்லப்பட்டாலும் எவ்வளவு மக்கள் தமது வீடுவாசல்களை விட்டு ஓடி அகதிகளாகப் போனாலும் யாழ் நகரில் போய்நின்று சிங்கக் கொடியை நாட்டும் முயற்சியில் அரசு ஒரு போதும் தளரப் போவதில்லை; தளரக் கூடாது என்ற பரவலான பேச்சுக்கள் இப்போது ஒலிக்கத் தொடங்கி விட்டன. புலிகளது தலைவர் பிரபாகரனது தலைக்கு விலையும் விதிக்கப்பட்டுவிட்டது. அரசாங்கம் தருகின்ற தகவல்கலைப் பார்த்தால் யாழ்நகரில் தப்பியோடும் புலிகள் வீடுகளையும் பொதுச் சொத்துக்களையும் அழித்துக் கொண்டு போவதால் அங்கே மிச்சமாக எதுவும் இருக்கபோவதில்லை என்பது தெரிகிறது. கட்டிடங்களை இடித்துத் தரைமட்டமாக்கிக் கொண்டு போவது எதிரிக்கு முன்னேற மேலும் வாய்ப்பைக் கொடுக்கும் என்ற அடிப்படை ஞானம் கூட இல்லாமலா புலிகள் இவ்வளவு காலமும். கெரில்லா யுத்தத்தை நடாத்தினார்கள் என்று யாருக்காவது சந்தேகம் வரக்கூடும். ஆனால் உண்மையைத் தவிர வேறொன்றையும் கூறியறியாத இலங்கை தகவல் துறையின் அபிப்பிராயங்களை நம்பாமல் இருந்துவிட முடியுமா என்ன? தப்பும் தவறுமான அல்லது பொய்யான தகவல்களைத் தருகிறார்கள் என்பதற்காக தணிக்கை முறையை அமுல் செய்ததுடன் அவ்வாறான தகவல் கொடுப்பவர்களது பதவியையும் பிடுங்கிக் கொள்வதன் மூலம் உண்மையான தகவல்களை அரசாங்கம் மக்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறது.

இதே வேளை குடாநாட்டில் சிங்கக் கொடியை நாட்டிவிடுவதில் தீராத ஆர்வமுடைய பத்திரிகைகளும் அரசியல் சக்திகளும் தோல்வியடைந்து ஆயுதங்களைப் போட்டுவிட்டு புலிகள் ஓடிக்கொண்டிருப்பதைப் பற்றியும் அவர்களை வீராவேசமாக விரட்டிக் கொண்டிருக்கும் படைவீரர்களையும் பற்றிய ஊகங்களையும் இடைமறித்து கேட்ட செய்திகளையும் மக்களுக்கு தெரியப் படுத்திக் கொண்டிருக்கின்றன. வலிகாமம் முழுவதும் வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடம் பெயர்ந்து விட்டதாகவும் அங்கிருக்கும் மக்களும் இப்போது கிளிநொச்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவும் வேறு சில தகவல்கள் கூறுகின்றன. இவர்கள் இராணுவத்தினரின் ஷெல் அடிகளுக்கோ குண்டு மழைகளுக்கோ அஞ்சியல்ல மாறாக புலிகளின் முரட்டுத்தனமான மனிதாபிமானமற்ற முறையிலான ஒலிபெருக்கி அறிவிப்புக்கள் காரணமாகவே வெளியேறிக் கொண்டிருப்பதாகவும் அரசாங்க சார்பு செய்திகள் கூறுகின்றன.

பெருமளவில் அகதிகளை உருவாக்குவதன் மூலமாக இலங்கை அரசாங்கத்தின் வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைகளையிட்டு உலக மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தும் நோக்குடனேயே புலிகள் இப்படி மக்களை விரட்டுகின்றார்கள் என்று அவை மேலும் கூறுகின்றன. பிரபாகரனது இலங்கை இராணுவத்தின் பலம் தொடர்பான மதிப்பீட்டில் இருந்த தவறுகாரணமாக புலிகள் இப்போது நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்; இதன் காரணமாக தம்மால் இலங்கை அரசை எதிர்த்து நிற்க முடியாது என்று தெரிந்துவிட்டதால் சமாதானத்துக்கு தயார் என்று இப்போது அறிவிக்கிறார்கள். உண்மையில் அவர்களுக்கு சமாதான நோக்கம் இல்லை. தமது தோல்வியை மூடி மறைக்கவும்; தம்மை மீள ஒழுங்குப்படுத்திக் கொள்ளவுமே புலிகள் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்றெல்லாம் ரூபவாஹினியும் தகவல் தருகிறது.

ஆக. இப்போது கிடைத்துக் கொண்டிருக்கும் தகவல்களை கேட்டுக் கொண்டிருப்பவர்கள் இங்கு நடந்து கொண்டிருப்பது பற்றி தெளிவான ஒரு முடிவுக்கு வருவது சாத்தியம். அதுதான் இந்த யுத்தம் இப்போதைக்கு நிற்கப்போவதில்லை. பிரதி பாதுகாப்பு அமைச்சரின் கருத்துப்படி அது வேறு இடங்களுக்கும் தொடரும். அகதிகள் பெருக்கம் பொதுமக்கள் கொலை பட்டினி அப்பாவிமக்கள் யுத்தத்தில் அகப்பட்டுச் சாதல் போன்ற விடயங்கள் இந்த நாட்டில் புலிகளின் கொட்டத்தை அடக்குவதுடன் ஒப்பிடுகையில் ஒன்றும் முக்கியமானவைகள் அல்ல.

மாவீரர் தினத்தையொட்டி வெளியிட்ட அறிக்கையொன்றில் தாம் ரிவிரெச நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப் பட்டிருப்பதை பிரபாகரன் ஒப்புக்கொண்டுள்ள போதும் சமாதானத்திற்கான வாய்ப்புக்கள் பற்றிய கேள்விக்கு இராணுவம் தனது பழைய நிலைகளுக்கு செல்லாமல் சமாதானம் பற்றிய பேச்சுக்கே இடமில்லை என்று தெரிவித்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

இன்று தோன்றியுள்ள நிலையானது இந்தியப்படைகள் வந்திருந்த காலத்திய நிலைக்கு ஒப்பான ஒன்றாகும் என் றும். அன்றிருந்த நிலைமையிலிருந்து தம்மை தாம் ஒழுங்குபடுத்திக் கொண்டது போல இப்போதும் தம்மால் தம்மை ஒழுங்குப் படுத்திக் கொள்ள முடியும் என்றும் தனது அறிக்கையில் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான அரசு தரப்பு அபிப்பிராயம் பிரபாகரனின் இந்த அறிவிப்பை கேலிசெய்யும் விதத்திலானதாகவே அமைந்துள்ளது. அப்போதிருந்த இலங்கை அரசாங்கம் ஆயுதங்களை வழங்கியதும். தமிழ் சமூகம் பெருமளவில் நிதி வழங்கியதுமான நிலை இப்போது இல்லை என்பதால் பிரபாகரன் இப்படிக் கூறியபோதும் அவரால் அதைச் செய்ய முடியாது என்பதாக உள்ளது.

எனவே யுத்தம் முடிவுறாத ஒரு தொடரும் விவகாரமாகவே அமையப் போகிறது என்பது வெளிப்படை. இந்த நிலையில் யுத்தத்தை நிறுத்துமாறு கோரிக்கை வைப்பவர்கள் எல்லோரும் அரச சார்புச் சக்திகளாலும் அவற்றின் எடுபிடிகளாலும் மற்றும் இனவாத சக்திகளாலும் புலிகளுக்குச் சார்பானவர்கள் என்று முத்திரை குத்தப்படுகிறார்கள். யுத்தத்தை நிறுத்துமாறு சரிநிகர் கோரிக்கை வைத்ததால் சரிநிகரும் புலிகளின் 'வால்' என்ற குற்றச் சாட்டுக்குள்ளாகியிருக்கிறது.

ஆனால். புலிகள் மீதான தாக்குதல் ஆரம்பிக்கபட்ட நாளில் இருந்து இன்றுவரை எப்பவாவது 'தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு' என்று யாராவது ஆளுங்கட்சி பிரமுகர்களின் பேச்சைத் தவிர நாட்டில் நிலவும் அரசியற் பிரச்சினையைத் தீர்க்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. புலிகளை மண்கவ்வ வைக்கும் வரை பிரபாகரனை உயிருடனோ பிணமாகவோ பிடிக்கும் வரை அது பற்றிப் பேச நேரமில்லை என்பதுதான் இன்றைய நிலைப்பாடாக உள்ளது. யுத்தம் நடக்கின்ற வேகத்தில் சிங்கள இனவாதப் போக்குகள் மிகவும் வேகமாக வளர்ந்து வருகின்றன. மோர்ஜ் அலுவலகம் முன்பாக இனவாதிகளால் அண்மையில் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டமும் அலுவலகத்தை தாக்குவதற்கான முயற்சியும் யுக்திய பத்திரிகை ஆசிரியர் மீது நடாத்தப்பட்ட தாக்குதலும் இதற்கு நல்ல உதாரணங்கள்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டு ரிவிரெச நடவடிக்கைகள் ஏனைய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு புலிகள் அடக்கப்படுவார்களா. னால் எந்தச் சமாதான நோக்கம் பற்றி அரசாங்கம்



இப்போது பேசுகிறதோ அந்தச் சமாதானம் அரசியல் தீர்வு அற்ற நிலையிலேயே தமிழ்மக்களை அடக்கி ஒடுக்கி வைத்திருப்பதற்கு முடியுமாகிற ஒரு சமாதானம் - வந்தாலும் வரக்கூடுமே தவிர வேறெதுவும் நடந்து விடப்போவதில்லை என்பது தெளிவாகுகிறது. யுத்தம் நின்று விட்டால் சமாதானம் வந்து விட்டது என்று அர்த்தம் என யுத்தத்துக்கும் சமாதானத்துக்கும் உள்ள அதிகார அர்த்தங்களின் அடிப்படையில் சிந்திப்பவர்களுக்கு இது போதுமானதாக இருக்கலாம். ஆனால் சமாதானத்துக்கான சமாதியே இங்கேதான் கட்டப்படுகிறது என்பதே நடக்கப்போகிற உண்மையாகும்.

கொஞ்சம் நடைமுறை சார்ந்து யோசிப்பவர்களுக்கு இது புரியும். இதுதான் சமாதானம் என்றால் இந்தச் சமாதானம் எழுபதுகளின் ஆரம்பத்தில் நிறையவே இருந்தது. ஆனால் எழுபதுகளின் இறுதியில் ஆயுதப் போராட்டத்திற்கான ஆரம்பக்கூறுகள் தெளிவாக வெளியிடப் பட்டன. எனவே யுத்த நிலை புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் - தொடர்ந்து நிலவத்தான் செய்யும். கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை பாதுகாக்கவும் யுத்த அழிவிலிருந்து மீளவும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டோரைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் என்று கோடிக்கணக்கான நிதி தொடர்ந்து செலவழிக்கப்பட வேண்டிய நிலை இருக்கத்தான் செய்யும். இது மேலும் மேலும் நாட்டில் அமைதியின்மையையும் நெருக்கடியையும் உருவாக்கவே செய்யும். யுத்தம் நடக்கின்ற ஒவ்வொரு நாளும் யுத்த நிலையிலிருந்து மீள முடியாத நிலைக்கு நாடும் நாட்டு மக்களும் மேலும் மேலும் அமிழ்த்தப்பட்டுக் கொண்டு போவதும் தொடரவே செய்யும்.

நாட்டின் அரசியல் பிரச்சினையின ஆழத்தை புரிந்து கொள்ளாதவர்கள் அல்லது விரும்பாதவர்கள் பிரபாகரனின் மனநோய் பற்றியோ புலிகளின் இரத்த வெறிபற்றியோ மனிதாபிமானமற்ற அவர்களின் நடவடிக்கைகள் பற்றியோ மட்டும் பேசுவதுடன் நிறுத்திக் கொண்டு விடலாம். ஆனால். இலங்கை அரசின் யுத்தத்தின் பின்னாலுள்ள. இன்று யுத்தத்தை ஆதரிக்கின்ற சக்திகளின் பின்னாலுள்ள நோக்கங்கள் என்ன என்பதை கவனத்தில் எடுக்காவிட்டால் அடுத்துவரப் போகும் பயங்கரம் எப்படி என்று புரிந்துகொண்டுவிட முடியாது. இதுபுலிகளை அழிக்க வேண்டும் என்பதற்காக யுத் தத்தை ஆதரிப்பவர்களையும் சேர்த்து அழித்துவிடக்கூடிய மிகப்பயங்கரமான ஒரு ஆபத்து. ஜனாதிபதியின் சிறந்த அரசியல் தலைமையின் கீழ் யுத்தம் இன்று வெற்றிகரமாக நடக்கிறதா அல்லது யுத்தம் சிறப்பாக நடப்பதற்கான அரசியல் வேலையை ஜனாதிபதி செய்கிறாரா என்பதை அப்போதுதான் விளங்கிக்கொள்ள முடியும். 'யுத்தம் மூலம் சமாதானம்' என்பது எப்போது உச்சரிக்கப்படத் தொடங்கியதோ எப்போது அரசியல் பேச்சுவார்த்தை முயற்சிகளை விட யுத்தம் பிரதானமான விடயமாக போயிற்றோ அதற்கு அரசு நியாயங்கள் ஆயிரம் இருந்தபோதும் அப்போதே தலைமை சந்திரிகாவின் அரசியலில் அல்ல அவரது இராணுவ முனைப்பினை நோக்கி நகர்ந்துவிட்டது என்பது தான் உண்மை.

அரசியல் ரீதியான தீர்வு முயற்சியில் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகின்றது;

பிரச்சினையை தீர்ப்பதில் இருதரப்புக்களும் ஒன்றிப் போகின்றார்கள். அங்கே தோல்வியோ வெற்றியோ ஏற்படுவதில்லை. ஆனால் யுத்தத்தில் அப்படியல்ல. வெல்பவர்கள் பலமுள்ளவர்களாகிறார்கள். அந்த அடிப்படையில் அதிகாரத்துடன் பேசுகிறார்கள். அந்த இடத்தில் வெல்பவர்களது அதிகாரம் பகிரப்படுவதில்லை. தோற்றவர்கள் கொடுப்பதை ஏற்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதனால் அங்கே பிரச்சினை தீர்வதில்லை. மாறாக புதிய பரிமாணத்துடன் ஆரம்பமாகிறது.

பலர் நம் புவதுபோல வெற்றிபெற்ற பின் ஜனாதிபதி அரசியல் தீர்வொன்றை - தமிழ் மக்கள் ஏற்கும் படியான தீர்வொன்றை - வழங்கும் அற்புதம் நடந்தால் அதற்குப் பிறகு ஒருகணமும் ஜனாதிபதி பதவியில் இருக்கமுடியாத நிலையே ஏற்படும். அவரால் கொடுக்கப்பட்டவற்றை பறிக்க ஒரு புதியவர் அப்பதவிக்கு வந்துவிடுவார். ஏனெனில் யுத்தத்தின் வெற்றிக்கு உழைத்த சக்திகள் தமது நோக்கத்தை நிறைவேற்றத்தான் ஒரு தலைவரை தேடுவார்களே ஒழிய அவற்றை தானம் செய்யும் ஒருவரை அல்ல.

இதனால்தான் யுதயம் நிறுத்தப்பட வேண்டும் என்பது அவசியமாகிறது.

ஒடுக்கப்பட்டவர்கள் மத்தியில் இருந்து ஆயுத கிளர்ச்சி எழுவது ஒடுக்கும் முறையிலிருந்து தாம் விடுபட வேண்டும் என்பதற்காகவே.

கிளர்ச்சியை அடக்குவது எப்போதும் தற்காலிகமான வெற்றியையே தரும். பதிலாக கிளர்ச்சிகான அடிப்படைகளை களைவதே நிரந்தரமான பலனைத்தரும்.

இந்த இறுதிக் கணத்திலாவது அரசாங்கம் இது பற்றி விளங்கிக்கொள்வது நல்லது. நாட்டிற்கும் சரி; அரசாங்கத்திற்கும் சரி.

அல்லாவிட்டால் திரும்பவும் திரும்பவும் சதுரங்கத்தின் முதலாவது கட்டத்திற்கே திரும்பிப் போகிற அழிவு வழியில் நாட்டை வழிநடாத்திய பெருமையையும் நாட்டின் நெருக்கடியை இன்னுமொருபடி ஆழமாக்கிய பெருமையையும் சுமப்பதற்காக தொடர்ந்து யுத்தத்தில் ஈடுபடலாம்.

நாசமறுப்பான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சொக்லேட்டும் பியரும்!

இப்போதெல்லாம் இலங்கை அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்டம் மக்கள் மத்தியில் அவ்வளவு முக்கியத்துவம் பெறுவதில்லை. முன்னரெல்லாம் வரவு-செலவுத்திட்டத்தினூடாக விலை உயர்த்தப்பட்டு வந்த அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் இப்போது ஒன்றில் வரவு- செலவுத் திட்டத்திற்கு முன்னர் அல்லது பின்னர் இரவோடிரவாக கசற் மூலம் விலையேற்றப்பட்டுவிடும்.

கடந்த வருடம் பதவிக்கு வந்த பொ.ஐ.மு.அரசு பாதுகாப்புச் செலவினத்தைக் குறைத்து அபிவிருத்தியில் அக்கறை செலுத்தப் போவதாக தேர்தல் காலத்திலிருந்து தெரிவித்து வந்த போதும், அதன் இரண்டாவது வரவு-செலவுத்திட்டத்திலும் அவ்வாறான எதையும் காணமுடியவில்லை.

வடக்கு-கிழக்கு யுத்தத்தைக் காரணம் காட்டி வழமை போல்வே -இம்முறை வழமைக்கும் அதிகமாகவே பாதுகாப்புச் செலவினம் 38 பில்லியன் ரூபாவாக 14 மில்லியன்களால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. தேசிய பந்தோபஸ்து வரி 4.5 வீதமாகவே தொடர்ந்திருக்கும் எனவும் அரசு அறிவித்திருக்கிறது.

வழமைபோல எல்லா டாம்பீககரமான செலவுகளும் யுத்தத்தின் பேரால் மக்களின் மீது ஏற்றி வைக்கப்பட்டு விடுகிறது.

அரசு பதவிக்கு வந்த போது 3 ரூபா 50சதமாக குறைக்கப்பட்ட பாண் கடந்த வாரத்திலிருந்து 5 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. பருப்பின் விலையோ வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னரேயே அதிகரிக்கப்பட்டுவிட்டது.

பாணின் விலையை அரசு குறைத்ததால் ஏற்படும் நெல்லின் விலை குறைவு விவசாயிகளைப் பாதிக்கிறது என்று எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்திய போது "அது பொய் ஏழை விவசாயிகள் நன்மை கருதியே பாணின் விலை குறைக்கப்பட்டது" என்றார் விவசாய அமைச்சர். இப்போது பாணின் விலை அதிகரிக்கப்பட்டதும் அவரே "பாணின் விலையை அதிகரித்ததற்காக விவசாயிகள் நன்றி தெரிவிக்க வேண்டும்" என்று அறிக்கை விடுகிறார். ("சமாதானத்தின் பெயரால்" இதையும் சகித்துத் தான் ஆக வேண்டுமோ?)

இதே அமைச்சரிடமிருந்து அல்லது இந்த அரசின் யாராவது ஒரு அமைச்சரிடமிருந்து இப்படி ஒரு அறிக்கை வெகுவிரைவில் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

"எங்கள் அன்பான மக்களே,

புலிகளுக்கெதிரான இறுதி யுத்தத்தின் காரணமாகத் தவிர்க்க முடியாமல் பாண், பருப்பு ஆகியவற்றின் விலைகளை நாம் சற்று அதிகரித்திருந்தாலும், உங்கள் எல்லோரதும் நன்மைகருதி சொக்லேட்டின் விலையையும், பியரின் விலையையும் குறைத்திருக்கிறோம். எனவே நீங்கள் பாணுக்கும் பருப்புக்கும் பதிலாக சொக்லேட்டை சாப்பிட்டு பியரையும் பருகுவீர்களாக!

## ஒரேயொருவர் கதிர்காமர்!

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைத் தவிர எல்லாத் தமிழர்களையும் புலிகள் எனச் சந்தேகிக்கிற நிலையிலேயே அரசு இருக்கிறது. இதனை வலுப்படுத்துமாற் போல் "தீவிரவாதிகள் யார் என்பதைக் கட்புலனினால் ஊகிக்க முடியாததால் தமிழர்களின் மேல் சந்தேகம் ஏற்படுவதைத் தடுக்க முடியாது" என்கிறது சிங்கள மாற்றுப் பத்திரிகையான ராவய. (ஆசிரிய தலையங்கம் நவ.26, 1995)

# யுத்தம் பற்றி 3 குறிப்புகள்

மறுபுறத்தில், 'வெளிநாட்டமைச்சரின் சேவை இந்நாட்டில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்' என்கிறார் கல்வி. உயர் கல்வி அமைச்சர் ரச்சர்ட் பத்திராண.

இந்த ரிச்சர்ட் பத்திராணவும் வேறும் சில சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் தான் நவ. 15.இல் பெந்தோட்டையில் நடைபெற இருந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற பிரதிநிதிகள் மாநாட்டை நடாத்த விடாமல் தடுத்ததற்கும், பெந்தோட்டையில் வைத்து தானும் மற்றும் வோல்ட்டர் கெலர் மைக்கல் என்ற இரு ஜேர்மன் நாட்டுப் பிரதிநிதிகளும் தாக்கப்பட்டதற்கும் பின்னணியில் இருந்தார் என்று குற்றம் சாட்டுகிறார் யுக்திய ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய.

இம்மாநாடு நடைபெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முதல் லண்டனிலிருந்து 'தேசப்பிரேமி அமைப்பு' எனப் பெயர் கொண்ட ஒரு அமைப்பிடமிருந்து ஒரு கடிதம் வெளிநாட்டமைச்சுக்கு வந்திருந்தது. 'இலங்கையில் அரச சார்பற்ற அமைப்புக்கள் ஒன்று கூடவிருக்கின்றன' என அதில் குறிப்பிடப்பட்டிருந்த செய்தியை ஊர்ஜிதம் செய்ய அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த லண்டன் முகவரியோடு வெளிநாட்டமைச்சு தொடர்பு கொண்டபோது அவ்வாறான ஓர் அமைப்பு குறித்த முகவரியில் இல்லை என்ற தகவல் கிடைத்திருக்கிறது.

ஆனால், வெளிநாட்டமைச்சுக்குக் கிடைத்த அந்தக் கடிதம் பின்வருமாறு திரிக்கப்பட்டு எல்லாப் 'பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது: "பெந்தோட்டை விடுதி ஒன்றில் அரசாங்கத்துக்கு எதிராக புலிகளுக்கு ஆதரவான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. அதனை ஒருங்கமைத்திருப்பது இலங்கையின் அரச் சார்பற்ற நிறுவனங்கள். இக்கூட்டம் புலிகளுக்குப் பக்கச் சார்பானது?

மாநாடு ஆரம்பமாவதற்கு முதல்நாள் லேக் ஹவுஸ் பத்திரிகை உட்பட எல்லாப் பத்திரிகைகளும் இச்செய்தியை முதற்பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன. மறுபுறத்தில் மாநாட்டைக் குழப்புவதற்கான குண்டர்கள் 'சமாதானம் வேண்டாம்' 'யுத்தமே வேண்டும்' என்ற சுலோகங்களுடன் தயார் செய்யப்பட்டனர். 'இதில் பின்னணியில் நின்றவர்கள், பெந்தோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த சுதந்திரக் கட்சி பிரதேச சபை உறுப்பினர்கள் தான் என்கிறார் சுனந்த தேப்பிரிய. தாங்கள் சென்ற வாகனத்தை வழிமறித்த குண்டர் கூட்டம் தன்னை வெளியில் இழுத்தெடுத்துத் தாக்கியதாகவும், தான் தப்பியோடிப் போய் ஒரு இராணுவ ஜீப்பில் ஏற, அதிலிருந்த இராணுவத்தினர் ஜீப்பிலிருந்து இறங்கும்படியும் அல்லது சுட்டுத் தள்ளப் போவதாகவும் பயமுறுத்தியதால் தான் இழ்ங்கி, அவர்கள் துரத்தச் துரத்த மறுபடியும் ஓடியதாகவும் சொல்கிறார் அவர்.

"ஏழத்தாழ 25 நிமிடங்கள் இந்த நாட்டில் இதே காரணத்துக்காக ஒரு தமிழன் என்ன துன்பத்தை அனுபவித்தானோ அதே துன்பத்தை அனுபவித்தேன்" என்று சற்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறிய சுனந்த, 'நல்ல காலம் எம்முடன் தமிழர்கள் எவரும் வரவில்லை; வந்திருந்தால் கொன்று போட்டிருப்பார்கள் என்று கூறுகிறார்.

இப்போது கேள்வி இதுதான்: இந்த அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் அரசு; குண்டர்கள் கூட்டணிக்கும் இடையிலான சம்பந்தம் என்ன?

யாழ்ப்பாணம் பற்றிய செய்திகள் வெளியேறா வண்ணம் அரசு செய்தித் தணிக்கையை அமுல்படுத்தி விட்டு யுத்தத்தை நடாத்துகிறது. அரசு எதிர் பார்த்தது போலவே யாழ்ப்பாணத் தாக்குதல் பற்றிய விபரங்கள் உள்ளூரில் வெளிவராமல் தடுக்கப்பட்டு விட்டது. ஆனாலும் சர்வதேச ரீதியாக அவை வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது.

நவாலித் தேவாலயம் மீதான தாக்குதலை அரசு மறுத்த போதும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அதனை வெளிக்கொணர்கிறது.

நாகர் கோயில் பாடசாலை மீதான தாக்குதலை அரசு மறுத்த போதும் யுனிசெப் அதனை வெளிக்கொணர்கிறது.

யாழ்ப்பாண மக்களுடைய அவலம் கத்தோலிக்க மதகுருமார்கள் மூலம் சர்வதேசரீதியாக வெளிப்படுத்தப்படுகிறது.

யாழ்ப்பாணம் மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டு உடனடியாக உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவிக்கிறார் ஐக்கியநாடுகள் அவைச் செயலாளர் பூட்டோப் காலி.

இவ்வளவு சம்பவங்களும் முகங்கொடுக்க வேண்டிய வெளிநாட்டமைச்சருக்கு கோபம் உச்சிக்கு ஏறாதா என்ன?

வெளிநாட்டமைச்சுக்கு லண்டனிலிருந்து வந்த கடிதம், திரிப்புடன் பத்திரிகைகளுக்குக் கை மாறியது.

சுனந்த சொல்கிறார்: "இது அரசின் திட்டமிட்ட வேலையே தான் நாங்கள் அசம்பாவிதம் ஏதாவது ஏற்படக் கூடும் என்று கருதியதால் முன் கூட்டியே பொலிஸ் பாதுகாப்புக் கோரியிருந்தோம். பாதுகாப்பு வழங்குவதாகக் கூறப்பட்டது. ஆனால் சம்பவம் நடந்த போது பொலிஸ் பாதுகாப்பு எதுவும் போடப்பட்டிருக்கவில்லை".

இப்போது புரிகிறதா தொடர்பு?

உண்மையிலேயே வடக்கில் அரசு நடாத்தும் யுத்தம் தற்காப்பு யுத்தமல்ல; புலிகளிடமிருந்து தமிழர்களை விடுவிக்கும் யுத்தமுமல்ல. சுனந்த சொல்வது போல "இந்த அதிகாரம் இனவாதத்தின் பாற்பட்டது. இது தமிழர்களதும் தமிழர்களை ஆதரிக்கும் நபர்களதும் இரத்தத்தை உறிஞ்சும் கொலை வெறி கொண்டது.'

இப்போது சொல்லுங்கள்

சந்திரிகா சமாதானத்தின் தலைவியா?

சந்திரிகா அரசு சமாதானத்துக்கான அரசா?

மனித உரிமைகளை மதிக்கும் அரசா?

இனவாதம் ஒழிந்து விட்டதா?

இனவாதத்தை ஒழித்துவிட்டார்களா?

இப்போதும் ஓம்! என்று பதில் சொல்லக் கூடிய ஒரேயொருவர் லக்ஷ்மன் கதிர்காமர் மட்டுமே!





## சிவத்தம்பியும் புலியாம்!

"யாழ்ப்பாணத்தைப் படையினர் கைப்பற்றியதும் அதனைக் கொண்டாட சகல மக்களுக்கும் உரிமை இருக்கிறது. ஆனால் அவர்களது கொண்டாட்டம் அப்பாவித் தமிழர்களைத் துன்புறுத்துவதாக இருக்கக் கூடாது. அவ்வாறு துன்புறுத்துபவர்கள் கைது செய்யப்பட்டு பலாலிக்கு அனுப்பப்படுகிறார்கள். அங்கு ஒருவார காலப் பயிற்சியின் பின் அவர்கள் யுத்த முனைக்கு அனுப்பப்படுவார்கள்" என்று அறிவித்திருக்கிறார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்ர ரத்வத்தை.

ஜனாதிபதியும் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதை அனுமதியோம் என்று கூறியதோடு கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் கொட்டக தெனியாவையும் இடமாற்றம் செய்துள்ளார்.

அமைச்சர் தொண்டமானோ அரசின் இந்த நடவடிக்கையை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் 'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவது' என்கிற பழமொழியை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறதல்லவா?

'சமாதானமின்றேல் யுத்தமல்ல மீண்டும் சமாதானமே' என்ற கோஷத்துடன் வாக்குகளைப் பொறுக்கிக் கொண்ட அரசு, தன்னுடைய தீர்வுத் திட்டத்தைக் கிடப்பில் போட்டு விட்டு தமிழ் மக்களுக்கெதிரான யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டதும், இந்த யுத்தத்தை மக்கள் மயப்படுத்துவதற்காக வெண்தாமரை இயக்கத்தை தொகுதி தோறும் ஆரம்பித்து வைத்ததும், போதாதற்கு பல இனங்களும் வாழும் கொழும்பு நகரில் சிங்கள மக்களை மட்டுமே கொண்ட விழிப்புக் குழுக்களை அமைத்ததும் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர் யுவதிகளை கார்ரணமுமின்றி கைது செய்ததும் என தமிழர்களுக்கெதிரான இனவாதப் போக்கு வளர்வதற்கு எல்லா உதவிகளையும் சமாதானத்தின் பேரால் வழங்கிய அரசு இப்போது தமிழர்களுக்கு ஊறுவிளைவிப்பவர்களை யுத்தமனைக்கு அனுப்பப் போவதாக சரடு விடுகிறது.

அரசினால் திட்டமிட்டு வளர்க்கப்பட்ட இந்த இனவாத அலை அரச நிறுவனங்களில் கடமையாற்றும் தமிழர்களையும் விட்டு வைக்கவில்லை. மகரகம தேசிய கல்வி நிறுவனத்தில் கடமையாற்றி வந்த பேராசிரியர் சிவத்தம்பியை பாதுகாப்பு காரணங்களுக்காக நிறுவனத்துக்கு வரவேண்டாம் எனப் பணித்திருக்கிறது அங்குள்ள நிர்வாகம்.

பாதுகாப்பைக் காரணம் காட்டி திறந்த பல்கலைக்கழகத்திலுள்ள தமிழ் விரிவுரையாளர்களையும் வெளியேற்றிவிட வேண்டும் என்கிற அபிப்பிராயமும் நிலவுவதாக அங்கு கடமை புரியும் விரிவுரையாளர் ஒருவர் தெரிவிக்கிறார்.

தரப்படுத்தலை அமுலுக்குக் கொண்டு வந்தது இதே கட்சியின் அரசாங்கம் தான் என்பதை நினைவில் கொண்டால், உத்தியோக பூர்வமற்ற முறையில் அரச அலுவலகங்களிலிருந்து தமிழர்களை வெளியேற்றும் ஒரு இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையாக இதனைக் கொள்ளலாம் என்றே தோன்றகிறது.

இவ்வளவிற்கும் பிறகும், அரசாங்கத்தின் மேற்குறித்த அறிக்கையை நம்பி வேண்டுமானால் கொழும்பில் மடம் கட்டியிருக்கும் தமிழ் கட்சிகளும் ஒரு சில 'சமாதான விரும்பிகளும் அரசின் கருணையை நெஞ்சுருகி மகிழ்ந்து வரவேற்று அறிக்கை விடலாம். ஆனால் மக்கள் ஏமாந்து விடப் போவதில்லை.

பக்சமன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## சொல்வதைத் தவிர வேறு வழியில்லை



நவம்பர் மாதம் 2ம் திகதி வியாழன் 1995

கிழக்கில் குறிப்பாக அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் கிராமங்களின் அனைத்து அலுவல்களும் ஸ்தம்பித்துப் போயின; வர்த்தக நிலையங்களை மூடுமாறும்; அரசாங்க அலுவலகங்களை மூடுமாறும் - முஸ்லிம் காங்கிரஸ் தொண்டர்கள் ஒலிபெருக்கிகள் மூலம் வியாழன் நள்ளிரவுக்கு முதல் உத்தரவு போடத் தொடங்கினர்.

இதற்காக அவர்கள் சொன்ன காரணங்கள். அவர்களின் வார்க்கையில் சொல்வகானால் ரவு தெரிவித்து கடைகளை மூட வைப்பதில் அரசாங்கத்தின் மீது தங்களது விசுவாசத்தை தெரிவித்தனர். கல்முனைக் குடியல் ஐ.தே.கவுக்கு எதிராகவும் ஏசி.எஸ்.ஹமிதுக்கு எதிராகவும்; ஐ.தேவில் இருக்கும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் கோஷங்கள் எழுதப்பட்டன. ஈற்றில் ஏ.சி. எஸ். ஹமிதின் கொடும்பாவி தீயில் எரிந்து கரித்து வீழ்ந்தது.(ரூபவாஹினியில் பார்த்திருப்பீர்கள்) முஸ்லிம் காங்கிரஸ் தொண்டர்கள் திருப்தியுடன் மூச்சு விட்டனர். இனவாதிகளுக்கு அது பலத்த அடிதான் என இவர்கள் பிதற்றித் திரிந்தனர்.

# அமைச்சர் அஷ்ரப்பும் அலிசாகிர் மௌலானாவும்

இதுதான். ''முஸ்லிம் சமூகத்தின் அரசியல் வெற்றியை பொறுக்கமுடியாத கபட நோக்கம் கொண்ட சக்திகள் எமது தலைவரை வீழ்த்துவதன் ஊடாக; முஸ்லிம் சமூகத்தை தோற்கடிக்கப் பார்க்கிறார்கள். அமைச்சர் அஷ்ரஃப், முஸ்லிம் என்பதற்காகத்தான் இனவாதிகள் அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகிறார்கள். ஆகவே இனவாதிகளுக்கெதிராகவும் நமது தலைவர் அஷ்ரஃப்புக்கு ஆதரவாகவும் கிழக்கு வாழ் அனைத்து முஸ்லிம்களும் தங்களது பூரண எதிர்ப்பை தெரிவிப்பதன் ஊடாக அஷ்ரஃப்பின் கரங்களையும் முஸ்லிம் சமூகத்தின் எழுச்சியையும் பலப்படுத்துவோம்'' என்றார்கள்.

விடிந்தது; முஸ்லிம் காங்கிரஸின் வேண்டுதலின்பேரில் பெருமளவு வர்த்தக நிலையங்களும் அரசாங்க அலுவலகங்களும் மூடப்பட்டுக்கிடந்தன. நாங்கள் கடைகளைத் திறப்போம்! வழமைபோல் அலுவலகங்களுக்குச் செல்வோம் என இருந்த முஸ்லிம்கள் நவம்பர் 02ம் திகதி கடைகளைத் திறந்தார்கள்; அலுவலகங்களுக்குச் சென்றார்கள். அஷ்ரஃப்புக்கு ஆதரவு தெரிவித்து ஒரு கூட்டமும் எதிப்புத் தெரிவித்து மற்றொரு கூட்டமுமாக ஒவ்வொரு ஊரும் பிரிந்து கிடந்தன. திறந்த கடைகளையும் அலுவலகங்களையும் மூடிவிடுமாறு முஸ்லிம் காங்கிரஸ் தொண்டர்கள் சமாதானமாகவும் எச்சரிக்கையாகவும் கூறிக்கொண்டிருந்தனர். கடைகள் மூடியபாடில்லை. எப்படியாவது மூட வைப்பதன் ஊடாக இனவதிகளுக்கு(?) தமது எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்பதில் முஸ்லிம் காங்கிரஸ் தொண்டர்களும் உள்ளூர்த் தலைவர்களும் தீவிரமாய் இருந்தனர். அதன்படி ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலிருந்தும் பொலிசார் வந்து அஷ்ரஃப்புக்கு ஆதயார் இனவாதிகள்? எது இனவாதம்? எமது கரங்கள் சுத்தமானதா? என்பது பற்றியும் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம். நமது தலைவரின் பாத்திரமும் அதன் செயற்பாடுகளும் சரிதானா என்பது பற்றியும் இவர்களுக்குக் கேள்விகள் இல்லை.

அதே நேரம்; காலி துறைமுகம் தொடர்பான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு உட்பட்டுக் கொண்டிருந்தது. இவ்விவாதத்தில் மட்டக்களப்பு பாராளுமன்ற பிரதிநிதி அலிசாஹிர் மௌலானா பேசினார். இவரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மை முஸ்லிம் வாக்காளர்களினால்தான் தெரிவு செய்யப்பட்டார். இவரின் பேச்சு; முஸ்லிம் சமூகத்தைச் சிந்திக்க சொல்கிறது; அஷ்ரஃப்பையும் முஸ்லிம் காங்கிரசையும் விசாரணைக்குட் படுத்துகிறது. இவரின் இப் பேச்சை நடுநிலை நின்று சிந்திப்பவர்கள் உதாசீனப்படுத்திவிட முடியாது!

அலிசாகிர் மௌலானாவின் பேச்சைப்பற்றி சொல்வதற்கு முன்; அலிசாகிர் மௌலானா அமைச்சர் அஷ்ரஃப் சம்பந்தமாக ஒரு விடயத்தை சொல்லித்தான் ஆக வேண்டும்! அது 1994 பெப்ரவரி உள்ளூராட்சி தேர்தல்கள் கிழக்கில் சூடுபிடித்திருந்த காலம். கிழக்கின் அனைத்து முஸ்லிம் பிரதேச சபைகளையும் முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றியே தீரும் என சூளுரைத்திருந்த காலம். ஏறாவூரில் முஸ்லிம் காங்கிரஸ் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அஷ்ரஃப் மேடையில் வீற்றிருக்கிறார். அஷ்ரஃப்பின் காதுக்குள் சொல்லப் பட்டிருக்க வேண்டும்! ''சேர் ஏறாவூர்ப் பிரதேச சபையில் நாம் தோற்று விடுவோம்'' என்று - தனது இறுதி அங்கவஸ்திரத்தை எடுத்துக் கொண்டு ஒலிவாங்கியின் முன் அஷ்ரஃப் தோன்றுகிறார்.

''முஸ்லிம் சகோதரர்களே! அலிசாகிர் மௌலானாவிடம் நீங்கள் இந்த பிரதேச சபையை விட்டுவிடுவீர்களேயானால், இந்த ஏறாவூரில் இருக்கும் அனைத்துப் பள்ளிகளையும் தேவாலயங்களாக மாற்றிவிடுவார். உங்கள் அனைவரையும் கிறிஸ்தவர்களாக மாற நிர்ப்பந்திப்பார். இதற்கு நீங்கள் சம்மதமா? சம்மதமெனில் அலிசாஹிர் மௌலானாவிற்கு வாக்களியுங்கள். நான் அல்லாஹ்வின் பெயரால் அல்குர்ஆனின் பெயரால் கேட்கிறேன். இங்கு நடக்கப் போகும் அநியாயத்தை தடுத்து நிறுத்துங்கள் என்றார். அஷ்ரஃபால் தடுத்து நிறுத்த முடியவில்லை என்பது தேர்தல் முடிவு வந்தவுடன் தெரிந்த விடயமாயிற்று! அலிசாஹிர் மௌலானா (சுயேட்சைக் குழு) ஏறாவூர்ப் பிரதேச சபையின் முஸ்லிம்களின் ஏகோபித்த ஆதரவுடன் தவிசாளர் ஆனார்.

அந்த அலிசாஹிர் மௌலானா இப்போது அம் முஸ்லிம்களின் வாக்கினைப் பெற்று பாராளுமன்றத்திற்கும் தெரிவாகி அஷ்ரஃப் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பேசினார். அப்பேச்சின் முக்கிய பகுதிகள் உங்கள் கவனத்திற்காக... மட்டுமல்ல சிந்தனைக்காகவும்தான்!

''அமைச்சர் அஷ்ரஃப் ஒரு சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காகத்தான் அவர் மீது இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுவதாகப் புரளியைக்கிளப்பி விட்டிருக்கிறார்கள். எதையுமே இன ரீதியில் பார்ப்பதிலும் எதற்குமே இனவாத அர்த்தத்தைக்கொடுப்பதிலும் நிபுணர்களான் சிறுபான்மை இனவாதிகளும் நம் நாட்டில் இருக்கின்றார்கள் என்பது வெளிப்படையான விஷயம்தான். நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ள அமைச்சர் ஒரு முஸ்லிம் அமைச்சர் என சொல்லிக்கொள்ளப்படுபவர்......

முஸ்லிம் மக்களிடம் நான் கேட்கவிரும்புவதெல்லாம் ஒன்றுதான் முஸ்லிம் அமைச்சர் என்பதற்காக ஒருவர் இந்த தேசத்தின் சொத்தைச் சுரண்டலாமா? முஸ்லிம் அமைச்சர் என்பதற்காக ஒருவர் லஞ்சம் வாங்கலாமா? மலேசியா வங்கியொன்றில் கறுப்பு நோட்டுக்களை சேர்த்துவைக்கலாமா? இலஞ்சப்பணத்தைக்கொண்டு லண்டனில் வீடு வேண்டலாமா? அதைப்பற்றி விசாரித்தால் தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு அரசாங்கத்தை கவிழ்த்து விடுவதாகப் பயமுறுத்தலாமா?......

.....உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி ஓரிரவேனும் நிம்மதியாக உறங்க முடியாத இலட்சக்கணக்கான அகதிகளின் பேரில் கேட்கிறேன். அவர்கள் வயிற்றில் பற்றிஎரியும் பசி நெருப்பை அணைப்பதற்குப் பதிலாக - தனது படாடோபமான வாழ்க்கைக்காக இந்த நாட்டை சூறையாடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர் எச் சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் தண்டிக்கப் படவேண்டியவர். அவரது கொள்கைகள் பகிரங்கப்படுத்தப்படவேண்டும். அவரது போலி வேஷங்கள் உரித்தெரியப்பட வேண்டும்.

....இன்று அமைச்சர் அஷ்ரஃப் மீது கொண்டுவரப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் எவ்வளவு ஆதாரபூர்வமானது என்பதும் ஆணித்தரமானது என்பதும் நாடறிந்த உண்மை. அமைச்சர் அஷ்ரஃப் அரசாங்கத்தின் பங்காளி என்பதால் அரசாங்கப் பலத்தைக் கொண்டு இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பது சுலபமான விடயம்! வெற்றி தோல்வியைப்பற்றிய விடயமல்லவா இது!

...இன்று உங்கள் கட்சியில் பங்காளியான ஒரு அமைச்சர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ''உண்மை இருக்கிறதா? நியாயம்தானா? என்று கேள்விகேட்டுக்கொள்ள வேண்டும். இந்தச் சபையில் இருந்து இந்த நாட்டு முஸ்லிம்களுக்கும் இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ் மக்களுக்கும் இந்த உலகிலுள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் பகிரங்கமான தெளிவான குரலில் உரத்துச் சொல்கிறேன். அமைச்சர் அஷ்ரஃப் எந்த நம்பிக்கைக்கும் பாத்திரமானவர் அல்ல, அவர்மீது கொண்டுவரப்படும் எல்லா நியாயமான நம்பிக்கையில்லாப் பிரேரணைகளுக்கும் எனது ஆதரவு நிச்சயமாக உண்டு''.....

(ஹன்சார்ட் - 1995 நவம்பர் 02)

உண்மைகள் என்பது ஒருவனுடைய பொக்கற்றுகளிலிருந்து அல்லது ஒரு கட்சி வாயிலிருந்து மட்டும்தான் வரும் என்பதில்லை. இப்படி எதிர்பார்ப்பது முஸ்லிம் சமூகத்திற்கு நலமாகவும் ஆகாது! அலிசாஹிர் மௌலானா குறிப்பிட்டுள்ளவற்றில் உள்ள உண்மைகளை மட்டும் ஏன் நாம் பரிசீலனைக்குட் படுத்த முடியாது? அஷ்ரஃப் மட்டும் முஸ்லிம் சமூகத்தை பொறுத்தவரை உண்மையானவர் என்றும் அலிசாஹிர் மௌலானா போன்றவர்கள் பொய்யாளிகள் என எப்போது முஸ்லிம் சமூகம் முடிவுக்கு வந்தது? அரசியலுக்காக எதையும் செய்யலாம். என்னமும் சொல்லலாம் என்றால் எம்.எச்.முகம்மதுக்கும், அஷ்ரஃபுக்கும் வித்தியாசமில்லையே!

எதிரி எனும்போதும் அவனது கருத்துக்களை நாம் மறுபரிசீலனை செய்யாது உதறிவிட்டு, குருட்டு விசுவாசத்தில் தலையாட்டும் ''ஆமாம் சாமி''களாக இருப்பது முஸ்லிம் சமூகத்திற்கு ஆரோக்கியமானதா?

ஐ.தே.வில் இருப்பவர்கள் மட்டும்தானா இனவாதிகள்? பொதுஜன முன்னணியில் இனவாதிகள் இல்லையா?

இவைகளைப்பற்றி நாம் சிந்தித்துப்பார்த்திருக்கிறோமா?

முஸ்லிம் சமூகமே சிந்தி!

— அபூநிஹால் —

# 2 மணி நேரம் — 2 00 ரூபா: நன்றி மறவா யாழ் முஸ்லிம்கள்

1990ம் வருடம் ஐப்பசித் திங்கள் இருபத்தொன்பதாம் நாள் செவ்வாய்க்கிழமை...

அந்த நாள் யாம் முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் ஓர் இருள் படிந்த நாள்! சுமார் 14 நூற்றாண்டு காலமாக தமிழ் மக்களுடன் அந்நியோன்யமாக வாழ்ந்த எங்களை எமது தாயகத்தை விட்டு விரட்டியநாள்! எமது பிள்ளைச் செல்வங்களுக்கு அடுத்ததாக யாம் நேசித்த எமது இல்லங்களை விட்டு துரத்திய நாள்! இளம் வயதிலிருந்து வெயில், மழை, பனி பாராது கஷ்டப்பட்டு தேடிய தேட்டங்கள் எல்லாம் சூறையாடப்பட்டு எமது சொந்த தாயக மண்ணிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட நாள்!

அன்று காலை சுமார் 9மணியளவில் புலிகளினால் ஒலிபெருக்கி மூலம், ஒஸ்மானியாக் கல்லூரி-ஜின்னா மைதானத்திற்கு சகலரும் அழைக்கப்பட்டனர். எதற்காக அழைக்கப்பட்டோம் என்பது எவருக்கும் தெரியாது. அதே வேளையில் மன்னார், முல்லைத்தீவு, நாச்சிக்குடா, சாவகச்சேரி போன்ற இடங்களில் உள்ள முஸ்லிம்கள் இரண்டு வார கால, ஒருவார கால அவகாசம் கொடுக்கப்பட்டு வெளியேறி இருந்தனர். அவ்வாறு இருந்தும் கூட நாம் நினைக்கவில்லை எங்களுக்கு இப்படியொரு அவலநிலை ஏற்படுமென்று. ஏனெனில், ''குற்றஞ் செய்த மனம் அல்லவா குறுகுறுக்கும்'' யாழ் முஸ்லிம்கள் எந்தக் காலத்திலும் எந்தவொரு தமிழ் இயக்கங்களுக்கோ (ஒரு கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் 33 இயக்கங்கள் இருந்தன. சகல இயக்கங்களின் பெயர்களும் யாழ் நவீன சந்தைச் சுவர்களில் எழுதப்பட்டிருந்தமை ஞாபகத்திற்கு வரலாம்.)அல்லது ஸ்ரீ லங்கா பாதுகாப்புப் படையினருக்கோ அன்றி இந்திய அமைதிகாக்கும் படையினருக்கோ விரோதமாக நடந்தவர்கள் அல்லர். இவ்வாறு கூறுவதன் மூலம் வடபகுதியில் பிற இடங்களில் வாழ்ந்த முஸ்லிம் சகோதரர்கள் தவறிழைத்தார்கள் என யாரும் தப்புக்கணக்கு போடவேண்டாம். யாழ் முஸ்லிம்களின் நிலையை மட்டும் தான் நான் இங்கு எடுத்தியம்ப விளைகின்றேன்.

அவர்களது விருப்பத்திற்கு, முயற்சிகளுக்கு இலட்சியங்களுக்கு தடையாக இருந்த தங்களைக் காட்டிக்கொடுத்தார்களென்று எத்தனையோ தமிழ் இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர்கள் குற்றஞ் சாட்டப்பட்டு மரண தண்டனைக்காளாகினர். ஆனால் ஒரு முஸ்லிம் கூட அப்படியொரு தண்டனையைப் பெறவில்லை. ஏன்? நாங்கள் எவரும் அவர்களைக்காட்டிக்கொடுக்கவுமில்லை. தில்லை. இதை யாழ மககள நனகறிவா.

எனவேதான் அவ்வாறு ஒலிபெருக்கி மூலம் அழைக்கப்பட்டு ஜின்னா மைதானதுக்குச் செல்லும் போதுகூட எங்களில் அநேகர் ''புலிகள் எங்களுக்கு ஏதோ அறிவுரை கூறி எங்களை எந்த வித பதற்றமும் அடையாமல் அமைதியாக இருந்த இடங்களில் இருக்குமாறு கூறப்போகிறார்கள்'' என்றுதான் எண்ணினோம். ஆனால் நடந்ததோ வேறு புலிகள் உறுப்பினரான ஆஞ்சநேயர் (தற்போது அவர் பெயர் இளம் பருதி) அங்கு எங்கள் முன்னிலையில் உரையாற்றும் போது ''நீங்கள் எல்லோரும் இன்னும் 2 மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும். போகும் போது உங்களிடம் இருக்கும் நகைகளையும், 20000/= (இருபதினாயிரம்) ரூபாவும் கையில் கொண்டுச் செல்லக்கூடிய பொருட்களையும் எடுத்துச் செல்லாம்.'' என்று கூறினார். இதைக்கேள்வியுற்றதும் நாங்கள் அவர்கள் மேல் வைத்திருந்த நம்பிக்கையெல்லாம் தவிடுபொடியாகியது. ''நாங்கள் செய்த குற்றமென்ன? எதற்காக வெளியேற வேண்டும்''? என்று எங்களில் சிலர் கேட்டதற்கு, ''யாரும் எந்தக் கேள்வியும் கேட்க வேண்டாம், உங்களை உயிருடன் அனுப்புவதே மேல். இது மேலிடத்து உத்தரவு.'' என்று கூறினார். அதற்கு மேலும் அங்கு நிற்க விரும்பாத நாங்கள் , வீடுகளுக்கு வந்து கையில் அகப்பட்ட பொருட்களுடன் புலிகளினால் குறிப்பிடப்பட்ட சந்திகளுக்கு வந்து சேர்ந்தோம். அவ்விடங்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புலிகள் எவரும் இருக்கவில்லை.

அங்கு ஆண்கள் ஆண் புலிகளினாலும், பெண்கள் பெண்புலிகளினாலும் சோதனையிடப்பட்டனர். அப்போது அணிந்திருந்த நகைகள், கைக்கடிகாரங்கள், பணம், புதிய ஆடைகள் யாவும் பறிக்கப்பட்டு, ஆளுக்கு 200/= மட்டும் கொடுத்தனுப்பி வைக்கப்பட்டோம். தகப்பன் ஒரு பஸ்ஸிலும் தாய் ஒரு வேனிலும், பிள்ளைகள் ஒரு லொறியிலுமாகப் பயணம் செய்து மாலை 6மணியளவில் கேரதீவை வந்தடைந்தோம். (கடந்த சரிநிகரில் 24 மணிநேர அவகாசமும், 500/= பணமும் கொடுத்தனுப்பியதாக, தனக்கறிந்த செய்தியை ''பஞ்சமன்'' என்பவா தான எழுதிய ''தன்வினை தன்னைச் சுடும்'' என்னும் கட்டுரையில் எழுதியிருந்தார். அது தவறு. 2மணி நேர அவகாசமும், 200/=வும் என்பதே சரியாகும்) பின்பு எத்தனையோ சிரமங்களின் மத்தியில் 3 நாட்கள் உடுத்திய உடையுடன் உணவின்றி உறக்கமின்றி தென் பகுதி வந்து சேர்ந்தோம்.

நாங்கள் வெளியேற்றப்பட்டமைக்கு நாங்கள் முஸ்லிம்கள் என்ற காரணத்தைத் தவிர வேறு எந்தக் காரணமும் புலிகளினால் கூற

→15

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் (CMU-Ceylon mercantile Industries and general workers union) பொதுச் செயலாளர் பாலா தம்புவின் பேட்டி கீழே தரப்படுகிறது.
அண்மையில் பொ.ஐ.மு அரசாங்கம் தொழிலாளர் பிரகடனத்தை வெளியிட்ட அன்று தொழிற்சங்க சேவையைக் கௌரவிக்குமுகமாக பிரதி அமைச்சர் அலவி மௌலானா, அமைச்சர் தொண்டமான் உட்பட பாலாதம்பு அவர்களுக்கும் விருது வழங்கிய போது பாலாதம்பு அவர்கள் அதனை நிராகரித்திருந்தார்.
பாலாதம்பு அவர்கள் CMU வில் 1947 இலிருந்து பொதுச் செயலாளராக இருந்து வருகிறார். 125க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் இவரது தொழிற்சங்கத்தில் அங்கம் வகிக்கிறார்கள்.
இவர் ஒரு பிரசித்தி பெற்ற Criminal Lawyer ஆக இருந்த போதும் (1971 கிளர்ச்சியின் பின் சிறையிலிருந்த பல ஜே.வி.பி.யினரின் விடுதலைக்கான வழக்கில் கைதிகளுக்காக வாதாடியவர்) பின்னர் அத்தொழிலை கைவிட்டு முழுநேர தொழிற்சங்கவாதியானவர்.

*தொழிற்சங்கச் சேவைக்காக உங்களுக்கு வழங்கப்பட்ட விருதை நீங்கள் ஏன் நிராகரித்தீர்கள்?*

எல்லா அரசாங்கங்களின் போதும் எனது தொழிற்சங்க நடவடிக்கைகளை சுயேட்சையாகவே புரிந்திருக்கிறேன். எனவே எனது நடவடிக்கைகளுக்காக எந்த அரசாங்கமும் வழங்கும் விருதையும் நான் பெற விரும்பவில்லை.

*நீங்கள் உங்களுக்கு வழங்கவிருந்த விருதை நிராகரித்ததற்கு வேறும் சில காரணங்கள் இருக்கலாம் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது... அப்படி வேறேதேனும்...*

உண்மையில் அரசாங்கம் அவ்விருதை வழங்குவதன் மூலம் நானும் அவர்களுக்குப் பங்களித்திருந்தேன் என்பதைக் காட்டுவதற்காகவே செய்தது என நான் நினைக்கிறேன்.

தொழில் அமைச்சருக்கு விருதை என்னால் பெற முடியாது என்பதைத் தெரிவித்திருந்தேன் ஆனாலும் அவர், நாங்கள் அவருக்கு விருதைக் கொடுத்தே ஆக வேண்டும் என அறிக்கை விடுத்திருந்தார்.

*தற்போது வெளியிட்டிருக்கும் தொழிலாளர் பிரகடனம் பற்றி...*

அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர் முன்வைத்திருந்த தேர்தல் வாக்குறுதியில் இதுவும் ஒன்று பதவியேற்றதன் பின் அப்பொறுப்பு தொழிலமைச்சருக்கு வழங்கப்பட்டது. அவர் பிரகடனத்தை தயாரிப்பதற்காக தேசிய தொழிலாளர் ஆலோசனை சபை என்ற ஒன்றை உருவாக்கினார். அந்த கமிட்டியில் என்னையும் நியமித்திருந்தனர்.

நாங்கள் தெரிவித்த யோசனைகளை அரசாங்கம் ஏப்ரல் 25ம் திகதி அங்கீகரித்தது. நாங்கள் தெரிவித்த யோசனைகளில் தொழிற்சங்கம் அமைத்தல் தொடர்பான விடயத்தில் அரசாங்கம் ஆரம்பத்தில் தயக்கம் காட்டினாலும் இறுதியில் ஏற்றுக்கொண்டது.


அதன் பின்னர் சில வர்த்தக நிறுவனங்களும்; முதலாளித்துவ பிரிவினரும் ஜனாதிபதியைச் சந்தித்து பிரகடனம் பற்றி வெருண்டு போய் முறையிட்டனர். அவர்கள் முறையிட்டிருந்த விடயங்களில் முக்கியமானது தொழிற்சங்கம் அமைக்கும் சுதந்திரம் பற்றியது. இவர்களது சந்திப்பின் பின் ஒகஸ்ட் 23 அன்று ஜனாதிபதி எங்களுடன் கலந்துரையாடிய போது அவர்களது கோரிக்கை பற்றி கதைத்தார். எமது யோசனைகளில் எந்தத் திருத்தங்கள் மேற்கொள்வதாயிருந்தாலும் பிரகடனம் வெளியிடுவதில் பிரயோசனமில்லை என்பதையும் அப்படியே தொடர்வதாயிருந்தால் நாங்கள் அதனை எதிர்ப்பதாகவும் ஜனாதிபதிக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் ஒப்புக்கொண்டார்.

அதனை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டதன் பின்னர் அமைச்சரவையிலும் அங்கீகரிக்கப்பட்டு பின்னர் பிரகடனமாக வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து இனி முதலிடவிருக்கும் முதலீட்டாளர்களும்; முதலிட்டவர்களும் பயப்படுவார்கள் என்றும் தொழில் நிறுவனங்களில் குழப்பநிலை அதிகரிக்கும் என்றும் சில முதலாளித்துவ தரப்பினரால் பிரச்சாரம் செய்யப்பட்டது.

*சரி இனிமேலாவது சுதந்திர வர்த்தக வலையங்கள் போன்ற இடங்களிலும் தொழிற்சங்கம் அமைப்பதற்கு இயலுமா?*

சட்டப்படி முடியும். ஆனால் அதற்கான நிலைமைகள் அங்கில்லை. எனவே அதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவது அவசியம். அப்படி ஏற்காவிட்டால் போராடுவோம்.

*இது அரசாங்கத்தின் தொழிலாளர் பற்றிய கொள்கைப் பிரகடனம் மாத்திரமே என்றும் இது நடைமுறைக்கு வருவதானால் பாராளுமன்றத்தில் இது*



*தொடர்பான சட்டமுலம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் சொல்லப்படுகிறதே.*

ஆம், ஒன்றல்ல பல சட்டங்கள் கொண்டு வரவேண்டியிருக்கும். இருக்கின்ற சட்டங்களில் புதிய திருத்தச் சட்டங்கள் கொண்டு வரவேண்டியிருக்கும். உதாரணத்திற்கு தொழிற்சங்கச் சட்டம்; வெளிநாட்டு வேலைவாய்ப்பு; நிரந்தர அல்லது ஒப்பந்த அடிப்படையிலானவை; பெண்கள்; குழந்தைகள் தொடர்பானவை என்பது போன்ற சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரவேண்டியிருக்கும். உண்மைதான்; இது தொழிலாளர் பற்றிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் மாத்திரமே.

*அப்படியென்றால் இது சட்டமாக அமுலுக்கு வரும் வரை தொழிலாளர் காத்திருக்க வேண்டியது தானா?*

இல்லை, இவற்றை அரசாங்கம் சட்டமாக

## செவ்வி; என்.எஸ்.குமரன்

கொண்டு வருகிறதோ இல்லையோ இவை அரசாங்கம் ஏற்றுக் கொண்ட கொள்கைகள் என்பதைச் சுட்டிக்காட்டி முதலாளிகளை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். அந்தப் பிரகடனத்தின் மூலம் தொழிலாளர் வர்க்கம் பயன்பெறுவதற்கு கூடியளவு இடமிருக்கிறது. ஆனால் தொழிலாளர்கள் அமைப்பு ரீதியாக ஒன்றிணைய வேண்டும். அவை சும்மா கிடைக்காது. நாம் தான் எடுக்க வேண்டும்.

*இந்தப் பிரகடனம் தொழிலாளர்களின் தேவையை நிறைவு செய்யும் என்று நம்புகிறீர்களா?*

இது ஒரு பிரகடனம் மாத்திரமே. இத்தனை காலமும் எந்த அரசாங்கமும் இதனைச் செய்ய முன்வரவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி கூட இத்தனை காலம் தொழிலாளர்களின் உரிமை பற்றி இந்தளவாவது செய்ததில்லை. தற்போதைய அரசாங்கமே தொழிலாளர்களுக்கு இந்த இந்த உரிமைகள் இருக்கிறது என்பதைக் கூறியிருக்கிறது.

*தற்போதைய அரசாங்கம் உறுதியாக கடைப்பிடிப்பதாக தீர்மானித்திருக்கிற திறந்த பொருளாதாரக் கொள்கையும் அதே அரசாங்கத்தின் இந்த தொழிலாளர் பிரகடனமும் எதிரெதிரான விடயங்களல்லவா? இது தொழிலாளர்களது உரிமையைச் சாத்தியமாக்குமா?*

இது ஒன்றுக்கொன்று எதிரானது என நான் கருதவில்லை. சில நேரங்களில் தொழிலாளர்களின் உரிமைகள் திறந்த பொருளாதாரக் கொள்கையினால் மட்டுப்படுத்தப்படுமானால் இப்போதைய பிரகடனம் தொழிலாளர்களை பாதுகாக்கும்.

*ஆனால் திறந்த பொருளாதாரக் கொள்கையா? அல்லது தொழிலாளர்களது நலனா? எனும் கேள்வி எழும் போது அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையையே முற்தேர்வு செய்யும் என்ற நம்பிக்கை பரவலாக இருக்கிறதே?*

அப்படியொரு கேள்வி இருக்கிறது தான். ஆனால் தொழிலாளர்கள் பலம் பொருந்தியவர்களாக இருந்தால் அதனைத் தோற்கடிக்கலாமே. உதாரணத்திற்கு தொழிலாளர் பிரகடனத்திற்கு எதிராக முதலாளித்துவ தரப்பினர் ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்திருந்த போதும். தொழிற்சங்க பிரதிநிதிகளான எங்களது பலத்தின் காரணமாக அவை நிராகரிக்கப்பட்டன.

அதே போல 1992 செப்டம்பரில் துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தமொன்றை நடத்திய போது பிரேமதாசவின் மோசமான அவசரகாலச் சட்டம் அமுலிலிருந்தது. அப்படியிருந்தும் நாங்கள் அந்தப் போராட்டத்தின் இறுதியில் தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவைப் பெற்றுக் கொடுத்தோம். அதன் அர்த்தம் பிரேமதாச அவர்கள் தொழிலாளர்களின் பக்கத்துக்கு சார்ந்தார் என்பதல்ல. துறைமுகத் தொழிலாளர்கள் அமைப்பு ரீதியாக அணிதிரண்டு தங்கள் பலத்தை பிரயோகித்திருந்தார்கள் என்பதே.

*நீங்கள் கூறுவதைப் பார்த்தால் அரசாங்கத்திற்கு சவால் விடக்கூடிய அளவிற்கு தொழிலாளர்கள் ஓரணி திரண்டு பலம் பொருந்தியிருக்கிறார்கள் என்று கொள்ளலாமா?*

தொழிலாளர்களுக்கு எதிரான சூழல் நிலவும் போதெல்லாம் அவர்கள் தங்களது பலத்தைக் காட்டித்தான் ஆகவேண்டும்.

> “எந்த அரசாங்கம் வழங்கும் விருதையும் நான் பெற விரும்பவில்லை!”
> — பாலாதம்பு

*இல்லை; அன்றாடம்; தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளின் போதெல்லாம் முதலாளித்துவ அரசுடன் பேரம் பேசிக் கொள்வதன் மூலம் தொழிலாளர்களின் பூரண உரிமையை பெற்றுவிட முடியும் என நீங்கள் கருதுகிறீர்களா?*

அதற்கான பதிலை நாம் ஒரு நாட்டைமட்டும் வைத்துப் பார்க்க முடியாது. சர்வதேச நிலைமைகளும் அதற்குச் சாதகமாக இருக்க வேண்டும். சர்வதேச முதலாளித்துவ பொருளாதார கூழலை கருத்திற் கொண்டே இலங்கையிலும் செயற்படமுடியும். நாங்கள் சர்வதேச நிறுவனங்களுக்கும் சென்று இவற்றை முன்வைக்க வேண்டும். நடைமுறையில் இருக்கின்ற முதலாளித்துவ சூழலுக்குள் எதையாவது செய்ய வேண்டும். சிலர் புரட்சி பற்றி பெரிதாகக் கதைக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அவ்வாறு எதுவும் இங்கில்லை.

நாங்கள் தொழிலாளர்களுக்கு எந்த நேரமும் கூறுவது என்னவென்றால் நீங்கள் எங்கிருந்த போதும் உங்கள் பலத்தைக் காட்டக் கூடிய இடம் நீங்கள் தொழில் செய்யுமிடமே. அங்கு காட்டுங்கள் உங்கள் பலத்தை, என்றே.

*இதற்கு முன்னரும் தொழிலாளர் சாசனம் ஒன்று வெளியிடப்படவிருந்தது என்று கூறப்படுகிறதே...*

ஆம்; 1970ம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கம் தொழிலாளர் சாசனமொன்றை வெளியிடுவதற்காக தயாரிப்புக் குழுவொன்றை அமைத்தது. அக்குழுவில் அரசாங்கம் தங்கள் தொழிற்சங்கங்களை மாத்திரமே நியமித்திருந்தது. அதாவது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி போன்றவற்றை. இறுதியில் அந்த உத்தேச பிரகடனத்தை வெளியிடவுமில்லை. ●



உப்பு விளையும்
வெளியின் மேலாய்
வரண்டு நீளும்
வழுக்கையாற்றின் மேலாய்
நிசப்தம் விரவ நீர் ஒழுகும்
பாலங்களின் மேலாய்
கடந்து சென்று
மேற்கில் வீழும் பிறை:
இனம் தெரியாப் பறவைகளின்
அதட்டல்: சிறகடிப்பு.
காற்றில் கரையும்
தேவாலய மணி ஓசை
இன்னும் பிறவுமாய்
பொன் ஒளி சிந்த
விடியும் ஒரு பொழுது
இன்னமும்
கடந்த துர் இரவின்
தொடர்ச்சியாய்..................
கதவுகளை இறுகச் சாத்தி
காதுகள் கூராக்கி
நகங்கள் கதவுகளை
பிறாண்டும் வரை
விழிகள் செருக
ஒரு காத்திருப்பு.

புளியமிலை உதிர்த்தும்
மெல்லிய புதுக்காற்றையும்
பஞ்சு நுரை தள்ளும்
கண்ணாடி மணல் கடற்பரப்பையும்
-வழமை போல-.
தனிமையில்
சுருங்கிய மனம் கொண்டு
எப்படி நுகர்வேன்?

இதயச் சிம்பிகளை
நகங்கள் பிறாண்டும்
கணம் இது!

எழுந்து செல்கிறேன்
கதவுகளை அகல
திறப்பதற்கு.
இதயச் சிம்பியில்
இருந்து எழும்
இனம் புரியா வலுவில்
எழுந்து செல்கின்றேன்.

-பா. அன்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தொழிலாளர் சாசனமும் சுதந்திர வர்த்தக வலயமும்

## அன்ரன் மார்கஸ்

**இணைச் செயலாளர் கைத்தொழில் போக்குவரத்துப் பொதுத் தொழிலாளர் சங்கம்**

முன்பு பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு (G.C.E.C.) என அழைக்கப்பட்ட, தற்போதைய இலங்கை முதலீட்டுச் சபை (B.O.I.) யின் அதிகாரப் பிரதேசம் கொழும்பு நகரின் வடக்கு நோக்கி நீர்கொழும்பு வீதியினூடாக ஏறக்குறைய 15 மைல்கள் நீளமான பெரிய பிரதேசமாகும். இப்பாரியப் பிரதேசத்தினுள் கட்டுநாயக்கா ஏற்றுமதி செயற்பாட்டு வலையம் என்றழைக்கப்படும் குறிப்பிட்ட பகுதியொன்று அமைந்துள்ளது. இது 190 ஹெக்ரயர் விஸ்தீரணமானது இது. மின்சாரம் பாய்ச்சப்பட்ட முட் கம்பியினால் சுற்றிவேலியிடப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கும், அலுவலர்களிற்கும் இவ் வலயத்தினுள் பிரவேசிப்பது வரையறுக்கப்பட்டுள்ளது.

சில வேளைகளில் தொழில் திணைக்கள அதிகாரிகள் கூட முறைப்பாடுகளை விசாரிக்க அப்பகுதியினுள் பிரவேசிக்க அனுமதி மறுக்கப்படுகிறது.

அவ்வாறான இரண்டாவது வலயமொன்று கொழும்பிற்கு வட-கிழக்காக அண்ணளவாக 24கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பியகமவில் அமைக்கப்பட்டது. அது 180 ஹெக்ரயர் விஸ்தீரணமானது. மூன்றாவது வலயம் கொழும்பிற்கு தென் முகமாக அண்ணளவாக 130 கிலோ மீற்றர் தூரத்தில், கரையோர மாகாண நகரான காலிக்கு அருகிலுள்ள கொக்கலையில் அமைக்கப்பட்டது. அதன் விஸ்தீரணம் 80 ஹெக்ரயர் ஆகும்.

1992ம் ஆண்டில் வெளிநாட்டு முதலீட்டைக் கவருமுகமாக அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச முழு நாடுமே ஒரு சுதந்திர வர்த்தக வலையமாகக் கருதப்பட வேண்டுமெனப் பிரகடனப்படுத்தி, ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஒரு ஆடைத் தொழிற்சாலையை நிறுவத் தொடங்கியதனூடாக, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு எல்லாவித சலுகைகளையும் வழங்கினார்.

**தொழிலாளர்களின் எண்ணிக்கை:**

கட்டுநாயக்காவில் 52,000 தொழிலாளர்களும், பியகமவில் 20,6000 தொழிலாளர்களும், கொக்கலவில் 13,400 தொழிலாளர்களும் உள்ளனர். நாட்டிலுள்ள எல்லா ஆடைத்தொழிற்சாலைகளிலும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,50,000 ஆகும். இவ் வலயங்களிலும், நாட்டின் ஆடைத்தொழில் துறையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவர்களில் 90% இற்கும் அதிகமான தொழிலாளர்கள் பெண்கள் என்பது கவனிக்கப்படவேண்டிய அம்சமாகும்.

**தொழில்துறைகளின் தன்மை:**

தொழிற் துறைகளில் பெரும்பான்மையானவை ஆடைத்தொழிற்சாலைகள் அல்லது ஆடைத்தொழிலுடன் தொடர்பானவை. அவை உழைப்பைக்கோரி நிற்பவை. ஆடைத்தொழிற் துறையைவிட பின்வரும் துறைகளிலும் தொழிற்துறைகள் உள்ளன. தோட்டக்கலை, உணவு பதனிடுதல், புடவை, கணினி, நகை உற்பத்தி, மாணிக்க கல்பட்டை தீட்டுதல், இலெக்ரோனிக், இறப்பர்- சார்ந்த பொருட்கள், பொறியியல், மட்பாண்டமும், குளியலறைப் பொருட்களும், ஆழ்கடல் மீன்பிடி, செயற்கைப்பூக்கள், தோல் பொருட்கள் ஆகும்.

**முதலிடும் நாடுகள்:**

ஹொங்கொங், நோர்வே, பெல்ஜியம், தென் கொரியா, ஒல்லாந்து, தாய்லாந்து, பாகிஸ்தான், பிரித்தானியா, அவுஸ்திரேலியா, மேற்கு ஜேர்மனி, இந்தியா, ஸ்வீடன், அமெரிக்கா, கனடா, தாய்வான், சிங்கப்பூர், சுவிட்ஸ்லாந்து, லெபனான், ஐக்கிய அரபு இராச்சியங்கள், பஹ்ரெய்ன், அயர்லாந்து, ரஷ்யா, சீனா, குவைத், இத்தாலி, டென்மார்க் ஆகியன இங்கு குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலத் தரவுகளின்படி தென் கொரியாவே இலங்கையில் அதிகளவு முதலிட்டுள்ள நாடாகும்.

**தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம்:**

முதலீட்டாளர்களைக் கவருமுகமாக அரசாங்கம் தன்து பிரசுரங்களில், "குறைந்த ஊதியத்துடன் பிரதானமாக கல்வியறிவுள்ள இளம் யுவதிகள் நாட்டிலும் சுதந்திர வர்த்தக வலயத்தைச் சூழவுள்ள பகுதிகளிலும் கிடைப்பதாக" தெரிவித்துள்ளது. இந்த யுவதிகள் மிகத் தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து வந்து சுதந்திர வர்த்தக வலயத்தைச் சூழவுள்ள பகுதிகளிலும், தொழிற்சாலைகளுக்கு வெளியேயும் விடுதிகளிலும் வாழ்கின்றனர். சுற்றுப்புறச் சூழலிலுள்ள மக்கள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமது இருப்பிடங்களில் விடுதிகளை நடத்துகின்றனர். இப்பெண் தொழிலாளர்கள் நெருக்கமாக ஒன்று கூடிச் சிறிய அறைகளில், 10அல்லது; 12பேர் ஒரு அறையில்; 10X12அடியில் வாழ்கிறார்கள். சில அறைகள் கோழிக் கூடுகளை ஒத்ததாகும் சில விடுதிகளில் அறவே காற்று வசதிகள் இல்லை. சிலவற்றில் மின்சார வசதிகள் இல்லை. அவற்றில் சிலவற்றிற்கே குழாய் நீர் வசதிகள் உள்ளன. அவர்கள் அவற்றிலேயே வாழவும், சமைக்கவும், நித்திரை கொள்ளவும் வேண்டும். சில விடுதிகள் பெரிதானவையாதலால் 200 யுவதிகள் ஒன்றாக வாழ்கிறார்கள். அங்குள்ள ஒரு கிணற்றையும், மலசல கூடங்களையும் பகிர்ந்து கொள்கிறார்கள். இது அவர்களுடைய தேவைக்குப் போதுமானதல்ல. ஏதாவது தொழில் போராட்டங்கள் அவர்களது வேலைத்தளத்தில் நடக்கும் போது, விடுதி சொந்தக்காரர்கள் இந்த யுவதிகளது வாழ்க்கை மீது கட்டுப்பாடு விதிப்பதுடன் தொழில் வழங்குனரினதும், பொலிசாரினதும் தூண்டுதலின் பேரில் அவர்களை வேலைக்குத் திரும்பிச் செல்ல பலவந்தப்படுத்துவதும் உண்டு.

**தொழிலாளர்களின் பொதுத் தோற்றம்:**

இவ் இளம் பெண் தொழிலாளர்கள் 18முதல் 25வரை வயதுடையவர்களாவர். இந்த வயதிலேயே இலங்கையில் அநேக இளம் யுவதிகள் திருமணம் முடிப்பர். தற்போது இவ் யுவதிகள் இவ்வாறு வேலைக்கு வரக் காரணம் தமது எதிர்காலத்திற்குப் போதியளவு பணத்தைச் சேமிப்பதுடன், தமது சீதனப் பணத்தையும் சேர்ப்பதுமாகும். ஆனாலும் கிராமத்திலுள்ள தமது குடும்பத்தவர்களையும் கூட அவர்களே பராமரிக்க வேண்டியிருப்பதால் அவர்களுக்குக் கிடைக்கும் வருமானம் போதியனவாக இல்லை. அவர்கள் அநேகமாகத் தங்களது கையாலாகாத்தனத்தைப் பயன்படுத்தும் இளைஞர்களின் திட்டங்களுக்குள் பலியாவதே அவலமாகும். அவர்கள் அடிக்கடி பாலியல் வதைக்கு உட்படுத்தப்படுகின்றனர்; குறிப்பாக இரவு 10மணியளவில் வேலை முடிந்து வீடு திரும்புகையிலேயே இது நிகழ்கிறது. தமது வீடுகளிலிருந்து தொலைவில் அவர்கள் வாழ்வதால் அவர்களது நடத்தை பற்றி ஒரு கூடாத அபிப்பிராயம் நிலவும்.

இதன் பிரதிபலிப்பு பத்திரிகைகளில் வெளியாகும் மணமகள் தேவை என்கின்ற விளம்பரங்களில் வெளிப்படுகிறது. ஆண்களால கோரப்படும் இவ்விண்ணப்பங்களில் தாம் எதிர்ப்பார்க்கும் மணமகள் சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலை செய்யும் பெண்ணாக இருக்கக் கூடாது எனக் குறிப்படுகின்றனர். மறுபுறத்தில் தொழில் வழங்குனர்கள் திருமணமான பெண்களை வேலைக்கமர்த்தத் தயங்குவதுடன், இளம் யுவதிகள் திருமணம் செய்வதையும் தடைசெய்கின்றனர். அதையும் மீறி அவர்கள் திருமணம் செய்தால், அப்பெண்கள் கர்ப்பமுற்றவுடன் தங்களிடமிருந்து விடுவித்துக் கொள்வர். தொழிலாளர்கள் காதல் செய்வது தடைசெய்யப் பட்டுள்ளதெனவும் அவர்கள் திருமணம் செய்தால் முதல் இரு வருடங்களினுள் பிள்ளைப் களைப் பெற்றுக்கொள்ளக் கூடாதெனவும் தமது நியமனக் கடிதங்களில் தனிப்பட வலியுறுத்தியுள்ள தொழில் வழங்குனர்களை நாம் கண்டுள்ளோம்.

இலங்கை அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் கீழ் இரவு 10.00மணிக்குப் பின்பு பெண் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் முதலீட்டாளர்களின் அழுத்தம் காரணமாக, இவ்விதியை அரசாங்கம் தளர்த்தியுள்ளதுடன் பெண் தொழிலாளர்கள் தமது விருப்பத்திற்கும் மாறாக வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இரவு வேலைநேரம் பி.ப.10.00 மணிமுதல் மு.ப.6.00மணிவரையாகும். இது சில வேளைகளில் முன்னறிவித்தலின்றியும் செய்யுப்படுகிறது.

**தொழிற்சாங்கமயமாதல்**

தொழிற்சங்கமயமாதல் விடயமாகக் கவனமான அவதானிப்பொன்றின் தேவைகள் ஒரு முக்கிய அம்சமாகும். முதன் முதலாகப் பாளுமன்றத்தில் சுதந்திர வர்த்தக வலயத்தை நிறுவும் மசோதா முன் வைக்கப்பட்ட போது, சுதந்திர வர்த்தக வலயப்பகுதியினுள் எல்லாவித விதிகளும், தொழில், தொழிற் சங்கம் தொடர்பான சட்டங்களும் செல்லுபடியற்றவையென்று முன்மொழியப்பட்டது. ஆனால் எதிர்க்கட்சிகள் இம் மசோதாவிற்கு எதிராக அரசியலமைப்பு நீதிமன்றமான மீயுயர் நீதிமன்றத்தில், அவை அரசியலமைப்புக்கு முரணானவை என வாதிட்டன. மீயுயர் நீதிமன்றம் அவ்வாதத்திற்கு ஆதரவளித்ததால் அன்றைய அரசாங்கம் அம் மசோதாவை மீளப் பெற்றுகொண்டது. இன்றும் கூட எதிர்கால முதலீட்டாளர்களுக்குத் தகவல் வழங்கும் முதலீட்டாளர் சபையின் சிற்றேட்டில் தொழில் சட்டங்கள் சுதந்திர வர்த்தக வலயத்தினுள் செல்லுபடியானவை என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் ஐக்கிய தேசியக் கடசி நிர்வாகம், முதலீட்டாளர் சபை அதிகாரிகளினூடாகவும், பொலிஸ் பலத்தாலும் தொழிற் சங்கங்களை அமைக்க சிறு முயற்சியைத்தானும் மேற்கொள்ளும் தொழிலாளர்களை அச்சுறுத்தியது. சம்பள உயர்வு கோரியும், ஏனைய வசதிகளுக்கான போராட்டங்களையும் ஒழுங்கு செய்யும் தொழிலாளர்களுக்கு சலுகைகள் காட்டுவதனூடாக அதே தொழிலாளார்களைப் பாவித்து தமது நோக்கைப் பெறுகின்றனர்.

தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள், தமது தேர்தல் கூட்டங்களில், நாட்டின் எல்லாப் பாகங்களிலும், எல்லாச் சட்டங்களும் எது வித வேறுபாடுமின்றி அமுலிலிருக்கும் எனக் கூறிச் சுதந்திர வர்த்தக வலயத்தினுள் தொழிற்சங்கங்களை அமைப்பதை அனுமதிப்பதாக உறுதி கூறினர். ஆனால் போராட்டம் அதே விதத்திலேயே தொடர்வதுடன், தொழிலாளர்களும் அதே பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இரசாயனப் பொருட்களைப் பாவித்து அறுவைச் சிகிச்சைக் கையுறைகளை தயாரிக்கும் அவுஸ்திரேலிய நிறுவனமொன்றான அன்செல் லங்காவில் நடைபெற்ற தொழிற்சங்க விவகாரம் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். 1992ம் ஆண்டு தொழிற்சங்கமொன்று இத் தொழிற்சாலையில் அமைக்கப்பட்டது. ஆனால் அந் நிறுவனம், அத்தொழிற்சங்கத்தை அங்கீகரிக்க மறுத்துவிட்டது. தொழில் திணைக்களம் கூடத் தொழிலாளர் சார்பாகத் தலையிடவில்லை.

1994ம் ஆண்டு ஜூலைமாதம் தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும், நிறுவன முகாமைத்துவத்திலிருந்து எதுவித பலனும் ஏற்படாத நிலையில் விரக்தியடைந்த அத்தொழிலாளர்கள், தொழிற்சாலை வளவினுள்ளேயே முகாமைத்துவத்தைப் பணயமாக வைத்துத் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தொழிற்சாலையைத் தகர்க்கப் போவதாக அச்சுறுத்தினர்.

தந்திரோபாய நடவடிக்கையாக நிர்வாகம், தொழில் ஆணையாளர், அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர், முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் ஒருவர் ஆகியோர் முன்னிலையில் தொழிற்சாலைக்கு முன் வாசலில் வைத்து "தொழிலாளர்களைப் பழி வாங்காது, அவர்களது கோரிக்கைகளை அவர்களிளும் வழங்கு முகமாக அவற்றை நுணுகி ஆராய்வதாக" உடன்படிக்கையொன்றை தொழிலாளர்களுடன் கைச்சாத்திட்டது. ஆனால், முகாமைத்துவ அலுவலர்கள் விடுவிக்கப்பட்டவுடன் தொழிலாளர்கள் அவ்வளவை விட்டகன்றனர். 38 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு ஏனையவர்கள் பூட்டி வைக்கப்பட்டனர். வற்புறுத்தலின் கீழ் கைச்சாத்திடப்பட்டதால், முகாமைத்துவம், தாம் அவ் உடன்படிக்கைக்கு கௌரவம் அளிக்கத் தேவையில்லையெனக் கூறியது.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போதே இந் நிலைமை நிலவியது. 68 தொழிலாளர்களை விட ஏனைய அனைத்துத் தொழிலாளர்களும் திரும்பவும் வேலைக்கு எடுக்கப்பட்டனர். 68 தொழிலாளர்களை பற்றியும், ஏனைய கோரிக்கைகள் பற்றியும் நடுவரொருவரின் தீர்ப்பிற்கு அமைச்சர் சிபாரிசு செய்தார். முகாமைத்துவம் தற்போது தொழிலாளர்கள் தொடர்பான எது வித கடப்பாட்டையும் கொண்டிருக்கவில்லையென்பதுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய தொழிற்சங்கமேதும் அங்கு இல்லை. அராஜக நிலைமை இப்போது நிலவுகிறது. உற்பத்தி 40% ஆகக் குறைவடைந்து விட்டது. இக் காலப் பகுதியினுள் அன்சல் தொழிலாளர்கள் ஊர்வலமாகக் கொழும்பை நோக்கிச் சென்றார்கள். பொலிசார் தொழிலாளர்கள் மீது கண்ணீர்ப் புகையடித்ததோடு, துப்பாக்கிச் சூடும் நிகழ்த்தினர். பல தொழிலாளர்கள் காயமடைந்தனர். ஏனைய வேலை நிறுத்தப் போராட்டங்களின் அலையும் இருந்ததுடன் முன்பு தொடர்ந்திருந்த ஓரிரண்டு தொழிற்சங்கங்கள் கூட இனிமேல் அங்கீகரிக்கப்படுவது மறுக்கப்பட்டது. இந் நிலைமை தொடர்ந்தால் முதலீட்டாளர்கள் திரும்பச் சென்றுவிடுவார்களெனவும், அவர்கள் (தொழிலாளர்களே) தமது வேலைகளை இழப்பர் எனவும் தொழிலாளர்களிடம் அன்றைய பிரதம மந்திரி (சந்திரிகா குமாரணதுங்க) கூறினார்.

தொழிலாளர் சட்டங்கள் எவ்வித பாகுபாடுமின்றி நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள மக்களுக்கும் பொருந்தும் என்று தொழில் அமைச்சரினால் விடுக்கப்பட்டதொரு அறிக்கை இச் சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதை ஊக்குவித்தது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விழிப்படைந்து பிரதம மந்திரியைச் சந்தித்தனர். அவர்கள் தொழிற்சங்கங்கள் நிறுவ அனுமதிக்கப்படுமானால் தாம் இலங்கையிலிருந்து வாபஸ் பெற்று வேறு எங்காவது செல்லப் போவதாகவும் அச்சுறுத்தினர். தொழிற்சங்கங்கள் எதுவும் அமைக்கப்பட மாட்டாது என்ற உத்தரவாதத்தின் பேரிலேயே முதலீட்டார்கள் இங்கு வந்ததாக அரசாங்கமும் கூட இப்போது கூறுகிறது. அரசாங்கம் தொழிற்சங்கங்களுக்குப் பதிலாக கூட்டு கலந்தாலோசனைச் சபைகளை (Joint Consultative Councils) முன்மொழிந்துள்ளது. சட்டத்தின் கீழ் தொழிற்சங்கங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் பதவிக்கு வந்த காலம் தொடக்கம் இன்று வரை சுதந்திர வர்த்தக வலயத்தினுள், எத் தொழிற்சாலையிலுமே எதுவித தொழிற்சங்கமுமே இயங்கவில்லை: தப்பிப் பிழைக்கவில்லை. எனவே தமது குறைகளுக்கு தீர்வு காணத் தொழிலாளர்களுக்கு எதுவித வழியுமில்லாதுள்ளது. தொழிலாளர்கள் விரக்தி காரணமாகச் சாகச வழி முறைகளை நாடுகின்றார்கள். சில தொழிலாளர்கள் நீர்த் தாங்கிகளின் உச்சி மீது ஏறினர். உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினர். அத்துடன் தம் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டால் கீழே குதிக்கப் போவதாகவும் அச்சுறுத்தினர். அண்மையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட முகாமையாளரொருவர் தொழிலாளியொருவரினால் கொல்லப்பட்டார்.

**சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் சுகாதார நிலைமைகள்:**

உரிய வசதிகள் இல்லாமை காரணமாகச் சுதந்திர வலயங்களிலுள்ள பெண் தொழிலாளர்களின் சுகாதாரம் கீழ் மட்டமொன்றிலேயே உள்ளதுடன், அவர்கள் பல்வேறு இயந்திரத் தொழில் சார்ந்த நோய்களினாலும் வாடுகின்றனர். பெண்கள் நிலையத்தினால் நடத்தபட்ட அண்மைய மதிப்பீடொன்று இச் சோகமான நிலைமைகளை வெளிப்படுத்துகின்றன.

**நாட்டின் பொருளாதாரமான சந்தை சார்பான பொருளாதாரக் கொள்கையின் விளைவு:**

சுதந்திர வர்த்தக வலயங்கள், அரசாங்கத்தின் சந்தைப் பொருளாதாரக் கொள்கையின் பகுதியாகவே அமைக்கப்பட்டன. மேலும் வெளிநாட்டு முதலீட்டைக் கவருமுகமாக அரசாங்கம், அநேக அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளைத் தனியார் (மக்கள் மயப்படுத்தப்பட்டது என அரசாங்கம் கூறுகிறது) மயப்படுத்தியுள்ளது. பின்வரும் தொழிற் துறைகள் கடந்த ஐந்து வருடங்களினுள் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன.

போக்குவரத்து, புடவை, ஒக்சிஜன், மட்பாண்டம், ஹொட்டேல் தொழிற்துறை, தோல் பொருள் தொழில் துறை, எண்ணெய்க் கொழுப்புக் கூட்டுத்தாபனம், உரம், பால் தொழிற்துறை, வடிசாராயம், ரயர், நைலோன், காப்புறுதி, சீமெந்து, அரச வர்த்தகம், சீனித் தொழிற்துறை, பழம் தகரத்திலடைத்தல், ஒட்டுப்பலகை, தொலைத்தொடர்பு, மின்சாரம், பெருந்தோட்டத்துறை, கப்பற்துறை, உள்ளூர் மீன்பிடி, உருக்குத்தொழிற்துறை.

●

நன்றி : **Social Justice** October 1995

தமிழில் : சி. செ. ராஜா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதிய தீர்வுத் திட்டம்: அம்பாறை மாவட்டமும் தமிழர் பிரதிநிதித்துவமும்!

பொதுஜன ஐக்கிய முன்னணியின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு இப்போது முன் வைக்கப்பட்டுள்ளது. சிக்கல் வாய்ந்த விடயங்களான அதிகாரப் பரவலாக்கலும், எல்லை வரைவுகளும் தான் மூன்று தேசிய இனங்களையும் திருப்திப் படுத்தக் கூடியதும் சிக்கல்படுத்தக்கூடியதுமான முக்கிய விடயங்கள் ஆகும். இவற்றில் ஏற்படுகின்ற தாமதம் பொதுநன்மை ஒன்றுக்கு வழிவகுக்கலாம் என நம்பப்படுகிறது பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்ட இன்னுமோர் முக்கிய விடயம் பாராளுமன்றத்திற்கு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும்போது 50% வீதமானவர்கள் விகிதாசாரப்பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலும் 50% மானவர்கள் தேர்தல் தொகுதி அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவார்கள் என்பதாகும். வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தேர்தல் தொகுதி எல்லைகள் வரையப்பட வேண்டும். எல்லை வரைவுகள் வெறுமனே பிரதேசங்களை பிரிப்பது மாத்திரமன்றி பிரதிநித்துவங்களை பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் கிராமங்கள் தொகுதி அடிப்படையில் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்பதேயாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியாக காணப்பட்ட அம்பாறைப் பிரதேசம் 1961ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 10ம் திகதியுடன் தனி ஒரு மாவட்டமாக மாற்றப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதியாகக் காணப்பட்ட இப்பிரதேசத்தில் 1902ம் ஆண்டுக்கு முன்னர் சிங்களவர்கள் யாருமிருக்கவில்லை 1925ம் ஆண்டு 4.6 வீதமாக காணப்பட்ட சிங்கள மக்களின் சனத்தொகை 1963இல் அம்பாறை மாவட்டம் பிரிக்கப்பட்டபின்னர் 29.9 வீதமாகக் காணப்பட்டது. இத் திடீர் அதிகரிப்புக்கு காரணம் கல்லோயக் குடியேற்றத்திட்டமாகும். இத் திட்டம் தமிழ் பேசும் மக்களுக்கு செய்யப்பட்ட மிக மோசமான அரசியல் சதித்திட்டமாகும். இப்போது அம்பாறை மாவட்டம் முஸ்லிம்களின் மேலாண்மைமிக்க தனிஒரு அலகாக மாற்றப்படுவதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணி உட்பட சில அரசியல் கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன. இதனை யாரும் ஜனநாயக விரோதம் எனக் கருதமுடியாது. ஆனால் அம்பாறையில் சுதந்திரத்திற்கு முன்னரும் சுதந்திரத்திற்குப் பின்னரும் 1977ம் 1980ம் ஆண்டு தேர்தல் தவிர்ந்த எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழ்மக்களுக்கு பாராளுமன்றத்திற்கான பிரதிநிதித்துவம் இல்லாது இருந்து வந்துள்ளது. புதிய தீர்வுத்திட்டத்தில் அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை இந்த விடயமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு முக்கிய விடயம் ஆகும்.

1977ம் ஆண்டுக்கு முன்னர் அம்பாறை மாவட்டம் கல்முனை, அம்பாறை, பொத்துவில் என்ற 3 பிரதேசங்களையும் உள்ளடக்கிய விதத்தில் மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படவேண்டும் என்ற நோக்கமும், அம்பாறைத் தொகுதியில் இருந்து பெருமபானமை வாககுகளைப் பெற்று சிங்களப்பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற எண்ணம் சிங்களவர்களிடமும் காணப்பட்டதன் காரணமும் முஸ்லிம் - சிங்கள மக்களின் நன்மைகருதி 1977ம ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, பொத்துவில், அம்பாறைத் தொகுதிகளுடன் சேர்ந்து நான்காவது புதிய தொகுதியாக சம்மாந்துறைத் தொகுதியும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இது மாத்திரமின்றி அம்பாறைத் தேர்தல் தொகுதிக்கு ''திகாமடுல்ல'' என்ற சிங்கள நாமமும் சூட்டப்பட்டது. ஒருபுறம் தமிழர்களின் பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட, மறுபுறம்தமிழ் பேசும் மக்களின் நிலம் பறிபோய்க் கொண்டிருந்தது. இவ்விடயத்தில் கூட்டணியினரும் ஏனைய சில தமிழ்க்கட்சிகளும் வாய்திறக்கவில்லை.

## 1988ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த புள்ளி விபரம்:

| தேர்தல் தொகுதி | பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்கள் | முஸ்லிம்கள் % | தமிழர் % |
|---|---|---|---|
| கல்முனை | 44,077 | 69% | 29.31% |
| பொத்துவில் | 32,833 | 51% | 40.12% |
| சம்மாந்துறை | 44,790 | 74% | 24.31% |

1994ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கு இரண்டு பிரதிநிதிகள் கிடைத்துள்ளனர். இரண்டு பிரதிநிதிகளும் முன்னைய மட்டக்களப்புத் தேர்தல் தொகுதி எல்லைக்குள் அமைந்துள்ள ஏறாவூரையும், காத்தான்குடியையும் சேர்ந்தவர்கள். மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் தொகுதியில் பட்டிருப்புத்தொகுதி,தனித்தமிழ்மக்களின் பிரதேசமாகும். எனவே கல்குடாத் தொகுதியிலும், மட்டக்களப்புத் தொகுதியிலும் தான் முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். இதில் முக்கிய விடயம் என்னவெனில் கல்குடாத்தொகுதி இரட்டை அங்கத்தவர்களைத் தெரிவு செய்யக்கூடிய வகையில் முஸ்லிம்களின் பிரதேசங்கள் தனி ஒரு தொகுதியாக மாற்றப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் புதிய அரசியல் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. தற்போது சுமார் 26.7% மான முஸ்லிம் மக்களை கொண்டுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு பிரதிநிதிகள் போதாது, கல்குடாத் தொகுதிக்கும் முஸ்லிம் பிரதிநிதி தேவை என்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டபின்னரும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 72,000க்கும் மேற்பட்ட தமிழ் வாக்காளர்களுக்கு தமிழ் பிரதிநிதிதேவை என்ற எண்ணம் ஏன் இது வரையும் தமிழ்கட்சித் தலைவர்களுக்கு வரவில்லை என்பதுதான் புதுமை. 1981ம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் 21.6%, முஸ்லிம்கள் 41%, சிங்களவர்கள்36% உள்ளனர். ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 26.7% மாகவுள்ள முஸ்லிம்களுக்கு இரு பிரதிநிதிகள் போதாதுஎன கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் தெரிவு செய்யப்படக்கூடாது என்ற நோக்கில் தமிழ்க்கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டன. அம்பாறை மாவட்டத்தில் தொகுதிகள் பிரிக்கப்பட்ட போது பல முஸ்லிம் கிராமங்களுக்கு மத்தியில் ஒரு சில தமிழ்க் கிராமங்கள் இணைக்கப்பட்டு ஒவ்வொரு தேர்தல் தொகுதியும் உருவாக்கப்பட்டது. இவ்வாறான நிலைமையில் தமிழர் பிரதிநிதிகள் தொகுதி அடிப்படையில் வெற்றி பெற முடியாது போனது. இந்தத் தொகுதிகள் பிரிக்கப்பட்டபோது தமிழர்களின் தலைவர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்று புரியவில்லை. பெரியநீலாவணை, பாண்டிருப்பு,கல்முனை, காரைதீவு, வீரமுனை, தம்பிலுவிலில், திருக்கோவில், அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய தமிழர்கள் கூடியளவு வாழ்கின்ற பிரதேசங்கள் உள்ளடக்கிய விதத்தில ஒரு தொகுதியை கோரியிருக்க முடியும். புதிய அரசியல் திட்டத்திலாவது இந்த விடயம் கவனத்தில் கொள்ளப்படுமா? கூட்டணியினருக்கு அம்பாறை மாவட்டம் என்றவுடன் முஸ்லிம்களும், சிங்களவர்களும் மாத்திரம் தான் வாழ்கின்றார்கள் என்ற நினைப்பா? அம்பாறை மாவட்டத்தின் சமூக அமைப்புப் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணியினரை விட இந்தியாவில் உள்ள வை.கோபால்சாமிக்கு தெளிவு அதிகம் போல் தோன்றுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள நான்கு தேர்தல் தொகுதிகளில் ''திகாமடுல்ல'' தொகுதி தவிர்ந்த அனைத்து தொகுதிகளிலும் தமிழர்கள் முஸ்லிம்களை விட சற்றுக் குறைவாக வாழ்கின்றனர். எனினும் தமிழர்களை சிறுபான்மையினராக ஆக்க வேண்டும் என்ற நோக்கில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டபோது தமிழர்களுக்கான பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட்டது. விகிதாசார அடிப்படையில் நோக்கும் போது அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் ஒரு கட்சியின் கீழ் ஒன்றுபட்டு தனித்து நின்று போட்டியிட்டால் மாத்திரமே சில வேளை ஒரு பிரதிநிதியை பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால் தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமை இன்மை காரணமாக அங்கு பிரதிநிதித்துவம் கிடைப்பது இல்லாது செய்யப்படுகின்றது.

## 1971ம் ஆண்டு குடித்தொகை மதிப்பீட்டின்படி அம்பாறை மாவட்டம்

| தொகுதிகள் | மொத்த மக்கள் தொகை | தமிழர் | முஸ்லிம்கள் | சிங்களவர் |
|---|---|---|---|---|
| அம்பாறை | 96,710 | 3406 | 566 | 91,948 |
| கல்முனை | 54,813 | 15,630 | 38,150 | 667 |
| பொத்துவில் | 70,012 | 26.199 | 37.416 | 6247 |
| நிந்தவூர் | 69,207 | 18,854 | 49040 | 1206 |

1988ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த புள்ளிவிபரங்களின் அடிப்படையில் நோக்கும் போது புதிய அரசியல் தீர்வுத்திட்டத்தில் தேர்தல் தொகுதிகளின் எல்லைகள் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்க் கிராமங்களை ஒன்றாக இணைக்க கூடிய வகையில் வரைந்தளிக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் இந்த நடவடிக்கை மூலமே தமிழ் மக்களுக்கு கிடைக்க கூடிய பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை உறுதி செய்து கொள்ள முடியும். ''முஸ்லிம் அலகுக்கு'' பூரணமான ஆமோதிப்புக்களை தெரிவித்த தமிழர் கட்சிகள் அங்குள்ள தமிழ் மக்களின் நலனிலும் கடந்த காலங்களைப் போல் அமைதியாக இருந்து விடுவதில் நியாயமிருக்க முடியாது.

1971ம் ஆண்டு குடித்தொகை மதிப்பீடுகளின்படி அம்பாறை மாவட்டத்தில் உள்ள இன அடிப்படையிலான சனத்தொகை விபரம்.

1971ம் ஆண்டு 64,089 தமிழ் மக்கள் தொகையைக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் 1977ம் ஆண்டிற்கு முன்னர் எந்தப் பிரதிநிதித்துவமும் தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை. 1977ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் எம்.கனகரட்ணம் என்பவர் தமிழர் விடுதலைக்கூட்டணியில் போட்டியிட்டு 23,990 வாக்குகள் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். 1977ம் ஆண்டுக்கு முன்னர் 7 பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன. அந்தத் தேர்தல்கள் எல்லாவற்றிலும் தமிழர் வாழும் கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டு முஸ்லிம் கிராமங்கள் பலவற்றுக்கு மத்தியில் ஒரு சில தமிழ் மக்கள் வாழும் கிராமங்கள் இணைக்கப்பட்டமையாகும். 1994ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கூட தமிழர் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவில்லை. தமிழர் கட்சிகள் பிரிந்து நின்று போட்டியிட்டதன் பலன் தமிழர் பிரதிநிதிகள் தெரிவு செய்ய முடியாது போனமைக்கு அடிப்படையாக அமைந்து விடுகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரச்சாரத்தில் தேர்தல் தொகுதி பற்றிய தொகுதி அடிப்படையிலான 50% தெரிவும் விகிதாசாரப் பிரதிநிதித்துவப் அடிப்படையிலான 50% தெரிவு என்ற விடயங்கள் நிறைவேற்றப்படும் போது அம்பாறை மாவட்டத்தில் உள்ள கூழிக்கிராமங்கள் தொகுதி அடிப்படையில் இணைக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் தான் தமிழர்பிரதிநிதிகள் அங்கு தெரிவு செய்வது உறுதி செய்யப்படும். விகிதாசாரப்படியான பிரதிநிதித்துவம் தமிழர்களுக்கு கிடைக்க வேண்டுமானால் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் கட்சிகள் ஒரு கட்சியின் கீழ் இணைய வேண்டும்.

**பாலையா பத்மநாதன்**
***கிழக்குப் பல்கலைக்கழகம்***

---

பா
ல
ம்

# அரசின் குறிக்கோள் இதுதான்!

யுத்தத்தைப்பற்றி இன்று பலரும் பேசுகின்றனர். இவர்களில் யுத்தத்தை எதிர்ப்பவர்களும், விரும்புபவர்களும் உள்ளனர். இவ்விருசாராரதும் அறிக்கைகளைப் பார்க்கும் போது அவை அரசியல் கருத்தோட்டம் அற்றவையாகவே உள்ளன. இவ்வாறு இரு பிரிவினர் தோற்றம் பெறுவது, இனவாதத்தின் அடிப்படையில் என நான் நம்புகின்றேன்.

இதற்கு ஏற்ற மிக சமீபகாலத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றைக் கூறுகின்றேன்.

எனக்கு அறிமுகமான நண்பன் ஒருவன் அரச நூலகம் ஒன்றில் வேலைசெய்கிறான். அவனுடன் மணமுடிக்காத தமிழ் பெண்மணி ஒருவரும் தொழில் புரிகின்றார். சுமார் 7 வருடங்கள் இப்பெண்மணி அங்கு தொழில் புரிந்தாலும், ஒரு தரமாவது இனவாதம் பற்றிக் கதைத்தது கிடையாது. ஆனால் ''சூரியக்கதிர் நடவடிக்கை''யின் போது ஓர் குறிப்பிடத்தக்க சம்பவம் நடைபெற்றது.

யுத்தச்செய்திகளை வெட்டி கடிதக்கோர்வையாக்கும்படி அப்பெண்மணியிடம் கூறிய போது அப்பெண்மணி இவ்வாறு கூறினார்.

''அங்கு மக்கள் சாகின்றனர். அவற்றை எல்லாம் கத்தரித்து Album செய்யச் சொல்கிறீர்களா?'' உண்மையில் அந்நிறுவனம் செய்திகளைக் கத்தரித்து சேகரிக்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. அந்நிறுவனம் தொழினுட்பம், விஞ்ஞானம் இவற்றோடு தொடர்புக் கொண்ட நிறுவனமாகும். அதனால் இவர்கள் இத்துறைகளோடு தொடர்புடைய செய்திகளை கத்தரித்து சேகரிப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இச்சம்பவம் மூலம் யுத்தம் காரணமாக மனிதர்களின் எவ்வளவு இனவாதத்தைக் கொண்டிருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது. தென்னிலங்கையில் இவ்வாறான நிலைமை எனின், வட இலங்கைபற்றி கூறத்தேவையில்லை.

இனவாத நிலையை ஊட்டி வளர்க்கும், புலிகள் அமைப்புக் கூட இதனையே எதிர்ப்பார்க்கின்றது. அப்பொழுதுதான் இவ்வாறான அமைப்புக்களின் நிலை உயர்ந்து உறுதிஅடைய முடியும.

அனைவரும் இனவாதிகள் அல்லாதவர்களாக இருப்பது மனதுக்கு சுகம். இதற்கு ஒப்பான சம்பவம் ஒன்று, எங்கள் வீட்டில் நடைபெற்றது. இப்பொழுது ரூபவாஹினியில் தினம் தினம் யுத்த தளங்களின் படங்கள் காட்டப்படுகின்றன. இப்படங்களைப் பார்த்த எனது தாயார் கூறினார்; ''ஐயோ யாழ்ப்பாணத்தின் நிலையைப் பாருங்களேன்'' என்று. அவர் சிங்களப் பெண்மணியானாலும், ஆசிரியராக சுமார் 13 வருடங்கள் யாழ்ப்பாணத்தில் தொழில் புரிந்துள்ளார். இதன் காரணமாக அவர் தமிழ் மொழியைப் பேச எழுத வாசிக்கத் தெரிந்துகொண்டார். அன்றைய யாழ்ப்பாணம் பற்றிய அழகுணர்ச்சிகள் இன்றும் அவரது மனதில் அழியாது நிலைத்து நிற்கின்றது. ''அங்குள்ள மக்கள் எவ்வளவு அன்பானவர்கள்'' என்று கூறிக்கொண்டே உதவிசெய்து அன்பு செய்தவர்களின் பெயர்களைக் கூறுவார். அங்குள்ள மக்கள் அவரை அன்பாக, நேசம்மா நேசம்மா என்று அழைத்தார்கள் என்றும் கூறுவார்.

அன்று எனது தாயின் கீழ் கற்று வளர்ந்த பிள்ளைகள் இன்று தீவிரவாதிகள் என்ற முத்திரை குத்தி கொல்லப்படுவதை அவர் கனவிலும் நினைத்திருக்கமாட்டார். கற்கண்டா, சொக்லேட்டா பரிசாகக் கிடைக்கிறது என்பதைக் கொண்டே அயலவர்களுக்கு ப் பிறந்த குழந்தை ஆணா பெண்ணா என்பதை அறிந்து கொள்வார் அம்மா? ஆனால் இன்று யாழ்ப்பாணத்தில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் மரணப்பயத்துடன் பிறக்கின்றன. ஒரு முறை புத்தர், மூனறு பயங்களில் முதன்மையானது மரண பயம் என்று கூறினார். ஆக அந்தளவு மரண பயம் மனதுக்கு கஷ்டத்தைக் கொடுக்கும் ஓர் நிலையாகும். எப்படியாயினும் தொலைக்காட்சியில் காட்டப்படும் யுத்தமுனைப் படங்கள் பயங்கரமானவை அல்ல. எனினும் யாழ்ப்பணத்தின் உண்மைக் காட்சிக்ள் பயங்கரமானவை. அவற்றைக் காணநேர்ந்தால் எனது தாயாருக்கு என்னவாறான துயர் ஏற்படும் என்பதை என்னால் ஊகிக்கமுடியவில்லை.

தெற்கில் சமாதானம் தொடர்பாக குரலெலுப்

—15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பெண்களும் குடும்ப உறவுகளும் -2

# ஆணினுடைய உழைப்பை உருவாக்குவது பெண்ணா?

இராசம்மா அநாமிகா

### குடும்பத்தில் வீட்டு வேலைகள் பற்றியது (Domastic Labour)

வீட்டு வேலைகள் என்னும் போது சமையல், வீட்டுப்பராமரிப்பு (உடை கழுவுதல், வீட்டை சுத்தப்படுத்தல்) குழந்தை வளர்ப்பு என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான வீட்டுவேலைகள் என்பன ஒரு உழைப்பே என 70ற்கு முன்பே ஆராயப்பட்டு அதற்கு ஊதியம் அளிக்கப்பட வேண்டும் எனப்பெண்ணிலைவாதிகள் கோரிக்கை எழுப்பியுள்ளார்கள். இது குறித்து ஐக்கிய நாடுகளின் சபையிலும் விவாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் கீழைத்தேசமாகிய எமது நாட்டில் வீட்டுவேலைகள் பற்றிய மதிப்பீடே வேறுபட்டதாகவுள்ளது. குறிப்பாக தமிழ் சமூகத்தில் வீட்டுவேலைகள் என்பது ஒரு உழைப்பு என பெண்கள் உணர்ந்து கொள்ளாமல் இருப்பது வருத்தப்பட வேண்டிய விடயமேயாகும். பெண் என்பவள் ''பின் தூங்கி முன் எழவேண்டும்'' எனக் கூறப்படுவதன் அர்த்தம் அவள் காலையில் நேரத்துடன் எழுந்து காலை உணவு தயாரிப்பு முதல் குழந்தைகளை பாடசாலைக்கு தயார் படுத்துவது, கணவனின் தேவைகளை நிறைவேற்றுவது (உணவு தயார்படுத்தல், மதிய உணவு பொதிசெய்தல், உடையினை ஸ்திரி போடுதல் ) இவ்வாறு தொடர்ச்சியான வீட்டுப்பணிகளில் ஈடுபட்டு இரவு நெடுநேரம் வரை உழைத்து, குடும்ப அங்கத்தவர் அனைவருக்கும் சேவை செய்து, அவர்கள் அனைவரும் தூங்கச் சென்ற பின்னரே அவள் தூங்கச் செல்லவேண்டும் என்பதே ஆகும். இத்தனை தூரம் அவள் தன்னலம் கருதாமல் சேவை செய்தாலும் அவள் உழைப்பு மதிப்பற்ற ஒன்றாகவே கருதப்படுகின்றது.


வீட்டு வேலைகள் என்பது ஏனைய வருமானம் (ஊதியம்) வழங்கப்படும் வேலைகளிலும் பார்க்க பலவிதத்தில் வேறுபடுகின்றது. இது ஒரு குறிப்பிட்ட பாலுக்கு (Gender) உரியது என ஒதுக்கப்படுவது போல் வேறு எந்த தொழிலும் குறித்த தொழிலை குறிப்பிட்ட பாலினரே செய்யவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இது தனிப்பட்ட உறவுகளுடன் அந்நியோன்னியமாக இணைக்கப்பட்டதாகவோ அல்லது தனிப்பட்ட சேவையின் கடமையுடன் இணைக்கப்பட்டதாகவோ வேறு எந்த தொழிலிலும் இல்லை. வீட்டு வேலைகளுக்கு வரையறையோ, ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலை நேரங்களோ, வேலை நியதிகளோ கிடையாது. அதாவது வீட்டு வேலைகள் என்பது எல்லைகள் வரையறைகள் அற்றது என்பதுடன் இதற்கு தெளிவான தொடக்கமோ, முடிவோ கூடக் கிடையாது.

வீட்டு வேலைகள் தொடர்பாக பெண்களின் உணர்ச்சிகளை ஆய்வு செய்த போது அவர்கள் இரு முகப்பட்ட தன்மையுடையவர்களாகவே இருப்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. பொதுவாக வீட்டுவேலைகள் தொடர்பாக பெண்கள் அதிருப்தியை வெளிப்படுத்துகிறார்கள். அதுவே சில சந்தர்ப்பங்களில் கணவன் மனைவியிடையே சச்சரவுகளை உருவாக்கினாலும் கூட பின்னர் சமாதானம் அடைந்துவிடுகிறார்கள். பெண்கள் ஒரே விதமான, திரும்பத் திரும்ப சலிப்பூட்டும், தனிமைப்படுத்தும், களைப்பூட்டும் முடிவேயில்லாத வீட்டு வேலைகளின் தன்மை பற்றி உணர்கிறார்கள். ஆனால் சமூகத்தில் வீட்டுவேலைகள் தாழ் அந்தஸ்து பெறுவது தொடர்பாக ஆத்திரப்படவோ அல்லது தமது வேலைகள் எவரது கவனத்தையும் பெறாது போவதுபற்றி எரிச்சலுறுவதோ இல்லை. வீட்டில் உள்ள அங்கத்தவர்கள் தமது சேவையைப் பெறுவது (தம்மை சுரண்டுவது) அவர்களது உரிமையைப் போலவும் உணர்வார்கள். இவர்கள் அடிக்கடி நியாயமற்ற முறையில் சுமை தாங்க வேண்டியிருப்பதை உணர்வதுடன், வருமானம் பெற்றுத் தரும் உழைப்பிலோ அல்லது கூலி உழைப்பிலோ ஈடுபடும் போது இரட்டிப்பு சுமையை தாங்குவதாக அதிருப்தி அடைந்தாலும் கூட ஒட்டுமொத்தமாக வீட்டுவேலைகள் பற்றி விமர்சனம் செய்ய முன்வருவதில்லை. பெண்ணிலைவாதிகளே வீட்டுவேலைகள் சன்மானம் அளிக்கப்படாத, பால்ரீதியான (Gender) வேலைப்பிரிவினை என நிராகரிப்பர்.




வீட்டுவேலைகள் என்பவை வெறுமனே திரும்பத்திரும்ப சலிப்பூட்டும் வேலை மாத்திரமல்ல. இந்த வேலைகள் குடும்பம், வீடு தொடர்பான கருத்துக்களை அர்த்தப்படுத்துகின்றன. தன்னால் நேசிக்கப்படும் உறவினரை (குழந்தைகள், கணவர், அம்மா, அப்பா..) கவனித்துக்கொள்ளும் தனிப்பட்ட சேவையாக, அதுவே தமது கடமையாகவும் பெண்கள் உணர்வதால் வீட்டுவேலைகள் குறித்து சரியான மதிப்பீட்டை செய்ய முடியாதவர்களாய் உள்ளார்கள். இவர்களால் தமது சேவையைப் பெறும் நபர்கள் தொடர்பான தமது உணர்ச்சிகளையும் அவர்களுக்கு செய்யப்படும் வேலைகள் தொடர்பான தமது உணர்ச்சிகளையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாதிருப்பதுடன் மட்டுமல்ல இந்த வேலைகள் வீட்டு அங்கத்தவர்களது (குழந்தை, கணவர்) நலன்களுக்கு அவசியமானவை என்பதால் இவற்றை செய்வதில் பெண்களுக்கு கணிசமான திருப்தியும், பெருமித உணர்வும் கூட உண்டு எனலாம். உழைப்பு என்ற வகையில் வீட்டு வேலைகள் தொடர்பான உணர்ச்சிகளையும், மனைவி என்ற பாத்திரத்தை நோக்கி (அதாவது இல்லத்துக்கு (மனைக்கு) குரியவர்கள்) அவர்கள் உருவாக்கப்பட்டிருப்பவர்கள் என்பதையும் வேறுபடுத்திப்பார்ப்பதன் மூலம் வீட்டு வேலைகள் தொடர்பான முரண்பட்ட பாகுபாட்டை புரிந்து கொள்ள முடிவதில்லை.

வீட்டுவேலைகள் என்பது ஊதியமற்ற ஒன்றாகும். அத்துடன் இது ஊதிய பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக இல்லாமல் தனிப்பட்ட வீட்டில் நடைபெறுகின்றது. ஏனைய ஊதியம் அளிக்கும் வேலைகள் போலன்றி இதற்கு தெளிவான நேரவரையறைகள் கிடையாது. ஏனெனில் இங்கு குறிப்பிட்ட தொகை ஊதியத்திற்காக கொடுப்பது என்பது கிடையாது. மனைவியால் உருவாக்கப்படும் பொருட்களும் சேவைகளும் பண்ட சந்தையை (ஊதியத்தை) இலக்காகக்கொண்டதாக இல்லாமல் அவளது நெருங்கிய குடும்ப உறவினரே (கணவர், குழந்தைகள்) நுகர்கிறார்கள். வீட்டு வேலையின் குறிப்பான பண்புகள் இப்படிப்பட்ட சமூக பொருளாதார உறவுகளில் இருந்து, பிறக்கின்றனவே அன்றி இவை மனைவியரால் செய்யப்படும் பணிகளின் உள்ளார்ந்த பண்புகள் அல்ல. இதே பணிகளை (உணவு, உடை கழுவுதல், சுத்திகரிப்பு, குழந்தை வளர்ப்பு, பாலுறவு) ஊதியம் கொடுக்கவும் வேலைகளாகவும் செய்விக்கலாம். அதாவது மனைவி வழங்கும் சேவைகளை சந்தையில் பணத்திற்கும் வேண்டலாம். ஆனால் எப்போது இவை வீட்டினுள் நடைபெறத்தொடங்கியதோ அப்போதே அங்கே இதற்கு பணம் (ஊதியம்) வழங்கப்படாதது டன் அதன் உற்பத்திக்கு (உழைப்பிற்கு) மதிப்பும் இருப்பதில்லை.



எனவே குடும்பத்தில் வீட்டுவேலைகள் என்பது ஊதியம் அளிக்கப்படாதது டன் அதன் மதிப்பும் குறைவாகவே கணிக்கப்படுகின்றது. வீட்டுவேலைகள் பெரும்பாலும் பெண்களை ஒரே விதமான வேலையினை திரும்பத் திரும்ப செய்விப்பதனால் சலிப்பூட்டுவதுடன் அதிருப்தியையும், வேலைச் சுமையும் கொடுக்கின்றது. குடும்பம் என்ற நிறுவனத்தினுள் இரண்டு நபர்கள் சம்பந்தப்டும் போது அதில் ஒரு நபர் வீட்டின் (குடும்பத்திற்கு அத்தியாவசியமான) வேலைகளை செய்வது என்பதும், மற்ற நபர் எந்தவித பங்களிப்பும், செலுத்தாமல் இருப்பது என்பதுமே சமத்துவமற்ற, ஜனநாயகமற்ற, சுரண்டல் நிலைக்கு இட்டுச் செல்கின்றது. அதாவது குடும்பத்தில் வீட்டுவேலைகள் (சமையல், உடை கழுவுதல், வீட்டுச்சுத்திகரிப்பு, குழந்தை வளர்ப்பு) போன்றவற்றில் ஆண்கள் தமது பங்களிப்பை செய்யாது நழுவி விடுவது மட்டுமல்ல அதனை தமக்காவும் செய்வித்துக்கொள்கிறார்கள். இதனை பெண்கள் புரிந்து கொள்வதே இல்லை. பெண் ஆணினுடைய உழைப்பு சக்தியை உருவாக்குகிறாள். உதாரணமாக கணவருக்கு அடுத்தநாள் வேலை செய்வதற்கு தேவையான பணிகளை (சாப்பாடு, உடை, ஓய்வு) ஒழுங்கு செய்வதன் மூலம் (மறுநாள் உழைப்பு சக்திக்கானத் தயாரிப்புக்களை செய்வதன் மூலம்) ஆணினுடைய உழைப்பை உருவாக்குகிறாள். அதனையே ஆண் பரிவர்த்தனை செய்துவரும் ஊதியத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார். இந்த அர்த்தத்தில் ஆணாதிக்க உற்பத்தி முறையினுள் மனைவியின் உழைப்பை ஆண் சுரண்டுவதாகக் கூறமுடியும்.





சமூகத்தில் வீட்டுவேலைகள் பெண்களுக்கே உரியது என சமூக கருத்தியல்கள் வலியுறுத்துவதால், பெண் இது குறித்து சலிப்புற்று, அதிருப்தி அடைந்தாலும் கூட ஆணின் பங்களிப்பு என்பது செய்யப்படுவதில்லை என்பதை புரிந்துக் கொள்வது இல்லை. குடும்ப நிறுவனத்தையே கேள்விக்குட்படுத்தாமல் அப்படியே ஏற்றுக்கொண்டு செல்கிறார்கள். உழைப்பு, நபர் என எடுத்துக்கொண்டால் குடும்பத்தில் பெண்கள் சுரண்டப்படுவதை வெளிப்படையாக புரிந்து கொள்ளலாம். ஆனால் பெண்களின் இருமுகப் போக்கினால் இது இருட்டடிப்பு செய்யப்படுகின்றது. ஆயினும் குடும்ப நிறுவனத்தால் இன்று நேரடியாகப் பயனடைபவர்கள் ஆண்களே என்றால் மிகையாகாது. ஆனால் பெண் ஊதியமற்ற, மதிப்பற்ற, சலிப்பூட்டும் ஒரே தன்மையான வேலைகளை திரும்பத் திரும்ப செய்விக்க தூண்டப்பட்டு வாழும் வாழ்க்கை என்பது நபர் என்ற வகையில் ஒரு முதலாளி தொழிலாளியை சுரண்டி இலாபமடைவதற்கு ஒப்பானது. இங்கு பெண்ணானவள் தனது உழைப்பின் (வீட்டு வேலைகள்) மதிப்பு, ஆணின் பாதுகாப்பின்மை சமூக கருத்தியல்கள் ஆகியவற்றை கேள்விக்குட்படுத்துவதன் மூலமே உணமையான தனது (சுரண்டல்) வாழ்க்கையை புரிந்து கொள்ள முடியும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் ஊதியமற்ற, மதிப்பற்ற உழைப்பு என்பது பெண்ணை என்றென்றைக்குமே கீழ்படிவிற்கு இட்டுச் செல்வதுடன் என்றென்றைக்குமே குடும்பத்தில் ஆண்-பெண் அசமத்துவ உறவையே நிடிக்க வழியமைக்கும்.

### குடும்ப நிறுவனம் ஆற்றும் பாத்திரங்கள்

எமது தமிழ் சமூகத்தில் குடும்ப நிறுவனம் ஆற்றும் பாத்திரங்கள் குறித்து ஆராய்வோமாயின் அவை:

1. பொருளாதார பாதுகாப்பு
2. சமூகப்பாதுகாப்பு
3. சந்ததி மறு உற்பத்தி, பாலியல் தேவை
4. சித்தாந்த மறுஉற்பத்தி
5. உளவியல் தேவை

என குறிப்பிடலாம். மேற்குறிப்பிட்ட பாத்திரங்களை குடும்ப நிறுவனம் ஆற்றுகிறது உண்மையாயினும் இவற்றால் பெண்கள் திருப்தி அடைகிறார்களா? குடும்பத்தில் சமத்துவமாக நடத்தப்படுகிறார்களா? என்பதே எம்முன்னுள்ள கேள்விக்குரிய விடயமாகும். இதனை குடும்ப நிறுவனம் ஆற்றும் பாத்திரங்கள் குறித்து ஆராய்வதன் மூலமே தெளிவான முடிவிற்கு வர முடியும்.

குடும்ப நிறுவனம் ஆற்றும் பாத்திரங்கள் பற்றி அடுத்த இதழில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# புலமைப் பரிசில் பரீட்சை: இராஜபாதையும் அதள பாதாளமும்!

இலங்கையில் வருடாந்தம் ஆண்டு 5 பாடசாலைப் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் பரீட்சை நடாத்தப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே! இப்பரீட்சைப் பெறு பேறுகளின் அடிப்படையில் இலங்கையின் ஆண்டு ஐந்து மாணவர் தொகையினுள் இருந்து மிகவும் திறமையானவர்களும் புத்திசாலிகளுமான மாணவர்களை வடிகட்டி எடுத்து இலங்கையின் பிரபல்யமான பாடசாலைகளில் சேர்த்துக்கொள்வதும் யாவரும் அறிந்ததே!

மிகவும் பிரபல்யமான பாடசாலைகளில் இணைந்து கொள்வது உயர்கல்விக்காக இலேசான திறவுகோல் எனவும், உயர்ந்த சமூக அந்தஸ்துக்கான இராஜபாதை எனவும் நமது நாட்டின் பெற்றோர் கருதுவதால் ஆண்டு ஐந்து பரீட்சைக்கான தயார்படுத்தல் என்பது கந்தசஷ்டி/ நவராத்திரி உபவாசம் போல பால் பழம் மட்டும் உண்டு அல்லது அதுவும் இல்லாமல் உபவாசம் விரதம் செய்வது போன்ற ஒரு சடங்காக நமது குடும்பங்களில் மாறிவிட்டது.

பெற்றோரும் ஆசிரியர்களும் இப்பரீட்சைக்காக மாணவர்களை தயார்படுத்து(?)வதில் பயங்கர பிரயாசையை எடுத்து வருவதை நாங்கள் அவதானிக்கலாம்.

நேசரிக்கு பிள்ளையை கொண்டு செல்லும் போதே ''என்ரை பிள்ளை ஸ்கொலசிப்பு பாஸ் பண்ண கூடியதா படிப்பியுங்கோ ரீச்சர்'' என வேண்டுகோள் மறுத்தனர்; பயந்தனர்.

மாதா பிதா குரு தெய்வம் - அவர்
மலரடி வணங்குதல் செய்வம்.

எனப் பாடிப் பரவியதன் பயன் நமது பிள்ளைகள் தமது துன்பத்தையும் தவிப்பையும் சொல்ல முடியாத ஊமைகளாக்கினதுதானே!

பரீட்சை தொடர்பான மன அழுத்தங்களால் விளைந்த நோய் அறிகுறிகளைக் கொண்டிருந்த 18 பிள்ளைகள் எழுந்தமானமாகத் தெரிவுசெய்து மேலும் ஆய்வு செய்யப்பட்டது.

இப்பதினெட்டு பிள்ளைகளில் 7பேர் ஆண்கள் ஆகவும் 11பேர் பெண்களாவும் இருந்தனர். ஆண்பிள்ளைகளுடன் ஒப்பிடும் போது கூடியளவு பெண் பிள்ளைகள் அழுத்தத்திற்கு உள்ளாவது அறியப்படுகிறது. இந்தப்பிள்ளைகளின் பெற்றோரின் வருமானம் தொழில் என்பனவற்றை ஆய்வு செய்த பொழுது கிடைத்த உண்மை இப்பதினெட்டு பிள்ளைகளில் 15பிள்ளைகளின் தந்தை அல்லது தாய் அல்லது இருவருமே ஆசிரியர்களாக இருந்துள்ளனர்.

வருமான அடிப்படையில் பார்க்கும் பொழுது 18 பிள்ளைகளில் 16 பிள்ளைகளின் பெற்றோர் ரூபா 2000க்கும் ரூபா 5000 க்கும் இடையிலான வருமானத்தையே பெற்று வருவது அறியப்பட்டது.

ஒப்பிட்டு ரீதியில் மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த பிள்ளைகளே மனங்களும் சாதாரணமாகவே பாடசாலைக் கல்வியில் நல்ல பெறுபேறுகளை ஆரம்பத்தில் இருந்தே எடுத்து வந்திருந்தனர் என்பதாகும்.

ஆயினும் இந்தப்பிள்ளைகள் பரீட்சை நெருங்க நெருங்க நெருக்குவாரங்களுக்கு உட்படத்தொடங்கினர். பெற்றோரினதும் ஆசிரியரினதும் விருப்பங்களை இந்தப் பிள்ளைகள் உணர்ந்திருந்தாலும் நிலவும் கடும் போட்டிச் சூழ்நிலை காரணமாகவும் இந்தப்பிள்ளைகள் ஓர் நிர்ப்பந்த உணர்வுக்கு உட்பட்டனர். அதனால் நோய் வாய்ப்பட்டனர். பரீட்சைக்காலங்களில் இந்தப் பிஞ்சுகளின் நேர அட்டவணையைப் பாருங்கள்.

10வயது வயதுடைய ஓர் பிள்ளைக்கு

8-10 மணித்தியால நித்திரை அவசியமாகும். ஆனால் எமது பிள்ளைகள் 6 மணித்தியாலமே நித்திரை கொள்ளுகின்றனர்.

பரீட்சைக் காலங்களில் வெளிநடவடிக்கைகளில் ஈடுபடுவதோ பொழுது போக்குகளில் ஈடுபடுபவதோ தடை செய்யப்படுகிறது.

எனது அவதானத்தின்படி ஆண்டு 5 படிக்கும் காலப்பகுதி முழுவதுமே பிள்ளைகளுக்கு படிப்பைத்தவிர பிற யாவற்றுக்கும் தடைதான்!

பரீட்சை முடிந்த மறுநாள் ஏன் பரீட்சை முடிந்து மண்டபத்தை விட்டு வெளிவரும் போது எங்கள் பிஞ்சு முகங்களின் தெரியும் நிம்மதி!

இது வெறும் தற்காலிகமானதுதான்!
பிறகு சா/த, இல்.. பிறகு உ/த இல் இப்படி காலம் முழுவதும் விருப்பமற்ற மன அழுத்தங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உட்பட்டு வாழும் வாழ்க்கை ஒன்றே எமது இளம் சிறார்களுக்கும் பின் இளையவர்களுக்கும் விதிக்கப் பட்டுள்ளது.

உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் பலம் கொண்ட உயிர்ப்பான எதிர்கால இளம் தலைமுறை ஒன்றைக்கட்டி எழுப்ப வேண்டும் என்றால், இலங்கையின் ஆரம்ப கல்வியில் காணப்படும் இந்த வகையான பரீட்சை முறைகளையும் ஆரம்பிக்க கல்வியின் அடிப்படைகளையும் மாற்றி புதிய கல்விச் சிந்தனை ஒன்றை கட்டி எழுப்ப வேண்டும் என ஒருவர் கூறினால்... அதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள்தானே!

விடுக்கும் பெற்றோரைப் பார்க்கிறோம்.

ஆண்டு மூன்றில் இருந்தே ஸ்கொலசிப்பு ஸ்கொலசிப்பு என பிள்ளையை நச்சரிக்கத் தொடங்கி ஆண்டு ஐந்தில் சோதனைக்கு கிட்டவான மாதங்களில் காலை, மதியம், இரவு ஆகிய நேரங்களில் சாப்பாட்டின் முன்னும் பின்னும் பெற்றோர் உச்சரிக்கும், நச்சரிக்கும் மந்திரமாக இந்தப் புலமைப்பரிசில் பரீட்சைகள் ஆகிவிட்டன.

பத்தே வயதான ஒரு பிள்ளையை பாடசாலை முடிந்ததும் மாலை நேர வகுப்புக்களிலும் அதன் விருப்பத்திற்கு எதிராகவே இருத்தி விடுவது எவ்வளவு வேதனையானது என்பதை உங்களால் கற்பனை பண்ண முடிகிறதா?

7க்கும் 10க்கும் இடைப்பட்ட வயதைச் சேர்ந்த பெருந்தொகையான பிள்ளைகள் பல்வேறு நோய் அறிகுறிகளுக்காக மருத்துவ உதவியை பெறுவது இலங்கையில் பரவலாக அவதானிக்கும் ஒரு விடயமாகும்.

இவர்களை கவனமாக அணுகி பொருத்தமான கேள்விகளை கேட்டு ஆராய்ந்த பொழுது அனேகமானவர்கள் கொண்டிருந்த நோய் அறிகுறிகள் குறிப்பிட்ட பரீட்சை தொடர்பான

## தொகுப்பு: ரீ.பி.என்

**தயார் படுத்தலால் ஏற்பட்ட மன அழுத்தம் அல்லது மன நெருக்கடியுடன் தொடர்புடையனவாக இருந்ததை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.**

திடுக்கிட வைக்கும் இந்தத் தகவலை பெற்றோராகிய நீங்கள் எப்படி கவனத்தில் எடுக்காதிருக்க முடியும்!

மேற்கூறிய ஆய்வில் கருத்துக் கெடுத்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகள் தலைவலி, பார்வை மங்குதல், கண்ணீர் வடித்தல், தலைச்சுற்று, நாட்பட்ட வயிற்று வலி, மூட்டுவலி, தசைவலி, மூச்சுத்திணறல், தூக்கமின்மை போன்ற நோய் அறிகுறிகளை வெளிக்காட்டினர்.

ஓடி விளையாடுபாப்பா நீ ஒய்ந்திருக்கலாகாது பாப்பா என பாரதி பாடலைச் சொல்லி கொடுப்போம் மாலைமுழுவதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா என்று சொல்லிக் கொடுப்போம். ஆனால் எங்கள் பிஞ்சு உள்ளங்களை தூக்கமின்மைகளுக்குள் ஆழ்த்தி மூச்சுத்திணற வைக்கிறோம்.

மேற்கூறிய ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிள்ளைகள் அனைவருமே தமது பெற்றோருக்கு எதிரில் தமது துன்பத்தினை வெளிக்காட்ட தயங்கினர். அவர்களின் முன் பெற்றோர் இல்லாத போதும் கூட இந்தப்பிள்ளைகள் தமது துன்பத்தையும் தவிப்பையும் வாய் திறந்து சொல்ல அழுதத நோய அறிகுறிகளைக காட்டுகின்றனர் என்பதையும் அறிய முடிகின்றது.

இந்தப் பெற்றோர் புலமைப்பரிசில் பரீட்சையில் தமது பிள்ளைகள் என்ன வகையான பெறுபேறுகளை பெற வேண்டும் என விரும்பினர் என ஆராய்ந்தபொழுது, பத்துப் பெற்றோர் தமது பிள்ளை புலமைப்பரிசில் பரீட்சையில் அதி உயரர் புள்ளியை பெற வேண்டும் என விரும்பினர்.

நான்கு பெற்றோர் தமது பிள்ளை மாவட்ட மட்டத்தில் முதல் பத்து பேருக்குள் வரவேண்டும் என எதிர்பார்த்தனர்.

இப்பிள்ளைகளின் ஆசிரியர்களும் கூட தமது மாணவமணிகள் மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற வேண்டும் அக்கறை கொண்டிருந்தனர்.

இங்கு முக்கியமாக கவனிக்கப்பட்ட விடயம் நோய் அறிகுறிகளைக்காட்டிய குறிப்பிட்ட பதினெட்டுப் பிள்ளை

***குழந்தை மருத்துவ ஆலோசகர்:***
***டாக்டர் எச்.டீ. விக்கிரமசிங்க அவர்களின் கட்டுரையின் உதவியுடன் எழுதப்பட்டது.***
***நன்றி; பொருளியல் நோக்கு.***

# பார்த்தேன்: மீண்டும் வடக்கை நோக்கி...

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பார்த்தேன் மலரில் சி.மாதுமை என்பவரால் எழுதப்பட்ட "மீண்டும் வடக்கு நோக்கி...." என்ற சிறுகதை திருமலையில் பலத்த சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறது.

திருமலையில் கல்விகற்கும் வடக்கைச் சேர்ந்த ஒரு மாணவியால் எழுதப்பட்ட இக்கதை திருமலை வாழ் மக்களையும், அங்குள்ள பிரபல பாடசாலை மாணவர்களையும் குறிப்பாக இந்துக் கல்லூரி மாணவர்களையும், திருமலை நகரபிதாவால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டுவரும் பௌர்ணமி விழாவையும் கிண்டல் செய்வதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இக்கதை பிரசுரமானதைத் தொடர்ந்து திருமலை நகரச் சுவர்களில் அவருக்கெதிரான சுவரொட்டிகளும், கண்டன அறிக்கைகளும் வெளியாகத் தொடங்கின.

இவ்விடயம் நகரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அவர்மூலம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு கண்டன அறிக்கையொன்றும் அனுப்பப்பட்டது. அக்கதையில் வெளிப்படுத்தப்படுகின்ற சில விடயங்களும் நகரசபைத் தலைவரால் அட்டவணையிடப்பட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.

* இங்குள்ள பெண்கள் கண்டவனுக்கெல்லாம் பல்லுக் காட்டுவது.
* தரமான பாடசாலையொன்றில் வெளிமாவட்ட மாணவர்கள் மீது அம்மாவட்ட மாணவர்கள் எரிச்சல், பொறாமை என்பதோடு பிரதேச வாதத்தைத் தூண்டியது.
* அழிந்துபோன கலை, கலாசாரத்தை மீண்டும் புத்துயிர் கொடுத்து வளர்க்க முற்றுமுழுதாக இம்மண்ணை நேசிப்பவர்களால் நடாத்தப்பட்டுவரும் பௌர்ணமி கலைவிழாவை அதன் புனித நோக்கிற்கு களங்கம் விளைவித்தமை.

இதுபோன்ற பத்துக் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு அக்கதையை மலரில் இருந்து நீக்கிவிடுமாறும் கோரப்பட்டிருக்கிறது. இது தொடர்பான கண்டன அறிக்கை வட-கிழக்கு மாகாணப் பணிப்பாளர்கள், பிரதிச் செயலாளர்கள் மற்றும் பலருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

நகரசபைத் தலைவரின் கடிதத்திற்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் செல்வி.பெரியதம்பி பதிலளித்து பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்.

* 1ம் பரிசு பெற்றதாலேயே பிரசுரிக்கப்பட்டது.
* இனிமேல் அச்சாகும் பிரதிகளில் அக்கதை பிரசுரிக்கப்படாது.
* கைவசமுள்ள பிரதிகள் (பிரதிகள் பெறுவதற்காக பலரால் 100/= செலுத்தப்பட்டிருக்கிறது) விநியோகிக்கப்பட மாட்டாது.

இப்பதில் கண்டனத்திற்குரிய சரியான பதிலாக அமையவில்லை என மீண்டும் சூரியமூர்த்தி தெரிவித்திருக்கிறார். மாவட்டத்தில் முதல் பரிசு பெற்றதால் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பது நியாயமான காரணமல்ல. ஏனெனில், ஏனைய மாவட்டங்களில் முதல் பரிசு பெற்ற கதைகள் பிரசுரமாகவில்லை. அத்துடன் தவறு ஏற்றுக்கொள்ளப்படவோ, தவறு செய்தவர்கள் அடையாளம் காட்டப்படவோ, வருத்தம் தெரிவிக்கவோ இல்லை.

நகரசபை உறுப்பினர்கள், கல்வியாளர்கள், மாணவர்களைக் கொண்டு அடுத்த நடவடிக்கை எடுக்கப்போவதாக சூரியமூர்த்தி தெரிவித்திருக்கிறார். சூரியமூர்த்தியின் வ.கி.மாகாண கல்வியமைச்சுக்கு எதிரான இந்நடவடிக்கைகளின் எதிரொலியாக அவர் திருமலையில் நடைபெற்ற ஐ.நா.வின் 50 ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகளின் போது புறக்கணிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் அனுசரணையுடன் வெளியிடப்படும் ''தமிழ்த்தென்றல்'' இதழ் வெளியீட்டின் போது மேடையில் அமர்ந்திருந்த நகரத்தின் முதல்பிரஜைக்கு மலர் வழங்கப்படாமல் இருந்ததாகவும், விரும்பியவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்ற அறிவிப்பின் பின்பே அவருக்கு கொடுக்க முற்படவும் அவர் 'நன்றி' என்று கூறி அதை வாங்காமல் விட்டுவிட்டார் எனவும் திருமலை நிருபர் தெரிவிக்கின்றார்.

மாதுமையின் கதை ஏற்படுத்திய சர்ச்சை தொடர்ந்து கொண்டிருக்கும் வேளையில் அக்கதையின் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த ஒருவர்... "போட்டிக்கு வந்திருந்த கதைகளில் அதுவே இலக்கியத்தரமுடையதாக இருந்தது. யாரும் அது இந்தளவு சர்ச்சைக்குட்படும் என்று எதிர்பார்க்கவில்லை. குறிப்பிட்ட பாடசாலை இந்துக் கல்லூரி என்பதாக அக்கல்லூரி மாணவர்கள் கருதுவதால் அவர்களே இதை பெரிதாக வளர்த்து விட்டிருக்கிறார்கள். அவர்கள் மாதுமை, தங்கள் கல்லூரிக்கு வந்து காலைக் கூட்டத்தில் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்'' என்றார்.

எப்படியோ அக்கதை திருமலை வாழ் பொது மக்களிடையே ஓர் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. இலக்கியவாதிகளும், மற்றும் சிலரும் அதை அதிகம் அலட்டிக் கொள்ளவில்லையாயினும் பிரச்சினைக்குரியதாக அது மாறிப் போயிருக்கிறது. ''எந்தவொரு சாராரையும் புண்படுத்தும் வகையில் ஆக்கங்கள் அமையக்கூடாது'' என்பது தமிழ்மொழி விழாச் சுற்றறிக்கை குறிப்பிடும் போது இக்கதை எவ்வாறு தெரிவாகி, பிரசுரமாகியுள்ளது என்பதே இதனைச் சர்ச்சைப்படுத்தியவர்களின் கேள்வி.

**விவேகி+சாது**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நினைந்தழுதல்

ஓட்டமாவடி அறபாத்



நேத்து வந்த மாதிரித்தான் இருக்கு. அப்படியும் இப்படியுமா அஞ்சு வருஷமாச்சி, கட்டின கச்சையோட காடுமேடெல்லாம் ஏறி, ஸ்கூல்லையும், பள்ளிவாசல்லயும், மாறிமாறி படுத்து இப்ப ஒதுக்கு புறமா கிடக்கம், நெனச்சா சிரிப்ப வருகுது எப்படியெல்லாம் வாழ்ந்தன். 'அயர்ன்' குலையாத சேர்ட்டைன்ன நேரத்துக்கு ஒரு களிசான், 'கோல்ட்மொடல், கடிகாரம் என்ன ஒரே கல்க்கல். இப்ப என்னெடான்டா கால் நீட்டி படுக்க என்ற குடிசர அகலம் போதாது நேரா படுத்தா கெழிஞ்சி விலாவ நிமித்தி படுக் கேலா, தம்பியோ தங்கச்சியோ நசுக்குப்படுங்கள்.

அப்ப ஆளுக்கொரு றூம், எல்லாவசதியும் இருந்திச்சி, நேரந்தவறாம சாப்பாடு, கை நிறைய காசு, கேட்ட எல்லாத் தையும் வாங்கித்தர வாப்பா, என்ன சுத்தி, ஏகப்பட்ட கூட் டாளிமார். இப்ப என்ன மெதுவா உத்துப் பாக்குறன். நிறைய பொத்தல் உழுந்த சாரண், கழுவக் கழுவசிரிக்காத சேர்ட், எங்கயாச்சும் வெளிய போறன்டா உடுத்துக் கொள்ள ஒரு மருதமுனைச்சாரம், 'பேமன்ட்'ல வாங்கின சாயம் போன ஷேர்ட்.

நேத்துதான் 'ரேஷன்' எடுத்தன். கியூவில் நிண்டு உளுத்துப் போன அரிசும், பரிப்பும், மாவும் எடுத்தாச்சி, ''கோப்ரெட் டி''யிலயும் ஏசிப் போட்டானுகள், விருப்பமென்டா இந்த அரிசி திண்ணுங்க, இல்லாட்டி கொட்டுங்க, நாங்க என்ன செய்ய இதத்தான் அனுப்புறாங்க, வாரது மாரி காலம். 'போரூட்' காரனும் கிடுகு கொண்டு வரல்ல நாங்க வந்த சூட்டுல, நீ முந்தி நான் முந்தின்னு விழுந்து விழுந்து பாத் தாங்க, இப்ப சில ஆக்கள் இந்த பக்கமும் தலவச்சி படுக்குற தில்ல. நிவாரணச்சாமான் கொடுக்கிறதிலயும் கொஞ்ச பேருக்கு நல்ல அடி; சாமான் பங்கிர்றம் எண்டுசொல்லி சைட்டால வெட்டுறாங்க, கேட்டா அது தேத்தண்ணி செல வுக்கென்டு மழுப்புறாங்க. என்ன செய்யிறது வேலியே பயிர மேயுது.

இண்டைக்கி உம்மாவுக்கு மருந்தும் முடிஞ்சி. கையில ஒரு சதக்காசுமில்ல. ராவக்கி தூக்கம் வராம அவதிப்படுவா. இஞ்ச ஆருக்கிட்ட கேக்குற, எல்லாரும் பொழுது பட்டா போதும், வானத்த அண்ணாந்து ஏங்கி கிடக்குதுகள். இப்ப முகாம்களுக்குள்ளயும் நிம்மதியா படுக்கேலா. என்ன இழவோ திடீர் திடீர்ன்னு வரிசையா பத்தி எரியுது. மரத்தால வுழுந்தவன மாடு மிதிச்ச கததான். அஞ்சு தங்கச்சிமாரயும் நெனச்சா மனசு பத்தி எரியுது. உடம்பெல்லாம் நடுங்குறதப் போல இருக்கு. நாலு பேருக்கு கலியாண வயசுதான் முன் னென்டா போட்டி போட்டானுகள். இப்ப நாயும் பாக்கு தில்ல.

போன மாசம் மூத்தவளுக்கு ஒருத்தன பேசினன். அவனும் என்னப் போல உடுத்த உடுப்போட வந்தவன்தான். இப்ப ஒரு கடையில கூலிக்கு நிக்கான். அம்பதாயிரம் சீதனம் கேட்டான். நெலம தெரிஞ்சும் கழுத்த நெரிச்சுட்டான். மனசு உடஞ்சி போச்சி, அன்று ராவல்லாம் அழுதன். எங்கட ஊருக்கு போகனும் போல இருக்கு. என்ட வீடு, வயல் காணி தோட்டம், கடயெல்லாம் இருக்கோ, தொண்டைக் குள்ள விழாங்கா பொறுக்குறமாதி இருக்கு, கண்கள் பீலி, மாதிரி கொட்டுது. அவுங்களுக்கு எவ்வளுவுதான் அள்ளி குடுத்தாரு வாப்பா கடசியில அவர பணயமா வச்சிட்டு எங்கள மட்டும் அனுப்பிட்டானுகள். இதுவரை அவரப் பத்தி எந்த செய்தியும் இல்ல. அந்த ஏக்கத்துல படுத்தவ தான் உம்மா.

தங்கச்சிமாருக்கு ஒரு நல்ல உடுப்பு இல்ல. 'ஸ்கூல் உடுப்பு பிஞ்சிட்டுன்னு நேத்து சின்னவள் சொன்னாள். வீட்லயும் அந்த உடுப்ப உடுக்குறதால பிஞ்சிட்டுன்னு எனக்கு தெரி யும். எங்களிட்ட கை நீட்டி சம்பளம் வாங்கினவனெல்லாம் இப்ப நல்லா இருக்கானுகள். சும்மான்டாலும் வந்து கேக்கா னுகள் ல்ல. நன்றி கெட்ட நாய்கள். இப்ப இந்த வாழ்க்க பழகிப் போச்சி. பறவக் கூடுமதிரி கொட்டிலுக்குள்ள அடஞ்சி கிடந்து, 'டொய்லட்' கியூவில் நின்டு குழாய் கிணத் துல முகம் கழுவி - கோதும ரொட்டியும், தேங்காச்சம்பலும் திண்டு நல்லா பழகிட்டு; ஒண்டா ரெண்டா அஞ்சு வரு ஷமா பழகிப் போச்சு. இந்த வாழ்க்க இயல்பாயிடுச்சி. மொதல் என்டா 'அகதிகள்' என்டு ஒரு அனுதாபத்தோடு உதவினாங்கா. இப்ப ஒரு மாதிரியா ஏதோ சனியங்கள் பார்க்கிறதப் போல பாக்கிறாங்க, கஷ்டம் என்டு ஆருச் கிட்ட சொன்னாலும், ஒங்களுக்கென்ன சும்மா இருந்து கொண்டே மாசாமாசம் சாமான் எடுக்கிறீங்க, இடைக்கிடை ''ரெட்குரோஸ்''காரனும் கவனிக்கான். குஷிவாழ்க்க. வயிறு பத்தும். மனம் முழுக்க நெருப்புத்தணல் தகிக்கும். நாமலும் அடுத்தவன நம்பி இருக்கப்படா, ஏதாச்சும் வேல செஞ்சி,உழைக்கனும் கூலிவேலைக்கு போனன். இப்ப என்ன பெரிய்ய ஹாஜி மொதலாழிமாரெல்லாம் சிங்கள வன்ட வயல்ல வேலைக்கு போறாங்க, என்ட ஊருலு அவங்க கொஞ்ச பேரு காருலதான் பள்ளிக்கு வருவாங்க, மனுஷன மதிக்க தெரியாம இருந்தாங்க. இப்ப அரும விளங்கும், மம்மட்டியோட வயல்லயும் காடுலயும் அல யக்கிலயாவது அல்லாட நெனப்பு வரும்.

நானென்டா இப்படி ஆகிடுவன் எண்டு கனவும் காணல்ல, வாப்பா அப்படி செல்லமா வளத்தாரு. இப்ப ''மத்தவங்க வாசல்ல ஏறி விறகு தறிக்கறயா''? எண்டு கேக்குற நில, முதல்ல ஒரு வீட்டு வாசல்ல ஏறி இதக் கேட்டன். வெப்பிசா ரம் வெடித்து அழுக வந்திட்டு. இப்ப பழகிட்டு, எல்லாம் ஒரே லெவல். ஒரே அளவான வீடு. ஏற்றத்தாழ்வு இல்லாத வாழ்க்க, என்னதான் இருந்தாலும், வெறுங்காலட நடந்த என்ற சொந்த ஊரப் போலயா இது.

இப்ப என்னமோ ஊருக்கு போகனும் போல இருக்கு. அந்த மண்ணுல வெறுங்காலோட நடக்கனும் போலவும், குளத் தோர கட்டுல வரிசயா நிக்குற பன மரத்துல நொங்கு வெட்டி குடிக்கனும் போலவும் இருக்கு. என்ட ஊர் பள்ளி, ஸ்கூல் எல்லாம் சிதிலமா கிடக்கும். டி வி.யில காட்டி னாங்க. இஞ்ச வந்து கொஞ்ச பேரு தங்கட பிள்ளையயள யும், மனைவிமாரயும், வெளிநாட்டுக்கு அனுப்பி டி.வி. யெல்லாம் எடுத்து நல்லா இருக்காங்க. சிலவங்க ராவும் பகலும் படமா பாத்து தள்ளுறாங்க. எப்படி இந்த நிலயில ஜொலியா இருக்கிற. இப்ப முந்திய போல வேல செய்ய முடியல்ல. காலயில தோட்ட வேல செய்யப்போனன். மத் யானம் வெயிலென்டா மூளய உருக்கிட்டு சரியான சாப் பாடு இல்ல. கண்ண சொருக்கிட்டு வந்தது. வரப்புல மயங்கி விழுந்திட்டன். இன்டக்கி வேல செஞ்சா உம்மாக்கு குளிசயும், வீட்டுச் சாமான்களும் எடுக்கலாம் எண்டுதான் போனன். எல்லாம் போச்சி. நாம நெனக்கிறது என்னதான் நடக்குது. சிங்களவன் என்டாலும். அரவாசி சம்பளம் தந் தான். உம்மாட குளிசய மட்டும் எடுத்தன்.

தம்பிமாரயும் குமருகளயும் காணுற போதெல்லாம் ஈரல் கருகுது. என்ன செழிப்பா இருந்தவங்க, மூஞ்செல்லாம் சூம்பிப் போய்ட்டு. முருங்கக் கா பிஞ்சு போல ஆயிட் டாங்க, வாய் விட்டு கத்தனும் போல இருக்கு. இளையவள் இன்னும் பெரிய மனுஷி ஆகல்ல, அவளும் இண்டைக்கோ நாளக்கோ, வாழ்க்க எப்படி இருக்கும்னு இப்பதான் புரி யுது. பகலெல்லாம் வேல செஞ்ச அலுப்பு. மேலெல்லாம் நோகுது. இவங்களும் எங்கட ஆக்கள் நல்லா வேலவாங்கு றாங்க. அகதி, என்டா குறஞ்ச ரேட். கூடின வேல.

சூரியன் சாஞ்சி கருக்கல் வந்துட்டு. குடிசயலுக்குள்ள குப்பி லாம்பு வக்கிறாங்க, முற்றத்தில பாயவிரிக்கிறாங்க. இனி எல்லா குமர் பிள்ளையலும் பொண்டுகளுமா கூடி பேசி அரட்டதான். பகலக்கி வெளியில இருக்கிறது குறவுதான். என்ட தங்கச்சியளும் பாய விரிக்குதுகள். நல்லபால் நிலா. வானம் வெளுத்த மாதிரி இருக்கு. நான் குடிலுக்க நுழையு றன். உம்மா கால்நீட்டி படுத்துக்கிடந்தா. கண்ணமூடிக்கி டந்தா. சொதசொதப்பான அவவின்ற தலமுடிய கோதிவிர் றன் முழிச்சா குளிசய குடுத்து தூங்கச் சொன்னன். கனிவா பாத்தா செத்தையில சொருக்கி பீடிக்கட்டுல ஒரு பீடிய உருவி எடுக்கிறன். அடுப்படிய இருந்த ரெண்டாவது தங் கச்சி ரொட்டிக்கு 'மாப்'பிசைகிறாள். பிகாள்ளிக் கட்டயால பீடிய பத்தவைக்கிறன். வெளிய வந்தன். எல்லா முற்றத்தி லும், சனங்கள். மண்புட்டி மாதிரி வடிவா இருந்தது. ஒதுக்கு புறமாய் இருந்த புளிய மரத்த நோக்கி நடக்குறன். சாக்குக் கட்டில விரிச்சி, மல்லாந்து படுக்கன். வீடியை உறிஞ்சி புகைய விட்டன் சொகமா இருக்குது.

வானம் நிறைய வெள்ளிகள் காட்டுப்பூப்போல பூத்துக்கி டக்கு. மெல்லிசா காத்துவீசுது. புளியம்பூ என்ட உடம்பெல் லாம் சொரியுது. ஒன்டயும் நெனைக்க ஏலா, தல குழம்புது. தாறுமாறா நெனப்பு ஓடுது. 'பர்சானா மட்டும் அடிக்கடி தெளிவா வருவாள். கடசியா அவள் என்ன கட்டிப்புடிச்சி அழுத அழுகதான் நெஞ்சில கிடக்கு. அஞ்சு வருஷத்துக்கு முந்திஎன்ட உசிரெல்லாம் அவள்தான் ஓடித்திரிஞ்சாள். இப்ப நெனச்சாலும் என்ட ''கல்பு'' குளிருது. போன மாசம் புத்தளத்துல கலியாணமாம். நல்லா இருக்கட்டும். அவள்ற நெனப்பு- மரவட்டையப் போல இதயத்துக்குள்ள சுருண்டு கிடக்கு.

ச்சீ...இதென்ன நர்ன் அழுவுறன். என்ன மீறி கண்ணீரு கசியுது. உதட்ட அழுத்தி கடிக்கிறன். கண்ணத்தால வழிஞ்சி கட வாயில கரிக்குது நீர். எனக்கென்டு ஒன்டும் இல்ல. எல்லாம் நழுவிட்டு, வீடு கட, என்ற மண், காதல், வாழ்க்க - எல்லாம் போச்சி. சொந்தம் எண்டு ஆரயும் ஆரும் கவ னிக் கேலாத நெல. என்னப் போல எத்தின பேரு இருப்பா னுகள். என்ட கூட்டாளிமாரெல்லாம் ஆளுக்கொண்டா, பாத்து கலியாணம் முடிச்சிட்டானுகள். நெஞ்சில யாரோ அழுத்துர மாதி பாரமா இரிக்கி. இப்ப வர வர இப்படி வருகுது. தர்ம வார்ட்டுல கொண்டு காட்டனும்.

வானத்துல நிலா மறஞ்சி போச்சி, என்டாலும் மெல்லிசா வெளிச்சமா கிடக்கு, தலய கெழிச்சி பார்கிறன். ஒன்டு ரெண்டு போர்தால். முற்றத்துல கிடக்கினம். தூரத்துல நாய் கள் ஊள இடுது. புளிய மரத்துல கொக்குள் கொர் கொர்ன்னு... தொணதொணக்குது. கம்புச்சுளியெல்லாம் என்ட மேல்ல விழுகுது. இஷாக்குப் போகனும். நல்லா நேரம் பெய்ட்டு. மெல்ல எழும்புறன். தலையிலயும், மேல் லயும் கிடந்த, புளிய இலகள தட்டி விர்றன்.

இப்பதான் பார்க்கிறன். என்ட குடிலுக்கு முன்னால அடுத்த வீட்டு பொம்பிளயள் நிற்குதுகள். என்னமோ பரபரப்பா.. உம்மாக்கு வருத்தமோ, சீ அப்படியென்டா எனக்கிட்ட தான் வருவாங்கா. சாக்கு கட்டில மடிச்சி, மரத்துல சாத்து றன். உசன் சாச்சா குழாய் கிணத்துல தண்ணி நிரப்பி என்ட குடிசக்கித்தான் கொண்டு போறார். பெரிய்ய அண்டாவுல ஊத்துறார். அண்டாவ சுத்தி புடவயால மறக்காங்க.

சாச்சித்தான் என்ட பக்கத்தில போனா. என்ன சாச்சி என் டன், '' ''இளையவள் சமைஞ்சிட்டாள் தண்ணி ஊத்தப் போறம்'' என்ட தோள்கள பாரமா இருக்கு, என்ற கடசித் தங்கச்சியயும் தூக்கி வக்கன். குடிசைக்குள்ள நுழையேலா. பொம்பிளயள், மறுபடியும் புளிய மரத்தடிக்கு போறன். கட்டில விரிச்சி மல்லாந்து படுக்குறன். மறுபடியும் கண்கள் ''பீலி'' மாதிரி கொட்டுது. ●

---

# மரணம்

- ரூ

பிரேதம் எடுக்க இன்னும் மூன்று மணித்தியாலங்கள் தான் உண்டு. ஆஸ்பத்திரியின் பின்னேயுள்ள அந்தக் கப்பீ லில் (Kapel) , சைவ முறைப்படி இறுதிச் சடங்கை ஆற்றுவ தற்கு எல்லா ஆயத்தங்களும் செய்தாயிற்று. தூர இடங்க ளில் இருந்து வரவேண்டியவர்களும் வந்தாயிற்று: பாட்டுக் காரர்-கிரியை செய்பவர்கள் உட்பட.

ஜெயமோகன் - இயக்கத்தில் ஜெய்ஸ் - இத்தாலியில் ஸ்ரீமோகன் ஜேர்மனியில் ஜெயசீலன் - டென்மார்க்கில் மீண்டும் ஜெயமோகனாகி - பின் சிங்கப்பூர் சென்று திரும ணமாற்றி வர ஓர் அண்ணையும் ஒட்டிக்கொள்ள ஜெயா அண்ணை ஆகி அதுவே நிலைத்திட.. அந்த ஜெயா அண்ணை நேற்று மாலையின் அந்திக் கருக்கலில் ஓர் 'அது' வாகி, அந்த 'அது'வை வேளைக்கு எடுத்து விட்டால் மற்ற வேலைகளைப் பார்க்கலாம் என்ற யோசனையில் ஆளுக் காள் அம்மண்டபத்தின் மூலைகளில் கூடிக்கதைத்துக் கொண்டிருக்க, ஜெயா அண்ணையின் பெட்டிக்கு அருகில் ஏற்றி வைக்கப்பட்ட அந்த சின்னக்குத்து விளக்கு மட்டும் தன்பாட்டில் எரிந்து கொண்டிருந்தது.

'காருக்குள்ளை இருக்கு: போய் அடிச்சிட்டு வருவமோ'

'அடிச்சாத்தான் ஒரு கிக்காய் இருக்கும்'

ஆனால் ஜெயா அண்ணைக்கு அந்த மாரடைப்பு ஏன வரவேண்டும் என்பது யாருக்கும் புரியாத ஓர் புதிராய் இருந்தது. மனைவி வித்யாக்கு இந்த வினாடிவரை ஏதும் புரியவில்லை. நெஞ்சுக்குள் ஏதோ செய்யுது என்று படுத் தது மட்டும்தான். எதையுமே சவாலக எடுத்துச் சாதிக்கற ஓர் வல்ல ஜீவன். அதுக்குப் போய் எப்படி?

'ஏதும் வேலை பார்க்கிற இடத்தில டெனிஸ்காரியோடை தொடுப்பு இருக்குமோடி. அதாலை.....'

கடவுளுக்குத்தான் தெரியும். ஆனால் பெண்கள் எண்டால் ஆள் நல்ல சகயமாய்க் கதைப்பார்'

ஆட்கள் ஓரளவு வந்துவிட்டார்கள். அந்த மண்டபத்தில் இனி இருப்பதற்கு இடமில்லை; அல்லது நிற்க வேண்டும். ஜெயா அண்ணையின் படம் போட்ட அஞ்சலித் துண்டு களை வெவ்வேறு நிறத்தில் பரிமாறிக் கொண்டிருந்தார்கள் இதுவரை வழக்கத்தில் இல்லாதவாறு பக்கத்துச் சிற்றிக்காரர் கூட ஓர் இறுதி அஞ்சலித் துண்டு வெளியிட்டிருந்தார்கள். யார் யரோ எல்லாம் மலர்வளையங்கள் கொண்டு வந்து அடுக்கடுக்காய் வைக்கிறார்கள். -டெனிஸ் காரர் உட்பட.

'ஜெயா அண்ணை தமையனுக்கு அனுப்ப என்று கழிச்செ டுத்த சீட்டு என்ன மாதிரி'

'வித்தியாக்காவோட கதைச்சுப் பார்ப்பம். அல்லது அவ ரின்ரை கார் இருக்குத்தானே'

காலடியில் இருந்த வித்தியாவுக்கு இனியொருதரம் அழ உடம்பில் பெலம் இருக்கவில்லை. கண்ணிலும் கண்ணீர் இல்லை. கன்னங்கள் வழியே கண்ணீர் காய்ந்திருக்க முகம் உப்பி வீங்கிப்போய் இருந்தது. மூத்தவன் மகேஸ் வயது -5. அடுத்தது சரண்யா - 3. சரண்யாவுக்கு 3வயதான போது ஒரு நாள் ஜெயா அண்ணை சொன்னார், 'பார் வித்தியா.. இவள் பெரியபிள்ளை ஆகேக்கை எனக்கு 50 ஆயிடும். அப்பவே பெரிய ஓர் சாமத்திய சடங்கு செய்து பார்க்க வேணும் ஏனென்டால் அவளுக்கு கலியாண வயது வரேக்கை நான் இருப்பனே இல்லையோ தெரியாது'. வித் தியாவின் கண்கள் மீண்டும் முட்டி பொலுபொலு என உதிர்ந்தது.

பசும் பொன் கொப்பி எப்பிடி

→15



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள்-15

**என்.சரவணன்**

> **1977 தேர்தல்: ஐ.தே.க சார்பில் அதிகளவு பெண்கள் தெரிவு செய்யப்பட்ட தேர்தல்!**

### *1977ஆம் ஆண்டு தேர்தல்*

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான வேட்புமனு ஜுன் 6ம் திகதி தாக்கல் செய்த 756 பேரில் 14 பேர் பெண்களாவர். இது மொத்த வேட்பாளர்களில் 1.9% ஆகும். இந்த 14 பேரில் 4 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர். இது 2.3% ஆகும். 1977 பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட பெண்கள் பின்வரும் ரீதியில் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தனர்.

***ஐக்கிய தேசியக் கட்சி - 3***
***ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி -4***
***லங்கா சமசமாஜக் கட்சி - 2***
***கொம்யூனிஸ்ட் கட்சி - 1***
***மக்கள் ஐக்கிய முன்னணி - 2***
***சுயேட்சை -1***


ரங்கநாயகி பத்மநாதன்


சுனேத்திரா ரணசிங்க

இந்தத் தேர்தலில் 160 ஆசனங்களில் 140 ஆசனங்களை ஐ.தே.க. கைப்பற்றியது. இது மொத்த ஆசனங்களில் 5/6 பங்காகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 8 ஆசனங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஆசனங்களையும் கைப்பற்றியது. எதிர்க்கட்சித் தலைவராக அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டார்.

1977 யூலை 21ம் திகதி நடத்தப்பட்ட இத்தேர்தலில் ***சிறிமாவோ பண்டாரநாயக்க*** அத்தனகல்ல தொகுதியிலிருந்தும், **ரேணுகா ஹேரத்** வலப்பனை தொகுதியிலிருந்தும், ***விமலா கன்னங்கர*** கலிகமுவ தொகுதியிலிருந்தும் ***அமரா பியசிலி ரத்னாயக்க*** வாரியபொல தொகுதியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதிகளவு பெண்கள் தெரிவு செய்யப்பட்டது இந்தத் தேர்தலிலேயே.

இந்தத் தேர்தலில் கட்டான தொகுதியில் கொம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்ட திருமதி நந்தா டி சில்வாவோடு தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் கணவர் விஜயகுமாரதுங்கவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்டிருந்தார்.

1972 இல் 2/3 பெரும்பான்மை பலத்தைப் பெற்று ஐக்கிய முன்னணி அரசாங்கம் நடைமுறைப்படுத்திய முதலாவது குடியரசு அரசியலமைப்பை நீக்கிவிட்டு 1978 இல் 5/6 பெரும்பான்மைப் பலத்தோடு ஆட்சியேறிய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம்; இரண்டாவது குடியரசு அரசியலமைப்பை நடைமுறைக்கு கொண்டு வந்தது.

அதுவரைகாலம் நடைமுறையிலிருந்த வெற்றிடமாகிற ஆசனங்களில் இடைத்தேர்தல் நடத்தி நிரப்பிவிடும் முறை, இவ்வரசியலமைப்பின் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

புதிய விகிதாசார முறையின் விளைவாக 1989ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடத்தப்படும் போது புதிதாக 7 பெண்கள் காணப்பட்டனர்.

1977இல் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டிருந்த திரு.எம்.கனகரட்னத்தின் மரணத்தைத் தொடர்ந்து அவருக்குப் பதிலாக அவரது சகோதரி ***ரங்கநாயகி பத்மநாதன்*** 1980 நவம்பர் 25ம் திகதி நியமிக்கப்பட்டார். திருமதி. ரங்கநாயகி திரு கனகரட்னத்தின் அந்தரங்க செயலாளராகவும் அதற்கு முதல் செயற்பட்டிருந்தார். மட்டக்களப்பு செனட்வனசன்ட் மகளிர் பாடசாலையில் ஆரம்பக் கல்வி கற்று பின்னர் City of London College இல் பட்டப்படிப்பையும் முடித்துக் கொண்ட திருமதி ரங்கநாயகி சுதந்திர இலங்கையின் முதலாவது தமிழ் - பெண் பாராளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. இதைவிட மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

கரந்தெனிய தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த பன்துல ஹேவா சேனாதீரவின் மரணத்தைத் தொடர்ந்து வெற்றிடமான ஆசனத்திற்கு அவரது மனைவி ***திருமதி சேபாலி சேனாதீரவை*** 1982 மார்ச் 26ம் திகதி ஐ.தே.க நியமித்தது.

ஹேவாஹெட்ட ஆசனத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்த அனுரடேனியல் 1982 ஏப்ரல் 18ம் திகதி இராஜினாமா செய்து கொண்டதையடுத்து அவரது சகோதரி திருமதி ***ரூபா சிறியானி டேனியல்*** யூலை மாதம் நியமிக்கப்பட்டார்.

ஹரிஸ்பத்துவ தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.பீ.விஜேசிறி 1984 ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்ட குண்டசாலை இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்காக இராஜினாமா செய்து கொண்டதையடுத்து அவரது மனைவி திருமதி ***எல்.எம். விஜேசிறி*** நியமிக்கப்பட்டார்.

1977இற்குப் பின் முதலாவது இடைத்தேர்தல் நவம்பர் 11ம் திகதி தெஹிவளையில் நடந்தது. அத்தொகுதி எம்.பியான எஸ்.டி.எஸ்.ஜயசிங்கவின் மரணத்தைத் தொடர்ந்து நடந்த அவ் இடைத்தேர்தலில் எஸ்.பு.எஸ்.ஜயசிங்கவின் புதல்வி ***சுனேத்ரா ரணசிங்க*** ஐ.தே.க சார்பில் போட்டியிட்டு 10,484 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

திருமதி சுனேத்ரா ரணசிங்க பிரதிச் சுகாதார அமைச்சராகவும் இப்பாராளுமன்றத்தின் போது நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதற்குப் பின்னர் சுகாதார, மகளிர் விவகார அமைச்சராகவும், கல்விச் சேவை அமைச்சராகவும் தொடர்ந்து அமைச்சுப்பதவிகள் மாற்றப்பட்டன. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அமைச்சு முறையின் போது மாவட்ட அமைச்சராக நியமிக்கப்பட்ட முதல் பெண்ணும் இவரே.

1987ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18ம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுர பாராளுமன்றக் கட்டடத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பின் போது காயமுற்று, பின் இறந்த தெனியாய தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கீர்த்திசேன அபயவிக்கிரமவுக்குப் பதிலாக அவரது சகோதரி ***செல்வி கீர்த்திலதா அபேவிக்கிரம*** 1987 செப்டெம்பர் மாதம் 11ம் திகதி நியமிக்கப்பட்டார்.

ரம்புக்கன தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவும் சமூக சேவை அமைச்சராகவும் இருந்த அசோகா கருணாரத்னவின் மரணத்தைத் தொடர்ந்து அவரது இடத்துக்கு அவரின் மகள் ***சமந்தா கருணாரத்ன*** நியமிக்கப்பட்டார். இவர் 1989 தேர்தலிலும் தெரிவு செய்யப்பட்டு சமூக புனர்வாழ்வு அமைச்சராகவும் கடமையாற்றியவர்.

இப்படியாக, 1977 யூலை 21ம் திகதி ஆறுவருட ஆட்சிக்காக தெரிவு செய்யப்பட்ட எட்டாவது பாராளுமன்றம் 1988 டிசம்பரில் கலைக்கப்படும் போது பல பெண்முகங்கள் காணப்பட்டன.

இதற்கிடையில் 1980 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிபோனது. 8வது பாராளுமன்றத்தில் ஸ்ரீ.ல.சு.க.வை பிரநிதித்துவப்படுத்திய ஒரே பெண் சிறிமாவோ பண்டாரநாயக்க மட்டுமே. அவரது உறுப்பினர் பதவியும் 1980இல் பறிபோனதோடு 1989 வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் வேறு எந்தப் பெண்ணும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கவில்லை. 8வது பாராளுமன்றத்தில் மொத்தம் 11 பெண்கள் அங்கம் வகித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவே அதுவரை கால பெண் பிரதிநிதித்துவத்தில் கூடிய தொகையாகும்.

8வது பாராளுமன்றத்தின் போது அமரா பியசீலி ரத்னாயக்க பிரதிப் போக்குவரத்து அமைச்சராகவும் பின் உள்நாட்டலுவல்கள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

8வது பாராளுமன்றத்தில் அங்கம் வகித்திருந்த பெண்கள் பின்வரும் ரீதியில் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தனர்.

***ஐ.தே.க***
விமலா கன்னங்கர
ரேணுகா ஹேரத்
அமரா பியசீலி ரத்னாயக்க
சுனேத்திரா ரணசிங்க
ரூபா சிறியானி டேனியல்
எல்.எம்.விஜேசிறி
தயா சேபாலி சேனாதீர
கீர்த்தி லதா அபயவிக்கிரம
சமந்தா கருணாரத்ன

***தமிழர் விடுதலைக் கூட்டணி***
ரங்கநாயகி பத்மநாதன்

***ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி***
சிறிமாவோ பண்டாரநாயக்க

*வரும்...*

## 1977 பொதுத் தேர்தல்

| | | |
|---|---|---|
| ***ரத்மலான*** | | |
| திருமதி விவியன் குனவர்த்தன | LSSP | 3055 |
| C.V. குணரத்ன | SLFP | 12141 |
| லலித் அதுலத் முதலி | UNP | 19972 |
| யு.ஜி. பெரேரா | I | 108 |
| ***கடான*** | | |
| திருமதி நந்தா டி சில்வா | CP | 1045 |
| விஜய குமாரணதுங்க | SLFP | 19738 |
| டி.நெல்சன் டி.சில்வா | I | 195 |
| டி.விஜயபால மெண்டிஸ் | UNP | 23950 |
| ***அத்தனகல்ல*** | | |
| கருணாரத்ன தம்புகல | CP | 335 |
| சந்திர குணசேகர | LSSP | 1067 |
| திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க | SLFP | 30226 |
| A.W.G. செனவிரத்ன | UNP | 19563 |
| ***களனி*** | | |
| L.W. பண்டித | CP | 1076 |
| R.H. ஜயசேகர | MEP | 85 |
| திருமதி எரின் சேனநாயக்க | SLFP | 16958 |
| A. சிறில் மெத்திவ் | UNP | 23477 |
| V. ஸ்டிபன் பெரேரா | I | 29 |
| M.D.H.D. சில்வா | I | 45 |
| P.G. லாரிஸ் | I | 29 |
| H.A. செனவிரத்ன | I | 162 |
| ***கெஸ்பேவ*** | | |
| திருமதி மாலினி சந்திரசிறி | LSSP | 3814 |
| டிக்சன் J. பெரேரா | SLFP | 19250 |
| தர்மசேன ஆட்டிகல | UNP | 24850 |
| D.N. பெரேரா | I | 298 |
| ***மொரட்டுவ*** | | |
| விமலசிறி டிமெல் | LSSP | 7000 |
| டக்ளஸ் பெர்ணாண்டோ | SLFP | 13614 |
| டிரோன் பெர்ணாண்டோ | UNP | 28488 |
| ருஸ்கின் பெர்ணாண்டோ | I | 2891 |
| கலிஸ்டஸ் பெரேரா | I | 112 |
| M.A.F.F. | I | 111 |
| திருமதி நீனா விஜேசூரிய | I | 86 |
| ***கலகெதர*** | | |
| என்.அலஹகோன் | LSSP | 148 |
| திருமதி தமரா குமாரி இலங்கரத்ன | SLFP | 11219 |
| W.M.G.T. பண்டா | UNP | 17092 |
| ***வலப்பனை*** | | |
| பியதாஸ கரன்தகொல்ல | CP | 462 |
| T.M. ஹேரத் | SLFP | 11242 |
| திருமதி ரேணுகா ஹேரத் | UNP | 15162 |
| R.P. விமலசிறி | I | 173 |
| உக்குபண்டா திசாநாயக்க | I | 52 |
| ***வாரியபொல*** | | |
| N.K.P. குணதாச | LSSP | 155 |
| பியதாஸ விஜேசிங்க | SLFP | 14221 |
| திருமதி A. பியசீலி ரத்நாயக்க | UNP | 18311 |
| R.M. செனவிரத்ன | I | 110 |
| ***கலிகமுவ*** | | |
| P.A. பஸ்நாயக்க | LSSP | 1041 |
| P. ஜகத் பாலசூரிய | SLFP | 14853 |
| திருமதி விமலா கண்ணங்கர | UNP | 18608 |
| எச்.கருணாரத்ன | I | 137 |
| பண்டித்தரத்ன பண்டார | I | 73 |
| ***பலாங்கொட*** | | |
| A. வில்லியம் | CP | 1676 |
| திருமதி மல்லிகா ரத்வத்தை | SLFP | 15829 |
| M.L.M. அபுசாலி | UNP | 19502 |
| விஜிதசேன சூரவீரஆராச்சி | I | 258 |
| ***ரம்புக்கனை*** | | |
| சேனக மாபிட்டிகம | LSSP | 327 |
| திருமதி A.T. ராணி விமலசேன | MEP | 59 |
| W.A.A. சிறிசேன | SLFP | 12556 |
| M. கருணாநாயக்க | UNP | 1853 |
| P. ரத்னாயக்க | I | 135 |
| ***ஹோமாகம*** | | |
| வில்பிரட் சேனநாயக்க | LSSP | 6012 |
| திருமதி சோமா சேனநாயக்க | MEP | 253 |
| யசரத்ன அமரதுங்க | SLFP | 15152 |
| காமினி ஜயசூரிய | UNP | 295403 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## "தனிப்பட்ட பாத்திரங்களின் உளவியலை விட சமூக உளவியலே முக்கியமானது!"

**—குழந்தை ம. சண்முகலிங்கம்**

***மண்சுமந்த மேனியர் என்னும் பெயரை உங்களுடைய நாடகத்திற்கு ஏன் தெரிவு செய்தீர்கள்***

ஆரம்பத்தில் நாமார்க்கும் குடியல்லோம் எனத்தான் முடிவு செய்திருந்தோம். பின்னர் அப்பெயர் மிகவும் வெளிப்படையாக இருந்ததால் எனக்குத் திருப்தியாகவிருக்கவில்லை. அன்றிரவு திருவாசகத்தை எடுத்து வாசித்தேன். அதில் பொன் சுமந்த எனத் தொடங்கும் திருவாசகம் வருகிறது. அருமையான வாசகம் எப்பொழுது வாசிப்பினும் கண் கலங்கும் அவ்வாசகம்

''மண் சுமந்து கோலால் மொத்துண்டு
புண் சுமந்த பொன் மேனி
பாடுதுங்காண் அம்மானாய்'' என முடியும்.

மண் சுமந்து என்பதை மண் சுமந்த எனவும் புண் சுமந்த பொன் மேனி என்பதில் மேனி என்பதையும் எடுத்து இணைத்து மண்சுமந்த மேனியர் என வைத்தேன். அப்பெயர் என் எண்ணம் யாவற்றுக்கும் பொருத்தப்பாடுடையது என்பதாகவும் பட்டது. ஏனெனில் எங்களுடைய மண்ணின் பொறுப்பையும் பாரத்தையும் இயக்கங்கள் சுமக்கின்றன என்பதொன்று. மற்றயது விவசாயிகள் பற்றித்தானே நாடகம் பேசுகிறது; விவசாயிதானே இந்த மண்ணைத் தாங்குபவன். இப்பெயர் எங்கள் பண்பாட்டுக்கூடாக வந்ததாக விமர்சகர்களும் குறிப்பிட்டனர். அதுவே அன்றைக்கு நிலவின் பிரச்சினையை பொறுப்பேற்று நடத்தியோரையும் பிரச்சினைகளுக்குள் சிக்கியிருந்த மனிதர்களையும் குறிக்கும் குறியீடாகவும் ஆயிற்று.

***மண் சுமந்த மேனியரின் பின்பு ஈழத்து நாடக உலகில் வடிவரீதியாகவோர் திருப்பு முனையாக உயிர்த்த மனிதர் கூத்து அமைந்தது என்பதாகப் பலர் குறிப்பிடுகின்றனர். அதுபற்றியும், அனேகமாகச் சிதம்பரநாதன் நெறியாளர் ஆனதில் இருந்தே அவருடன் இணைந்திருந்த நீங்கள் குறித்த தயாரிப்பில் பங்கு கொள்ளாதது ஏன் என்றும் குறிப்பிடுவீர்களா?***

சிதம்பரநாதன் (Cry of Asia) (ஆசியாவின் அழுகை) என்னும் பலநாட்டுக் கலைஞர்களின் கூட்டான அரங்க அளிக்கையில் கலந்து கொண்டபின் நாடு திரும்பியிருந்தார். அவ் அனுபவத்தின் பின் அவர் தயாரித்த ''மாற்றம்'', ''இனிப் பட முடியாது'' ஆகிய இருநாடகங்களிலும் அதுவரை காலமும் அவரிடம் தென்பட்ட நாடக வடிவத்தினின்றும் வேறுபட்டதொரு வடிவம் புலப்படத் தொடங்கியதை அவதானித்தேன். அவருடன் உரையாடும் பொழுதும் அரங்கம் பற்றிய அவரது பார்வைகளில் மாறுபாடுகள் தென்பட ஆரம்பித்ததையும் உணர்ந்தேன்.

எனவே புதியதொரு நாடக வடிவமும் போக்கும் சிதம்பரநாதனூடாக வெளிவர அனுமதிக்க வேண்டும்; அதில் நாங்கள் தலையிடக்கூடாது எனக் கருதினேன். ஏற்கனவே நாங்கள் மண்சுமந்த மேனியரில் உச்சம் பெற்ற நாடக வடிவத்துடன் இறுகிப் போயிருக்கிறோம் என்னும் விமர்சனமும் வைக்கப்பட்டு இருந்தது. எனவே புதிய வடிவம் ஒன்று சிதம்பரநாதனூடாக வரட்டும் எனக் கருதினேன். எனவே தான் உயிர்த்த மனிதர் கூத்து எனப் பெயரிடப்பட்ட Forum அரங்கில் உருவாக்கப்பட்ட அந்த நாடகத்திற்கு ஆரம்பத்தில் எழுத்துரு எழுதக் கேட்ட போது அறவே மறுத்துவிட்டேன். பிற்பாடு கவிஞர் முருகையன் கவிதை நடையில் அதற்கான எழுத்துருவை எழுதினார்.

அந்நாடகம் காவியத்தன்மை வாய்ந்தது. செந்தமிழ் நிறைந்தது. கவிதைகள் நிறைந்தது, அதனை சிதம்பரநாதன் Cry of Asiaவில் பெற்ற தமது அனுபவங்களுடன் தயாரிக்கும்போது புதிய வடிவம் ஒன்று துளிர் விட்டது. Cry of Asia ஐதீகம் (Myth) ஒன்றை கருவாகக் கொண்டு, உடல் மொழியினை (Body Language) முதன்மைப்படுத்தி, செய்து காட்டலின் மூலம் நாடகமாக மிளிர்ந்தது. அதே பண்புகளை சிதம்பரநாதன் உயிர்த்த மனிதர் கூத்திலும் கொண்டு வரமுனைந்தார். நாடகம் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் அதன் அளிக்கை இப்படி இருக்கும் எனக் கூற முடியாமல் இருந்தபோதும் 'பிற்பட்ட அளிக்கைகளின் போது அது ஓர் அழகான நாடகமாக உருப்பட்டது. உண்மையிலும் என் மனதைத் தொட்ட இடங்களும் இருந்தன. சிதம்பரநாதனிடம் அந் நாடகம் பற்றி உரையாடும் பொழுது. ''நீ நினைக்கக் கொண்டு இருக்கிற ஏதோ ஒண்டு இன்னும் முழுமை அடையாமல் கிடக்கு'' எனக் குறிப்பிட்டிருந்தேன்.

அந்த அரங்கம் ஒரு Forum theatre. போரம் அரங்கு எப்பொழுது முழுமை பெறும் எனின், நடிகர், இசையமைப்பாளர், ஒப்பனையாளர், பாடலாசிரியர், உரையாடல் எழுதுபவர், காட்சியமைப்பாளர், வழிப்படுத்துனர் ஆகிய யாவரும் இணைந்து ஒரு முகமாய் தொழிப்படும் பொழுதாகும். யாவரும் ஒருங்கு கூடி இருந்து செய்து பார்ப்பதும் திருத்துவதுமாக முயற்சித்து இறுதியில் உருவாக்கப்பட வேண்டிய அரங்கே அது.

அந்த வாய்ப்பு தமிழ் நாடக சமூகத்திற்கு இன்னும் கிட்டவில்லை. உயிர்த்த மனிதர் கூத்தினது வடிவம், மோடிப்படுத்தப்பட்ட அசைவுகளுடன் கூடிய நாட்டிய நாடகத்தை நினைவுபடுத்துவதாகும். அதை மேலும் வளர்த்தெடுக்க வாய்ப்புகள் சிதம்பரநாதனுக்கு இருக்கவில்லை. சிங்கள நாடக உலகத்தில் சித்திர சேனாவிடம் அதற்கான வசதிகளும் ஆளுமையும் உள்ளன. எங்களிடம் ஆளுமை இருந்தும் வசதிகள் இருக்கவில்லை.

***மண்சுமந்த மேனியரின் பின்பு உங்களது நாடகங்களில் குறிப்பாக அன்னையிட்ட தீயிலும் எந்தையும் தாயிலும் வேறுபட்ட பரிமாணங்கள் அவதானிக்கப்படுகின்றன. (அன்னையிட்டதீ - உளவியலை அடிப்படையாகக் கொண்டு யுத்தத்துக்கு பின்னான உளவடுநோயைக் கொண்ட கதாபாத்திரங்களின் பிரச்சினை பற்றிய, ஓரளவு பாத்திர உருவாக்கமும் அவதானிக்கப்படுகிற நாடகமாகும். எந்தையும் தாயும், தனது எல்லாப் பிள்ளைகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்பிய பின் அயலவர்களின் துணையோடு தனிமையில் வாழும் முதியவர் ஒருவரின் கதையை, அவரது பாத்திரத்துடன் வளர்த்துச் செல்லும் -நாற்சார வீட்டு நாடகம். நாடக ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை பெரியையா என்னும் பாத்திரம் தங்கு தடை இன்றி வளர்ந்து செல்கிறது.)***

***திரு.நா.சுந்திரலிங்கம அவர்கள் முன்பு ஒரு முறை உங்களது நாடக மாந்தர்கள்(Co.Operate Charector) (ஒன்றுக் கொன்று துணையாகும் பாத்திரங்கள் எனக் குறிப்பிட்டிருந்தார். மேற்குறித்த இரு நாடகங்கள் தொடர்பாகவும் அதன் பின்னர் எழுதப்பட்ட யார்க்கெடுத்துரைக்கேன் போன்ற நாடகங்கள் தொடர்பாகவும் உங்களது கருத்து என்ன?***

எனக்கு இரண்டு பிரச்சினைகள் இருந்தன. என்னுடைய ஆரம்ப கால நாடகங்களில் பாத்திரங்களை 'அழுத்த' வேண்டும் என்கிற நோக்கமே இருக்கவில்லை. சமூகத்தை பார்ப்பதும் அதன் குறைபாடுகளை சொல்வதும் தான் என் பிரதான நோக்கமாக இருந்தது. எனவே என் பாத்திரங்கள் ஆழமாக உருவாக்கப்படவில்லை. உருவாக்கப்படவும் கூடாது என்பது என் நோக்கமாக இருந்தது. எனது பாத்திரங்கள் சமூகத்தின் குறியீடுகளாகத் தான் வெளிப்படும். ஆயினும் என் நாடகங்களில் வரும் கதாபாத்திரங்கள் ஓரளவுக்கு ஆழப்பட்டும் தமக்கிடையே தனித்தனி வித்தியாசங்களை கொண்டனவாயும் இருந்திருக்கின்றன. பலர் இதை இனம் கண்டு கொள்ள வில்லை. ஆனாலும் ஒன்றுக் கொன்று துணையாகும் பாத்திரங்கள் Co-operate Charector என நா.சுந்தரலிங்கம் அவர்கள் கூறியது சரியே.

உதாரணமாகச் சமூகத்தின் ஒரு குணாம்சத்தை என் நாடகத்தில் சிலவேளை இரண்டு அல்லது மூன்று பாத்திரங்கள் வெளிப்படுத்தும் போது அவை ஒன்றுக்கொன்று துணையாகும் பாத்திரங்கள் எனக் குறிப்பிடப்படுவது சரிதான்.

''அன்னையிட்ட தீ'' டொக்டர் சிவயோகனின் தூண்டுதலால் எழுதப்பட்டது. நாடகம் முழுமையும் உளவியலை அடிநாதமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். ஆயினும் இதற்கு முன்னரேயே உளவியலை அடிப்படையாகக் கொண்ட ஓரிரு பாத்திரங்களை என் நாடகங்களில் அறிமுகப்படுத்தி இருக்கிறேன். ''மாதொரு பாகத்தில்'' அவ்வாறானதொரு பாத்திரம் வருகிறது. நாடகம் முழுமையும் ஒரு பெண்பிள்ளை கலவரத்தில் அடியுண்டு வந்தபிள்ளை-மேடையின் ஓர் பகுதியில் பேச்சின்றி மனம் பேதலித்த பிள்ளை போன்று இருப்பாள். நாடகத்தின் ஓர் கட்டத்தில் தான் திடீர் என உரத்து ''அந்தா வாறாங்கள்! கத்தியள் பொல்லுகளோடை வாறாங்கள்!! ஓடுங்கோ!!! ஓடுங்கோ!!!!'' எனக் கதறுவாள்.

அந்தப் பாத்திரம் கூடத் தனியே அந்தப் பிள்ளையை முக்கியப்படுத்தவில்லை. அவளை ஓர் குறியீடாகத்தான் கருதினேன். தமிழ் சமூகம் உளவியல்ரீதியாகச் சிங்கள சமூகத்திற்கு பயப்பிடுகிறது என்பதாக.

அதே நாடகத்தில் வேறும் பாத்திரங்கள் வருகின்றன. அவை பின்வருமாறு பேசும் ''சிங்களவரிலையும் நல்லவை இருக்கின''

ஆக, தனித்தனியே சிங்களவர்களில் எங்களுக்கு குரோதமோ பிரச்சினையோ இல்லை. ஆனால் அரசியல் ரீதியாகத் தமிழ் சமூகம், சிங்கள சமூகம், எனக் கருதும் போது பிரச்சினைகள் உள்ளன என்பதைத் தான் மாதொரு பாகம் என்னும் அந்த நாடகம் பேசியது.

ஆகவே எனக்கு தனிப்பட்ட பாத்திரங்களின் உளவியல் முக்கியமில்லை. சமூக உளவியல் தான் முக்கியம்.

பேராசிரியர் சிவத்தம்பியோடு உரையாடும் பொழுதெல்லாம் அவர் சொல்லுவார். ''பாத்திரங்களை கொஞ்சம் ஆழமாக யோசிச்சு எழுதிப் பார்'' என. அப்பொழுதுக்கு அதை மறுத்தாலும் மனத்தில் உள்வாங்கிக் கொண்டு பிற்பாடு யோசித்தேன். நான் வளர்த்து வந்த வடிவத்துக்கு உள்ளேயே பாத்திரங்களை ஆழமாக்க இயலாதா என. அவ்வாறு பாத்திரங்களை ஆழமாக்க முற்படும் போது யதார்த்தப் பண்பு உருவாகும். அதைத் தவிர்க்கிற அதே நேரம் எதிர் யதார்த்த வடிவத்தையும் வைத்துக் கொண்டு பாத்திரங்களை ஆழமாக்குவது எவ்வாறு என யோசித்தேன்.


இந்தக் காலப்பகுதியில் தான் சிவயோகன் அன்னையிட்ட தீயுக்கான முஸ்தீபுகளை தொடங்கிக் கொண்டு என்னிடம் வந்தார். உளவியல், உளவளத்துணை பற்றிய மருத்துவ அறிவு என்பன பற்றி அவருடன் நிகழ்ந்த நீண்ட உரையாடல் மிக முக்கியமானது. டிப்ளோமா செய்ததாலும் உளவியிலில் எனக்கு ஆர்வமிருந்ததாலும் சிவயோகனின் தூண்டுதலும் அறிவுப் பகிர்வும் எனக்கு நிரம்ப உதவி செய்தன.

இந்த நாடகமும் சமூகத்தின் பிரச்சினையைத் தான் சொல்கிறது. யுத்தத்துக்கு பின்னாக அல்லது அக்காலத்திலேயே மனிதர்கள் அடைகிற உளவடுநோயை அடிப்படையாகக் கொண்டதே அந்த நாடகம். நாடக வடிவம், சமூகத்தின் பிரச்சினையை முதன்மைப்படுத்துவதேதான். அதற்காக தனித் தனிப் பாத்திரங்களின் வளர்ச்சி புறக்கணிக்கப்படாமல் ஓரளவுக்கு வளர்க்கப்படுகிறது. ஆனால் நான் முழுக்க முழுக்க Realismக்குள் போகவில்லை. சமூகத்தின் ஓர் குறுக்கு வெட்டைத்தான் அந்த நாடகம் வெளிப்படுத்தியது.

ஆனால் எந்தையும் தாயும் அன்னையிட்ட தீயுடன் ஒப்பிடும் போது சிறிது வித்தியாசப்படுகிறது.

அந்த நாடகத்தில் பாத்திரங்கள் வளர்கின்றன. ஆனாலும் முழுக்க முழுக்க Realism ஆக விடாமல் நான் உடைக்கிறேன்.

பாத்திரம் ஒன்று நாடகத்துடன் வளர்ந்து செல்லும் போது பார்வையாளனின் மனவெளியிலும் அது வளர்ந்து செல்கிறது என்பதே அர்த்தம். ஆனால் அதை இடையூறு செய்யும் வகையில் வளர்ந்து செல்லும் அந்த பாத்திரத்தை விளங்கப்படுத்தும் வேலையை இன்னுமொரு பாத்திரத்தைக் கொண்டு நான் செய்து விடுவதும் உண்டு. பார்வையாளனாக விளங்கிக் கொள்ளட்டும் என விடுவதில்லை. மேற்கத்தைய யதார்த்தபண்பு போல் எமது யதார்த்தவாதப்



பண்பு இல்லை. எமது பண்பாடு சற்று வேறுபட்டது. நடைமுறை வாழ்வைப் பாருங்கள்! ஒருவன் மரண வீட்டில் துயரமுடன் குந்தியிருக்கிறான் அதனைப் பார்க்கும் இருவர் அவனை பார்த்தபின், அவன் துயரமாக இருக்கிறான் என்பதை உணர்ந்த பின்பும் கூட ஒருவன் மற்றவனுக்கு சொல்லுவான் ''பாவம் அந்த மனிசன் சரியா துக்கப்படுகிறான்'' என. இது எமது பண்பாடு. இந்தப் பண்பு எனது நாடகங்களின் பாத்திரங்களில் அவதானிக்கப்படுகிறது.

அன்னையிட்ட தீ, எந்தையும் தாயும் ஆகிய நாடகங்களிற்குப் பிற்பாடு எழுதித் தயாரித்தது, யார்க்கெடுத்துரைக்கேன் என்னும் நாடகம், அது எனது வழமையான நாடகங்களைப் போன்றதே. அகதிகளின் பிரச்சினையைத்தான் அந்நாடகம் குறியீடு செய்கிறது. அந்நாடகத்திலும் அன்னையிட்ட தீ போன்ற உளவியல் வடு கொண்ட பாத்திரங்கள் வருகின்றன. அகதிகள் என்போர் அழுகையினதும் கண்ணீரினதும் குறியீடுகள் என யாவரும் கருதுகின்றனர். நான் அதற்கு மாறுபாடாக இதுதான் எதிர்கொள்ளப்பட வேண்டிய யதார்த்த வாழ்க்கை; அதற்குள்ளும் சந்தோஷங்களையும் இனங்கண்டு கொள்வோம். அதேவேளை எங்களுடைய பிழைகளை சீர்கேடுகளை ''பீத்தல்களை'' விமர்சிப்போம் எனவும் கருதினேன். அதன் வெளிப்பாடு தான் அந்நாடகம். சிலருக்கு அகதி வாழ்வை நான் பார்த்த முறை பிடிக்கவில்லை. அகதி வாழ்வு ஆழமாகப் பார்க்கப்படவில்லை என...... அவர்கள் அறைகூறினார்கள்.

ஆனால் பிரச்சினைகளை மகிழ் நெறியாகச் சொல்லும் முறைமை கிரேக்க ரோம காலத்தில் இருந்தே அவதானிக்கப்படுகிறது. மேடையில் பாத்திரங்களைப் பார்த்து, அப்பாத்திரங்களின் முட்டாள்தனங்கள், விகடங்கள் என்பவற்றைப் பார்த்து பார்வையாளன் சிரிப்பான். உண்மையிலும் சமூகத்தில் நிலவும் குறைபாடுகள் சீர்கேடுகள் என்பனவற்றைத்தான் நடிகன் அளிக்கை செய்கிறான்; அதாவது பார்வையாளன் தன்னையே அரங்கில் காண்கிறான்; தன்னையே பார்த்துச் சிரிக்கிறான். இப்படிச் சிரிக்கும் பொழுது பார்வையாளனுக்கு தான் ஓர் அரைக் கடவுள் (Semi God) என்னும் நினைப்பு வருகிறது. இது அவனுக்கு மறுகரையில் துயரங்களினுள்ளும் தன்னம்பிக்கையை அளிக்கிறது.

இந்தப் பண்பைத்தான் நான் அந்த நாடகத்தில் கைக்கொண்டிருந்தேன்.

***மாயமானுடன் தொடங்கிய தெருவெளி அரங்கு பற்றியும் பின்னர் இன்று சிதம்பரநாதன் அவர் குழுவினருடன் செய்யும் அரங்கம் பற்றியும் உங்களது பார்வை என்ன?***

மாயமான் செய்த காலத்தில் 'வெளியில், அடைக்கப்படாத வெளியில் நாடகம் செய்கிறோம் என்பதாக இருந்தது. பார்வையாளரை சுற்றிவர கொண்டிருக்கும் பொழுது, நடிப்பு முறைகள் மாறுபட்டன வட்டக்களரி போல. மற்றயது அன்றைய கால அரசியல் பிரச்சினைதான் நாடகத்தின் கரு. தவிர ''மேளமடிச்சு'' பார்வையாளர்களுக்கு அறிவித்து நடிகர்களும் பார்வையாளர்களும் ஊர்வலமாகச் சென்று நடிப்பதற்கு பொருத்தமான இடத்தை தெரிவு செய்து நடிப்பர்.

மக்களை தமக்கு நெருக்கமாக கொண்டு வருவதே தெருவெளி அரங்கின் பண்பாகும்.

தற்பொழுது சிதம்பரநாதனின் நோக்கம் theatre என்பதற்கு அப்பாலும் சென்றுள்ளது.

அவர் அகதி முகாம்களுக்குச் சென்று சென்று நாடகம் செய்கிறார். தனது குழுவினருடன் நாடகம் செய்கிறார் எனச் சொல்வதை விடவும் கதைக்கிறார். அவரும் அவருடைய குழுவினரும், மக்களுடன் -பார்வையாளர்களுடன் சென்று உரையாட முன்னர், தங்களுக்குள் உரையாடிக் கொள்கிறார்கள். பின் மக்களுடன் உரையாடுகிறார்கள். அந்த அரங்கத்தினுள் அழகியலைத் தேட முடியாது.

ஒரு வகையில் இது ஒரு கட்புலனாகா அரங்கம். (Invisible theartre). இந்த வகையான அரங்குகளுக்கும் (Instant theartre) உடனடி அரங்குகளுக்கும் தேவையானது, நடிகனின் தெளிவான சமூகப் பார்வையும் ஆளுமையுமாகும். பார்வையாளனிடம் இருந்து எதிர் கொள்ளும் பிரச்சினைகளை பொறுமையுடனும் கூரறிவுடனும் (Wit) எதிர்கொள்ளும் திறன் நடிகனுக்கு அவசியமாகிறது.''மனிதர்களை உருவாக்குவதே நாடகத்தின் நோக்கம் என்பர். அதன் வழி சிதம்பரநாதன் குழுவினரின் முயற்சி எதிர்காலத்தில் வெற்றியளிக்க வேண்டும் என்பது என் ஆவல்

மறுபுறத்தில் Invisible theartre என்பது எமது சமூக அமைப்பில் சற்று கடினமான முயற்சி. மிகத் தீவிரமான பிரச்சினைகளின் மீது அந்த அரங்கம் கவனத்தை செலுத்தி, அவற்றை மக்கள் மத்தியில் கிளறி, தீர்வை நோக்கி உந்தும் போது கடுமையான பிரச்சினைகளை நடிகர்கள் பார்வையாளர்களிடம் இருந்து எதிர் கொள்ள நேரிடலாம்.

இவ்விடத்தில் ஒகஸ்ரா போலின் உதாரணம் பிரச்சினைகள் தொடர்பாக உரையாடத் தயாரான பண்பு ஓரளவுக்காயினும் வளர்ந்துள்ள மேலைத் தேசங்களுக்கு பொருந்தலாம். எங்களுக்கு...... ?

ஆனாலும் இவர்கள் மக்களுடன் நிறைய உரையாடுவதன் மூலம் அவர்களுக்கு நெருக்கமாகிறார்கள். கிராமங்களில் மக்கள் நிரம்பவும் ஒத்துழைக்கிறார்கள். அரங்கத்தை புரிந்து கொள்கிறார்கள். ''மானுடம் சுடரும் ஓர் விடுதலை'' ''பொய்க் கால்'' போன்ற தெருவெளி அரங்குகளில் அளிக்கைகளை இடையில் நிறுத்தி சிதம்பரநாதன் உரையாடுகிறார். பார்வையாளர் அபிப்பிராயங்களைப் பரிமாறுகின்றனர். பின்னர் நாடகத்தைத் தொடர்கின்றனர். கூத்துடன் இணைந்த பண்பாடு கிராமிய மக்களுக்குள் இருப்பதால் நாடகம் இடை நிறுத்தப்படுவது, தொடர்வது என்பன அவர்களுக்கு, அவர்களது அழகியல் அனுபவத்தில் குறுக்கீடு செய்யும் செயலாகப் படவில்லை.

கூத்து என்னும் மரபு வழி அரங்கு பார்வையாளரை மிகவும் சுதந்திரமானவராக விட்டு வைப்பதையும் மருட்கைகளுள் ஆழ்தாததையும் அவதானிக்கலாம். அதாவது அரங்கு மனிதனை விழுங்கவில்லை. அது மனிதனுக்குள் இருந்தது.

வெள்ளைக்காரன் மனிதர்களுக்குள் இருந்த அரங்கை பிரித்தெடுத்து நான்கு சுவர்களுக்குள் மேடைக்கு கொண்டு சென்றான். மனிதனுள் இருந்ததை பிரித்தெடுத்து மேடை வெளிச்சத்தினுள் அமிழ்த்தி எங்களை இருட்டினுள் இருத்தி. அந்நியமாக்கியதை நிராகரித்து திரும்பவும் சிதம்பரநாதன் Ritualக்குள் செல்லத் தலைப்படுகிறார்.

***இந்த உரையாடலை சம்பிரதாய பூர்வமாக முடித்து வைக்கும் கேள்வியை உங்களிடம் கேட்க விரும்புகிறேன்.***

***நெருக்கடிகளுக்கும் மன அழுத்தங்களுக்கும் முகம் கொடுத்து, யுத்தத்தையும் மரணத்தையும் எதிர்கொண்டு அவற்றில் இருந்து விடுபடப்போராடும் நம்தேசத்து படைப்பாளிகளுக்கு முடியில் நரையும் விழிகளில் பரிவும் தாங்கி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்.***

படைப்பாளியானவன் தன் சுய விளம்பரம் கருதியோ, சுய நன்மைகள் கருதியோ படைப்பாக்கத்தில் ஈடுபடுவதை நான் வெறுக்கிறேன். அதேநேரம் தன்மனச்சாட்சிக்கும் சமூகப்பொறுப்புணர்வுக்கும் பொருந்தி வருகிற படைப்புக்களை தனக்கு நன்மை ஏதும் கிடைக்காது என்பதாலோ,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொதுநலவாய அமைப்பு: பத்தாவது ஆங்கில இலக்கிய மாநாடு!

மூன்று வருடத்துக்கு ஒரு முறை நடைபெறும் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் பத்தாவது ஆங்கில இலக்கிய மாநாடு கடந்த ஒகஸ்ட் 14முதல் 18வரை கொழும்பு மாநகரில் நடைபெற்றது. ஆங்கில ஆட்சிக்குட்பட்ட சுதந்திரமடைந்த காலனித்துவ நாடுகள் பிரித்தானிய அரசின் தலைமையின் கீழ் ஏற்படுத்திக் கொண்ட பொதுநலவாய அமைப்பானது பொருளாதார, கலாசார ரீதியில் ஒட்டுறவுகளை வளர்த்து வுந்தது. ஆங்கில மொழி பொதுமொழியானதாலும் அவ்வவ் நாடுகளில் ஆங்கில மொழியின் செல்வாக்கும் பயன்பாடும், ஆங்கில மொழியாலே இலக்கியம் உருவாக்குமளவுக்கு வளர்ந்தமையாலும் அவை பற்றி உலக மாநாடு ஒன்றை நடாத்தி ஆய்வு செய்ய வேண்டிய தேவையை ஏற்படுத்தியது.

இன்று 'ஆங்கில இலக்கியம்' என்ற தொடரை விட 'ஆங்கிலத்தில் இலக்கியம்' எனும் தொடர் பயன்பாட்டில் உள்ளது. ஆங்கிலேயே சமூகத்தின் சமூக பொருளாதார பயன்பாட்டு வெளிப்பாடாக ஆங்கில மொழியில் எழுந்த, எழுந்துவரும் இலக்கியப் படைப்புகளுக்கு இணையாக ஆங்கில மொழி கோலோச்சிய நாடுகளில் உருவான எழுத்தாளர்கள் தத்தமது சமுதாயத்தை, சமூக பொருளாதார பண்பாட்டு அரசியல் பிரச்சினைகளை மையமாக்கி இலக்கியங்களை ஆங்கிலத்தில் படைக்கத் தலைப்பட்டனர். அவை பேசுகின்ற கதைப்பொருட்களாக, நவீன மனிதன் முகம் கொடுக்கும் இக்கட்டுக்களான புலப்பெயர்வு, கரந்துறைதல், இடப்பெயர்ச்சி, நாடுவிட்டு நாடு தாவும் நவீன நாடோடி வாழ்க்கை போன்றவை முக்கிய இடம் பெறுகின்றன. என்னதான் சொர்க்கம் புது உலகில் கிடைத்த போதும் தன் வேரைத் தேடும் மனித முயற்சி இலக்கியமாகிறது.


ஆங்கிலத்தை முதன் மொழியாகக் கொண்ட குடியேற்ற நாடுகளான அமெரிக்கா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா போன்றவற்றில் உருவாகின்ற இலக்கியங்கள் அவற்றுக்கேயுரிய ஒரு விதமான அனுபவச் செறிவையும் பரிணாமத்தையும் கொண்டிலங்குகின்றன. ஆசிய, ஆபிரிக்க நாட்டு சுதேச ஆங்கில எழுத்தாளர்கள் தங்களது நாடுகளின் பண்பாட்டுப்பின்னணியில் சமூக, பொருளாதார, அரசியல் முரண்பாடுகளை வெளிப்படுத்தி நிற்கும் இலக்கியங்களைப் படைக்கின்றனர். இங்கு ஆசிய நாட்டு எழுத்துகளுக்கும் ஆபிரிக்க மற்றும் கரிபியன் எழுத்துக்களுக்கும் இடையே காணப்படும் வித்தியாசங்கள் பண்பாட்டு ரீதியில் அமைந்தவை. இது நிதர்சனமானது.

இந்தியாவின் முக்கிய ஆங்கில இலக்கிய கர்த்தாக்களாக ஆர்.கே. நாராயண்,ராஜா ராவ் மற்றும் முல்க் ராஜ் ஆனந்த் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். ச்னோவ அச்சேபி, வோலே சோய்ங்கா, நுகூகி போன்றோர் ஆபிரிக்கக் கண்டத்து முக்கிய எழுத்தாளர்களாகப் பதிவு பெறுகிறார்கள். இலங்கையில் ஆங்கிலேயரான லெனாட் வூல்ப், அழகு சுப்பிரமணியம், ஜாஸ்மின் குணவர்தன, ஜீன் அரசநாயகம், கமலா விஜயரட்ண, ஆன் ரணசிங்க, ஜேம்ஸ் குணவர்தன ஆகியோர் கவனம் பெறுகின்றனர்.

இம்மாநாட்டினூடாக மைக்கேல் ஒன்டாஜி, ஷியாம் செல்லத்துரை, கார்முல்லர், லக்தாஸ விக்கிரமசிங்க, ரொமேஸ் குணசேகர போன்றோருடன் இந்திய எழுத்தாளர்களான நிசாம் இசக்கியல், பாரதி முகர்ஜி, அனித்தா தேசாய், ஆங்கிலோ இந்தியரான வி. எஸ். நாய்ப்போல் ஆகியோர் அடையாளம் காணப்படுகின்றனர். இவர்கள் பற்றிய விமர்சனக் கட்டுரைகளை அறிஞர்கள் பலர் மாநாட்டில் முன்வைத்தனர்.




''தீவுகளும் கண்டங்களும்' எனும் கருவில் மையங்கொண்ட மாநாட்டுக் கட்டுரைகள் இலக்கியக் கடலில் எவ்வாறு தீவுகளும், கண்டங்களும் இலக்கிய உருவகங்களாக உருமாறி உள்ளன என்ற பான்மையில் படிக்கப்பட்டன. இருநூறுக்கும் மேற்பட்ட இலக்கிய கர்த்தாக்கள், விமர்சகர்கள், பேராசிரியர்கள் கலாநிதிகள் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்து கலந்து கொண்டு தம் கருத்துக்களை வழங்கி, வாதப்பிரதிவாதங்களில் பங்கெடுத்தனர். குழு அமர்வில் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும், பொது அமர்வில் ஆற்றப்பட்ட சொற்பொழிவுகளும் பொதுநல அமைப்பு நாடுகளில் ஆங்கிலத்தில் இலக்கியம் பெற்றிருக்கும் பாரிய வளர்ச்சியினை எடுத்தியம்புவனவாக இருந்தன. பல உள்நாட்டு, வெளிநாட்டு எழுத்தாளர்கள் தத்தமது ஆக்கங்களிலிருந்து ஒரு சில பகுதிகளை கூடியிருந்த அறிஞர் குழாத்தினருக்கு அறிமுகஞ் செய்தமை இம்மாநாட்டின் விசேட நிகழ்வாக அமைந்தது. சுய அடையாளம் தேடி ஓடும் உள்ளங்களின் வெளிப்பாடுகளே நவீன இலக்கியத்தின் பாடுபொருளாக உள்ளது என்பது இங்கும் புறநடை அல்ல.




சிறந்த முறையில் நிகழ்ந்த இம்மாநாட்டில் எம் ஈழத்தமிழரின் பங்கு என்ன என்பது மனதைக்குடைந்த ஒரு கேள்வியாகும். ஆங்கில இலக்கியத்துக்கு அழகு சுப்பிரமணியம், தம்பிமுத்து, தம்பிராஜா, ஷியாம் செல்லத்துரை, ராஜா புரொக்டர், சுரேஷ் கனகராஜா, செல்வா கனகநாயகம் போன்றவர்களின் பங்கு கணிசமாக இருந்தபோதும், ஈழத்தமிழ் ஆங்கில எழுத்தாளர்களோ அறிஞர்களோ கலந்து கொள்ளாமை கவலைக்குரியதே. இருப்பினும் பூனா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ராஜ்ராவ், எமது ஈழத்தமிழ்ரான ஷியாம் செல்லத்துரையின் படைப்பு "Funny Boy" பற்றி ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார். மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கையர்கள் அவரது ஆய்வில் ஆர்வம் காட்டியமை கவனத்துக்குரியது.

இது ஈழத்தவரின் இன்றைய அரசியல் நெருக்கடியின் தன்னினச் சேர்க்கை எனும் நவீன பிரச்சினையையும் ஆய்கிறது. இங்கு வெளிநாட்டார் எமது இலக்கியங்களில் காட்டும் ஆர்வம் எம்மவர்க்கில்லை என்பது விசனத்துக்குரியது.

ஒரு மொழியின் வளர்ச்சியும், உலகில் அது பெறும் இடமும், அது எவ்வாறு பல்வேறுபட்ட சமூகங்களின் பண்பாட்டுக் கோலங்களையும், உணர்வுச் செவ்விகளையும், வாழ்வியல் முறைகளையும் தனக்குள்ளே உள்வாங்கிக் கொள்ளும் எனும் தன்மையிலேயே தங்கியுள்ளது. ஆங்கில மொழியின் பரம்பல் வரலாற்று ரீதியாகவே அதற்கு உலகளாவிய தன்மையை வழங்கியுள்ளது. ஆங்கில இலக்கியக்கடலில் கண்டங்களாகவும், தீவுகளாகவும் உருப்பெற்ற படைப்புகள் வேறுபட்ட இனங்களின் பிரச்சினைகளை அதனதன் பண்பாட்டுப் பகைப்புலத்தில் பதிவு செய்கிறது. இது ஆங்கில மொழியின் பல்தரப்பட்ட பரிணாமத்துக்கு இட்டுச்செல்கின்ற அதே வேளையில், இந்தப் பொதுமொழியின் உலகளாவிய தன்மை மனுக்குலப் பரிணாம வளர்ச்சியில் ஒரு பெரும் பாச்சலுக்கு வழிவகுக்கும் என்பது வெள்ளிடைமலையே.

–கந்தையா ஸ்ரீகணேசன்

---

தீர்த்தக்கரை இதழ்கள் ஐந்தையும் இலக்கியம் பற்றிய பிரக்ஞை உள்ள எவரும் மறந்து போயிருத்தல் முடியாது. இலங்கையின் சிறு சஞ்சிகைகளில் 'தீர்த்தக்கரை'யும் குறிப்பிடும்படியான பணியை ஆற்றியுள்ளது. பல ஆண்டுகளாக நிறுத்திவைக்கப்பட்ட பின்னர் 'நந்தலாலா' என்னும் பெயரில் புனர்ஜென்மம் எடுத்துள்ளது. தீர்த்தக்கரை நந்தலாலா என்னும் சொற்றொடர்களை நம்மனதில் ஆழப்பதித்துச் சென்றவர் மகாகவி பாரதி.




தீர்த்தக்கரை, நந்தலாலா ஆசிரியர் குழுவினரிடம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது - இன்னும் சொல்லப்புகின் பாரதியை வழிபடும் ஒரு போக்கு- அவ்விதழ்களை படிக்கும் எவருக்கும் புலனாகலாம்.

தீர்த்தக்கரையிலும், நந்தலாலாவிலும் வெளியான 13 கதைகளைத் தொகுத்து நந்தலாலா இலக்கிய வட்டம் அழகியதொரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறது. புத்தகவெளியீடுகளிலும், புத்தகவடிவமைப்பிலும் நல்லதொரு பங்களிப்பைச் செய்துவருகின்ற 'அன்னம்' இதை வெளிக்கொணர்ந்திருக்கிறது. ஐந்து எழுத்தாளர்களின் கதைகளை நாம் இத்தொகுப்பினூடு படிக்க முடிகிறது.

இந்த ஐந்துபேருமே பிரபல்யப்படுத்தப்படாதவர்கள். பிரான்சிஸ் சேவியர் ஏற்கனவே ஒரு நாவலை வெளியிட்டிருப்பதாக ஞாபகம். நாவலின் பெயர் ஞாபகமில்லை. பிரான்சிஸ் சேவியரின் கதைகள் மட்டும் வட, கிழக்குப்பகுதியில் தீவிரவாத இயக்கங்களின் ஆரம்பகால கட்டத்தின் நிகழ்வுகளை தொட்டுச் சொல்கின்றன. அவரது மூன்று கதைகளில் ஒன்று மட்டும் மலையகத்தை பிரதிசெய்கிறது. நாகசேனை தோட்டத்து நரசிம்மன் கங்காணி என்னும் அக்கதை ஒரு சிறுகதை என கொள்ளப்படக் கூடியது அல்ல. அது ஒரு நடைச் சித்திரம் மட்டுமே.

ஆனந்தராகவன்,ஏ.எஸ். சந்திர போஸ். கேகாலை கையிலைநாதன், ராமையா முருகவேள் ஆகிய ஏனைய நால்வரின் கதைகளும் பெரும்பாலும் மலையகத்தைப்பற்றி சில நிகழ்வுகளை, மலையக மக்கள் சில பேரைப்பற்றிய கதைகளை எமக்குச்சொல்ல முயல்கின்றன.

சில புதிய விஷயங்கள் சொல்லப்புகும் போது அவ் விடயத்தின் கதைக்கு ஏற்ப மொழியும் மாற்ற மடைகிறது. இத்தொகுப்பிலே உள்ள நல்ல கதைகளை எழுதியுள்ளவர் கேகாலை கையிலைநாதன். அதிக பிரயாசைப்பட்டு சொற்களைத் தேடாமல் மிக மென்மையான சொற்களில் வன்மை மிகுந்த நிகழ்ச்சிகளையும் வலிய மனிதர்களையும் பற்றிச் சொல்ல முனைகிறார் இவர்.இவர் நமக்குத் தந்துள்ள தண்ணீர் வற்றிடும், குளங்கள், மீண்டும் வசந்தம் வரும், காதலிலே இருகண்கள், வெண்ணிறத்தாமரைகள், தூரிகை என்னும் கதைகள் கட்டாயம் வாசிக்கப்பட வேண்டியவை. ஆனந்தராகவன் எழுதியுள்ள கதைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது இவரது கதை மாந்தர்களும் கதையின் சம்பவங்களும் இயல்பானவையாக இருப்பதைக் காணலாம். ஆனந்தராகவன் எழுதிய கதைகளில் சகல விஷயங்களிலும் ஒரு விதமான 'மிகை' காணப்படுகிறது.

கேகாலை கையிலைநாதனின் ஒரேயொரு பலவீன மாக எனக்குப்படுகிறது. என்னனெனில், அவரது, எல்லாக்கதைகளிலும் பாவிக்கப்படும் வார்த்தைகளும் அவ்வார்த்தைகளை தொகுத்தலும் முடித்தலும் கதையை நகர்த்திச் செல்லும் பாங்கும் ஒரே விதமாக இருத்தலேயாகும். அத்துடன் கதைகளிலிருந்து சில பகுதிகளை அவர் நீக்கினால், அல்லது அப்பகுதிகளை அவர் மிகச் சுருக்குவாராயின் அவரது கதைகள் மிகச் சிறந்த சிறுகதைகளாக அமையும் என்பது எனது கருத்து.

மற்றும் ஒரு முக்கியமான எழுத்தாளர். ராமையா முருகவேள். அவரது ஒரேயொரு கதை ''சிறுவன்'', இதில் படிக்கக்கிடைக்கிறது. ஒரு மலையக புத்திஜீவி தன் வாழ்வில் கைகூடாது போன விஷயங்களை நிறைவேற்றுதல் கூடும் என்னும் எதிர்பார்ப்புடன் அவன் மீதுகாட்டும் பரிவும், நம்பிக்கையும், அச்சிறுவனின் செயற்பாடுகளையிட்டு கொள்ளும் பச்சாதாபமும் மிக அச் சொட்டாக வடிக்கப்பட்ட ஒரு கதை.

இந்த ராமையா - முருகவேளும் கேகாலை கையிலைநாதனும் ஒரேஆள்தானா என்று ஒரு சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. இருவரும் கையாளும் மொழி ஒரே விதமாக இருப்பதே இதற்குக்காரணம்.

ஏ.எஸ்.' சந்திரபோஸ் எழுதிய என்று தணியும் இந்த ....! என்னும் கதையும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒன்றே. ஆரம்பகால ஜெயகாந்தனின் கதைகளின் தாக்கத்தை இக்கதையில் என்னால் உணர முடிந்தது.

இலகுவில் புறக்கணித்துவிட முடியாததும், அதேவேளை ''ஓஹோ'' என்று தூக்கிப்பிடிக்க முடியாததுமான ஒரு தொகுப்பு இது. இதில் எழுதியவர்கள் எதிர்காலத்தில் மலையகத்தைப்பற்றி இன்னும் தெளிவான இறுக்கமான சித்திரங்களை வரைவார்கள் என்றும் நம்பிக்கை கொள்ளவைக்கிறது இத்தொகுப்பு.

●

இலங்கை, இந்திய இடது சாரிகள் சறுக்கிச் சறுக்கிச் சென்ற வரலாற்றை நாம் அறிவோம். தீவிர இடது சாரிகளாக தம்மைக் காட்டிக் கொண்ட ஜெயகாந்தன் போன்ற கலைஞர்கள் இதற்கு பிரத்தியட்சமான உதாரணம்.

மெல்ல்க்கனவாய் பழங்கதையாய்.... என்னும் தலைப்பில் பா.விசாலம் என்னும் பெண்மணி ஒரு நல்ல நாவலைத் தந்திருக்கிறார். படித்துப் பாருங்கள். சுந்தரராமசாமியின் ஜே.ஜே. சில குறிப்புக்கள் போன்ற அதிபுத்திசாலித்தனமான கிண்டல்கள் இல்லாத, நீலபத்மநாதனின் தேரோடும் வீதி போன்ற தனிப்பட்ட காழ்ப்புணர்வுகளும், வசைபாடல்களும் இல்லாத ஒரு நாவல்.

தனது அதிருப்தியை எவ்வளவு இயல்பாய் வெளிப்படுத்த முடிகிறது இந்தப் பெண்மணியால்....!


●

ஆழ்வார்க்குட்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## ஓட்டமாவடி பிரதேச செயலாளரின் கடிதம்

ஓட்டமாவடி ப.நோ.கூ. சங்கத்தின் 46/1ன் விசாரணை அறிக்கை சம்பந்தமாக.

மேற்படி விடயம் தொடர்பாக, எனது சம இலக்கம் கொண்ட 24.07.95ம் திகதிய கடிதம் தொடர்பாக,

சங்கத்தில் தொடர்ந்து கடமையாற்றி வருகின்ற இவ்வியக்குனர், பொது முகாமையாளரும், நடைபெற்ற 46/1 விசாரணையின்படி பல முறையற்ற செயற்பாடுகளை செய்துள்ளனர். இவற்றில் இவ்வியக்குர்களும் குழு சங்கத்தின் உப விதியின் படி தனித்தும், ஒருமித்தும் பொறுப்புடன் செயற்பட வேண்டியுள்ளது. ஆனால் பல விடயங்களை ''தங்களுக்கு அறிவிக்கவில்லை'' என அவர்கள் குறிப்பிட்டிருப்பது சங்கத்தை திறமையற்ற வகையில் இவர்கள் வழிநடாத்தியதுடன், அக்கறையின்றி செற்பட்டிருப்பதையும் காணமுடிகின்றது. மற்றும் சங்கத்தின் பொது முகாமையாளரை எடுத்துக் கொண்டால் கொடுப்பனவு விடயங்களில் கணக்குப் பகுதி கனக்கு அறிவிக்கவில்லை. எனக் குறிப்பிடப்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதவிடயமாகும். ஏனெனில் சங்க ஆவணங்களை பார்வையிட்ட பின்னரே காசோலைகளில் கையொப்பமிட வேண்டும். அவ்வாறில்லாமல் தான் நினைத்தபடி நடவடிக்கை செய்யப்பணித்துவிட்டு (உதாரணம் படிவம் 05 போடல்) தான் தப்பிக் கொள்ள முயற்சிப்பது முறையற்றதாகும். இவை மட்டுமின்றி 46/1 விசாரணை அறிக்கையின் இணைப்பில் மட்டக்களப்பு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஜி101ம் இலக்க 16.01.91ம் திகதிய சுற்றுநிருபத்தையும் திருத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இவை அறிக்கையில் 258ம் பக்கத்தில் உள்ளது. இவற்றுடன் அதன் உண்மையான பிரதியும் அனுப்பி வைக்கப்படுகின்றது. மற்றும் விசாரணை முடிந்ததன் பின்னர் பின்வரும் முறையற்ற செயல்களும் நடைபெற்றுள்ளன.

1. 30.06.95ல் வரடாந்த இருப்பெடுப்பின் போசு எரிபொருள் நிலையத்தில் ரூபா.244417/91 சோர்வு. (குறிப்பிட்ட பணியாளருக்கு எதிராக இனனும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.)
2. கடந்த 27.07.95ல் களஞ்சியப் பகுதியிலிருந்து புனானை கிளைக்கு வினியோகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட நிவாரண சீனி 07 மூடை தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டது. (இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.)
3. நெற்சந்தைப்படுத்தும் சபையில் கொள்வனவு செய்யக் கோரிய தங்களின் மா/கூ/5-1ம் இலக்க 02.01.95.ம் திகதிய கடிதத்தைப் புறக்கணித்து விட்டு தனியாரிடம் 01கிலோ அரிசியை 12/= ரூபாப்படி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் காலப் பகுதியில் எறாவூர் ப.நோ.கூ. சங்கம் 01 கிலோ அரிசியை ரூபா 11/49படி கொள்வனவு செய்திருந்தது.

எனவே தான் திணைக்களத்தால் வழங்கப்படும் ஆலோசனைகளையும் புறக்கணித்து இச்சங்கத்தின் இயக்குனர் குழுவும் பொது முகாமையாளரும் சங்கவிதி, கூட்டுறவுச் சட்டம் போன்றவற்றுக்கு முரணான வகையில் செயற்படுகின்றனர். இவற்றின் அடிப்படையில் மிகவிரைவில் 46/1க்கான விளக்கத்தினை நெறியாளர் குழுவிடம் பெற நடவடிக்கை எடுத்து சிறந்த ஓர் நிருவாகத்தை தெரிவு செய்ய அல்லது நியமிக்க தங்களின் ஆலோசயையும், அனுமதியையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***பிரதேச செயலாளரும்,***
***பிரதி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாள***
***பிரதேச செயலகம், கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி.***

## 2 மணி நேரம்...

முடியாது என்பது யாழ் வாழ் பிறமத மக்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். நாங்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் எத்தனையோ தமிழ் மக்கள் எங்களுக்காக வாதிட்டனர். காரணம் கேட்டனர். ஆர்ப்பாட்டம் செய்தனர். அவையெதுவும் பயனளிக்கவில்லை. அவர்களுக்கெல்லாம் எனது இனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

1990ம் ஆண்டு வரை தமிழ் மக்கள் அனுபவித்த அத்தனை கஷ்டங்களையும் இழப்புகளையும் நாங்களும் அனுபவித்தோம். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 முஸ்லிம்கள் விமானத்தாக்குதலினால் பலியாகியதுட்பட 83 முஸ்லிம்கள் இறைவனடி சேர்ந்துள்ளனர். இவ்விடயம் அநேகருக்குத் தெரியாதிருக்கலாம்.

இன்று வடபகுதியில் உள்ள தமிழ் மக்கள் ஜீவமரணப்போராட்டம் நடத்துகின்றனர். ஐந்து வருடங்களுக்கு முன்னர் நாங்கள் எமது வீடுவாயில்களை இழந்து எவ்வாறு பரிதவித்தோமோ, அதே நிலையில் இன்று வடபகுதி மக்கள் உள்ளனர். இதனையிட்டு யாம் ஒரு போதும் மகிழ்ச்சியடையவில்லை. ஒரு தாய் ஈன்றெடுத்த பாசமுள்ள இரு பிள்ளைகளில் ஒரு பிள்ளை அல்லலுறும் போது மறுபிள்ளை கைகொட்டி வேடிக்கை பார்க்கமாட்டான். எனவே மதத்தால் வேறுபட்டு மொழியால் ஒன்று பட்ட எமது உடன் பிறவா தமிழ்ச் சகோதரங்களிற்கும், புலிகளினால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் 35 அப்பாவி முஸ்லிம் இளைஞர்களுக்கும் ஒரு விடிவு காலம் ஏற்பட வேண்டுமென எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திப்பதைத் தவிர வேறுவழி எனக்குத் தெரியவில்லை.

இத்தருணத்தில் ''தமிழினத்தை இறைவன் தான் காக்க வேண்டும்'' என பல வருடங்களுக்கு முன்னர் தந்தை செல்வா கூறியதை நினைவு கூறுகின்றேன். நாங்கள் வெளியேற்றப்பட்டு ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் கூட எம்மை மறவா சரிநிகர் பத்திரிகைக்கும், கட்டுரை வரைந்த பஞ்சமன், கவிதை படைத்த ஜெயபாலன், இதுகால வரை எங்களுக்காக குரல் கொடுத்த, கொடுக்கின்ற தமிழ்த்தலைவர்கள், தமிழ் இயக்கங்கள், பல்வேறு அமைப்புக்கள், குறிப்பாக எமது இனத்துக்காக இரவு பகல் பாராது உழைக்கும் ''வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பிற்கும் எனது சார்பிலும் யாழ் முஸ்லிம்களின் சார்பிலும் நன்றிகள் பல.

எமது தாயகமும் வடக்கே.

***கே.எம்.எஸ். ஹமீட்,***
***இளைப்பாறிய உப அதிபர்.***
***யாழ்/ஒஸ்மானியக் கல்லூரி***
***முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர்.***

## மறுபக்கம்...

'அது தயேடடரிலை பார்த்தால் தான் அப்படி இருக்கும்'

செல்லதுரையண்ணை குத்து விளக்கையும் கொழுத்திய படி வாய்க்குள் ஓர் தேவாரத்தையும் முணு முணுத்தபடி காரியத்தில் இறங்கினார். மண்டபத்தில் கதைகள் குறைய சாம்பிராணியும் கற்பூரமும் கலந்த புகை மெதுவாக படரத் தொடங்கியது.

செல்லத்துரையண்ணையின் சுண்ணத்துப் பாடலும், கதிர்காமரின் ஒப்பாரிப்பாடலும் யாரையும் அசையவிடாது கட்டி கண்களில மட்டும் கண்ணீரை நிறைக்கப் பண்ணிக் கொண்டிருந்தது.

'பழுத்த தோலும்-இளைத்த நரம்பும் இறுக்கிக் கட்டிய கூடடா.'

ஆனால் ஜெயா அண்ணைக்கு... தோல் பழுத்தோ? நரம்பு இளைத்தோ?? இல்லவேயில்லை.

நாட்டுக்கு வந்த நாள் தொடக்கம் அவரை அவருக்குள் வாட்டிய ஓர் விடயம்தான்.

'தப்பி வந்திட்டனோ'

தப்பி ஓடி வந்திட்டனோ'

'என்னை வளர்த்த அண்ணா குடும்பம் கஷ்டத்தில் இருக்க நான் மட்டும் தப்பி வந்திட்டனோ'

வந்து இங்கு சுக வாழ்க்கை வாழுகின்றனோ' அண்ணையாட்களை கூப்பிட முடியாமல் போனதிற்கு ஆயிரம் காரணங்கள், ஏழு பிள்ளைகளையும் அண்ணியையும் சேர்த்துக் கூப்பிடுவது இலேசான காரணமில்லை' அண்ணியை முதல் தனியக் கூப்பிட்டாலும் மூத்த இரண்டு பிள்ளைகளுக்கும் வயது பதினெட்டைத் தாண்டியிருந்தது.' ' அண்ணை கடைசி வரை தனிய வர மறுத்திட்டார், அண்ணையாக கொடுத்த வாழ்க்கையை நான் சுகமாய் அனுபவிக்க, அண்ணை அங்கு கஸ்ரப்பட நான் மடடும் இங்கு சுகமாய் வாழுறனோ'.

இந்த மன உளைச்சல் இத்தாலியில் 'சேர்க்கஸ்' கம்பனியில் வேலை செய்யும் போதேயே தொடங்கிய ஒன்று. தான் நல்ல சாப்பாடுகள் சாப்பிடும் போது, தான் நல்ல உடுப்புக்கள் போடும் போது, தனக்குப் பிள்ளைகள் பிறந்து அவர்கள் நல்லது உடுக்கும் போது - சாப்பிடும் போது, மேலாக தான் எந்த ஐரோப்பியச் சுகத்தையும் அனுபவிக்கும் போதும் அந்த உளைச்சல் கண்டு விடும். அன்று அவருள் அவராய் இருக்கமாட்டார். அந்த உளைச்சலுக்கு எல்லாம் பரிகாரம் தேடியது பணத்தினால்த் தான். தனக்கென்று ஓர் குடும்பம் இருப்பது என்று எண்ணமில்லாமல் தன்னால் முடிந்த எல்லாத்தையும் தமையன் குடும்பத்துக்கு செய்து வந்தார். வித்தியாவும் அதில் உள்ள தியாகத்தை உணர்ந்து மௌனமாக இருந்தாள்.

அவருள் எழுந்து அவரையே வாட்டும் அந்த மன உளைச்சலின் உச்சக்கட்டம்தான் நேற்று வந்த ரெலிபோன். வித்தியா வேறு வீட்டில் இருக்கவில்லை. கொழும்பு வந்த ஒருவர் சொன்ன தகவல் இது. ஜெயா அண்ணையின் மூத்த மகன் சசியை எட்டு நாளாகக் காணவில்லையாம். ஜெயா அண்ணை முழுக்க முழுக்க ஓர் வலது குறைந்தவர் போலானார். மனம் மட்டும் உளையத்தொடங்கியது. வீட்டை இருந்தால் இன்னமும் விசராய் இருக்கும் என்றதால் வேலைக்கு எப்படியும் போவது எனத்தீர்மானித்தார்.

சைக்கிள் ஓடும் போது - வேலைத்தளத்தில் இருக்கும் போது - எஞ்சின் தாளத்திற்கேற்ப போத்தல்களை எடுத்து அடுக்கும் போது- சாப்பாடு இடைவேளையின் போது- மீண்டும் வீட்டுக்கு வரும் வீதிகளில் எல்லாம் - அண்ணா.... சசி... அண்ணா...சசி.... அண்ணா.... சசி..... உங்களையெல்லாம் உப்பிடித் தவிக்க விட்டுத் தான் மட்டும் 'தப்பிவிட்டேனோ' 'தப்பிவிட்டேனோ' 'தப்பி விட்டடேனோ'

''தம்பி அப்பாவுக்கு விபூதியை பூசிவிட்டு காலடியில் விழுந்து கும்பிடுங்கோ'

அந்த நாலு வயதுப் பலகனின் பரிதாபத்தைப்பார்ப்பதற்கு வந்திருந்த அனைவருமே வாய்விட்டு அழுதார்கள்.

ஊருக்குப் போகவேணும் அண்ணையைப் பார்க்கவேணும் அண்ணையின் பிள்ளைகளையெல்லாம் நல்லாக்க வேணும் எண்டு சொன்னியளே, இப்ப எங்கே போறியள்?'' என்ற வித்தியாவின் கடைசி ஒப்பாரியில் அங்கிருந்த அனைவரும் ஓர் செத்தவீட்டில் இருந்ததாக உணர்ந்தார்கள். ஜெயா அண்ணையின் கடைசிப் பயணம் ஊரத்தொடங்கியது.

*'(உணர்வுகளைத் தவிர யாவும் கற்பனையே.)*

**நன்றி: 'சஞ்சீவி'**

## முற்றும் பொய்!

நவம்பர் 2 நவம்பர் 15 காலப்பகுதிக்காக, தங்களால் வெளியிடப்பட்ட 84வது சரிநிகர் பத்திரிகையின் கடைசி பக்கத்தில் வெளியான ''அரிசி மூட்டையை தணிக்கை செய்யும் ஓட்டமாவடி பல. நோக்குக் கூட்டுறவுச் சங்கம்'' என்ற செய்தி முற்றிலும் தவறானதாகும்.

அரிசிக் கொள்வனவில் எமது சங்கத்திற்கும், கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்திற்கும் (C.W.E) எந்தவித சம்பந்தமுமில்லை. அரிசி கொள்வனவு செய்வது மட்டக்களப்பு நெற்சந்தைப்படுத்தும் சபையினரிடமிருந்து தான். அதுவும் ஓட்டமாவடி பிரதேச செயலாளரான கூட்டுறவு பிரதி ஆணையாளரின் பணிப்புரையின் பேரிலும், மேற்பார்வையாளரின் கீழுமே அரிசிக்கொள்வனவு செய்யப்படுகிறது. இதில் சங்கத்தின் எந்த உயர் பீடத்தினரும் சம்பந்தப்படுவதில்லை.

இவ்வாறான நிலையில் அரிசிக்கொள்வனவு செய்யப்படும் போது, குறித்த செய்தியாளர் கூறியது போன்ற ஊழல், மோசடிகள் இடம்பெற வழியுமில்லை. அவ்வாறான ஓர் நிகழ்ச்சி இதுவரை இச்சங்க வரலாற்றில் இடம்பெறவுமில்லை. ''தணிக்கை செய்யப்பட்ட அரிசி களஞ்சியத்தில் உறங்குகின்றன'' என்று அடித்துச்சொல்லியிருந்தார் குறித்த செய்தியாளர். அவரென்ன எங்களின் களஞ்சியக் காப்பாளரா? அல்லது தணிக்கை செய்வதை நேரடியாகக் கண்டாரா? எங்களின் களஞ்சியத்தில் இவ்வாறான அரிசி ஒரு கிலோவை அவரால் காட்டமுடியுமா?

மற்றும் அரசியல் பிரச்சினைகளையும் இவர் கிளறிவிட முயன்றுள்ளதை குறித்த செய்தி கூறுகின்றது. எமது சங்கப் பணிப்பாளர் சபைக்கும் ஓட்டமாவடி முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் எவ்வித விரோதமோ, பகையோ இல்லை என்பதை கூறிவைக்க விரும்புகிறேன்.

***கூட்டுறவு பொது முகாமையாளர்,***
***ஓட்டமாவடி ப.நோ.கூ.சங்கம்.***

## ஏன் இந்த நிலை?

கல்வி கற்பதற்காக மொஸ்கோ சென்றிருந்தேன். இங்கு ஏஜென்ஸிக் காரர்களால் ஏமாற்றப்பட்ட ஏராளமானோர் இருக்கின்றனர். இவர்கள் ஏஜென்ஸியிடம் இழந்த பணத்தையோ, இங்கு வந்ததற்கான எந்த வித உத்தரவாதத்தையோ பெறமுடியாதவர்களாக உள்ளனர். இலங்கையர்களின் நலன்களைக் காக்கவென அமைக்கப்பட்டிருக்கும் தூதரகத்திலும் இவர்கள் நிறையப் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள்.

பிரச்சினைகளைப் பற்றி சொல்வதற்காக தூதரகம் சென்றால் தூதுவரை சந்திக்கமுடியாத நிலை. எதையும் கடிதம் மூலம்தான் தெரிவிக்கவேண்டுமாம். ஏஜென்சிக்காரர்களின் மோசடி விஷயத்திலும் இதே கதைதான். கடிதம் மூலம் முறைப்பட்டதன் பின் ஏமாற்றிய ஏஜென்ஸியை தூதரகம் அழைத்து விசாரித்தார்கள். அதற்கு அவர் தான் கொழும்பைச் சார்ந்தவர் என்வும் அவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள் அதனால்தான் என்னிடம் பணம் கேட்கிறார்கள் எனவும் கூற பிரச்சினை எதுவித தீர்வுமில்லாமல் நழுவியது.

சான்றிதழ் பெறப்போனால் தமிழர்கள் என்பதாலும், தமிழர்கள் பற்றி கொடுத்திருக்கின்ற பொய்யான தகவலாலும் அதைப் பெறமுடியாத நிலை. சான்றிதழ் கேட்டால் பொலிஸ் சான்றிதழ் கேட்கிறார்கள். சிங்களவர்களுக்கு இந்த நிலை இல்லை. அவர்கள் வேண்டியதை உடனே பெற்றுக்கொள்கிறார்கள். இதற்குக் காரணம் அங்கு உயரதிகாரிகளாக இருப்பவர்கள் பலர் சிங்களவர்கள். இருக்கின்ற ஒரே தமிழதிகாரியாலும் (கே. சபாரட்ணம்) ஒழுங்காகச் செயற்பட முடியாத நிலையுள்ளது எல்லாம் எனலாம். (விமல் டி சில்வா) என்பவரின் ஆதிக்கத்திற்குள்ளேயே உள்ளது. தூதுவரை (என். எம்.மெ.ஐ. ஹுசைன்) சந்திக்க விடாமல் தடுப்பதும் இவரே.

உள்நாட்டில் பிரச்சினை என்று வெளிநாடு வந்தால் இங்கும் அதேவகையான பிரச்சினை. இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு வெளிநாட்டு அமைச்சு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, தூதரங்களில் நியமிக்கப்படுவோர் பரந்தமனப்பான்மையுடனும், மொழியடிப்படையில் சம அந்தஸ்தோடு செயற்படுபவர்களாகவும் இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

**சிவனேசன்**
**கொழும்பு.**

## உங்களால் உதவ முடியுமா?

மூன்று பிள்ளைகளின் தந்தையாகிய நான் அராலியில் நடந்த விமானக்குண்டு வீச்சினால் எனது வலது காலை 1990ல் இழந்து விட்டேன். இப்பொழுதுஎன்னால் ஒரு தொழிலும் செய்யமுடியாத நிலை. அண்மையில் அராலியில் நடந்த இராணுவ நடவடிக்கையினாலும் என்னிடமிருந்த ஒரு சில உடமைகளையும் இழந்து விட்டேன். வெளிநாட்டில் வசிக்கும் உறவினர் ஒருவரின் சிறு உதவியுடன் மட்டுமே எனது சீவியம் நடைபெறுகின்றது. அவர் அனுப்பும் பணம் மூலம்தான் சீவியம் நடைபெற்றது. இப்பொழுது 4மாதத்துக்கு மேலாக வடபகுதிக்குரிய தபால் பொதிகள் அனுப்பப்படாததால், எங்களுக்குப் பணம் வந்துசேரவில்லை. இதனால் எனது குடும்பம் ஒரு நேர உணவுக்குக் கூட கஷ்டமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மேலும் தபால்கள் வருவது தாமதித்தால் நாங்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்வது நிச்சயம். தயவுசெய்து எங்களைக் காப்பாற்ற முடியுமா? எங்களுக்கு வரவேண்டிய தபால்பொதிகளை அரசாங்கம் அனுப்புவதற்கு உங்களால் ஆன உதவிகளை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

***கு. வைகுந்தநாதன்,***
***அராலி வடக்கு,***
***வட்டுக்கோட்டை.***

## அரசின்...

பியவர்கள் வடக்கு யுத்தம் தொடர்பாக மௌனநிலையையே கடைப்பிடிக்கின்றனர். புலிகளை தோல்வி அடையச் செய்வதே இவர்களது குறிக்கோள். தமிழ் - மக்களுடைய பிரச்சினைக்கு வைக்கப்படும் நியாயமான தீர்வின் ஊடாகவே புலிகளைத் தோற்கடிக்க வேண்டுமே தவிர யுத்தத்தினால் அல்ல. சமாதானப் போராட்டக்காரர்கள், வெண்தாமரை இயக்கத்தினர்கள் ஆகியோரிலிருந்து நான் இவ்வாறுதான் வேறுபடுகிறேன்.

பொ.ஐ.ஐ.மு.யின் தந்திரங்கள் தொடர்பான சிறு குறிப்பொன்றை ரஞ்சித் தேவசிறி செப். நவ. பிரவாத (சிங்கள) சஞ்சிகையில் இவ்வாறு எழுதியிருந்தார். ''அரசாங்கம், தமிழர்களுக்கும் சர்வதேசங்களுக்கும், கூறுவது என்னவென்றால் அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்த வேண்டும் எனின் புலிகளைத் தோற்கடிக்க வேண்டும்'' என்றாகும்.

மறுபக்கத்தில் சிங்கள மக்களுக்கு கூறுவதென்னவென்றால் ''யுத்தத்தை வெல்வதற்கு சர்வதேச ஒத்துழைப்பும் அவசியம். இவ் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ள இவ்வாறான அரசியல் தீர்வு அவசியம்'' என்றாகும். இதன்படி குறிக்கோள் தீர்வை நடைமுறைப்படுத்துவது அல்ல யுத்தத்தை வெற்றிக் கொள்வதாகும். அரசாங்கம் கொண்டிருக்கும் இம் முரண்பாடு மிகவும் மோசமான விளைவுகளைத் தரவல்லதாகும்.''

இங்கு அவர் குறிப்பிடுவது அரசாங்கத்தின் இரட்டை நிலைப்பாட்டை ஆகும். இவ்வாறான இரட்டை நிலைப்பாடு பயங்கர விளைவை ஏற்படுத்தும் என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை. கருத்துவாத குருடர்களுக்கு இது விளங்காவிட்டாலும், சுய புத்தியில் தொழிற்படும் அனைவருக்கும் இது விளங்கியிருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

## இவர்களுக்கு என்ன நடந்தது?

'ரிவிறச' இராணுவ நடவடிக்கை யாழ் நகரை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. புலிகளால் தாட்டு வைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றுவதிலும், கைப்பற்றிய பிரதேசங்களை பலப்படுத்துவதிலும் இராணுவம் மிகவும் தீவிரமாக இயங்கி வருவதாக இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க அறிவிக்கின்றார். நாளொன்றுக்கு 300 மீற்றர் தூரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட தூரத்தையே இராணுவத்தினர் கடந்து நிதானமாக ஆனால், உறுதியாக முன்னேறுகின்றனர் என்று அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையின் வெற்றி குறித்து தென் இலங்கையின் பத்திரிகைகள் குறிப்பாக, சிங்களப் பத்திரிகைகள் நம்பைக்கையூட்டும் செய்திகளை மகிழ்ச்சியுடன் வெளியிட்டு வருகின்றன. இந்த தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்பாக வெளியிடப்படும் செய்திகள் படையினருக்கு மனச்சோர்வை கொடுக்கக் கூடாது என்பதில் அவை மிகுந்த கவனம் செலுத்தி வரு ின்றன. அரசாங்கத்தின் மற்ற நடவடிக்கைகளை விட அதன் யுத்தம் தொடர்பான நடவடிக்கைகளை இப்பத்திரிகைகள் வெளியிட்டு வரும் விதமும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தவுக்கு வழங்கி வரும் முக்கியத்துவமும் ஜனாதிபதிக்கே எரிச்சலூட்டும் அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளன. யுத்தத்துக்கு வழங்கப்பட்டு வரும் முக்கியத்துவத்தின் முன்னால் நாட்டின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்கு எந்தவித முக்கியத்துவமும் இல்லாமலே போய்விட்டது.

இந்தப் போக்குக்கு, இந்த நாட்டின் ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் மீளக் கொண்டுவரவேண்டும் என்பதற்காக, முன்னைய ஆட்சிக் காலத்தில் இயங்கிய, போராடிய பல மாற்றுப் பத்திரிகையாளர்களும், புத்திஜீவிகளும் கூட பலியாகியுள்ளதாகத் தெரியவருகிறது. பிரபல மாற்றுச் சிங்களப் பத்திரிகை ஒன்றைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் இருவர் அண்மையில் சரிநிகருடன் பேசும் போது, யுத்தத்தை நிறுத்துமாறு கோருவது நடமுறைச் சாத்தியமற்றது என்றும், யுத்தத்தை நிறுத்தும்படி கூறுவது பிரபாகரனை பலப்படுத்தும் நடவடிக்கையாகும் என்றும் கருத்துத் தெரிவித்தனர். சிங்கள இனவாதத்திற்கு எதிராக தாம் பெருமளவு போராட்டங்களை நடாத்தி வந்துள்ளதாகவும், அது இப்போது கிட்டத்தட்ட செத்த பாம்பாகி விட்டதாகவும், இப்போதுள்ள பிரதான விடயம் தமிழ் இனவாதத்திற்கு எதிராகப் போராடுவதே என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

உண்மையில் தமிழ் இனவாதம் என்று இவர்கள் இனம் கண்டுள்ள விடயம் என்ன என்பது தொடர்பாக பேசுகையில், புலிகளது தமிழீழத்துக்கான கோரிக்கையின் காரணமாக தமிழ் மக்களது நலன்கள், உரிமைகளைப் பற்றிய எல்லாக் கோரிக்கைகளுமே இனவாதத்தின் பாற்பட்ட விடயங்களாகவே இவர்களுக்குப் படுகின்றன என்று தெரியவந்தது. யுத்தத்தை நிறுத்துமாறு கோருவது அகதிகளுக்கான நிவாரணங்களை அனுப்புமாறு கோருவது அத்தியாவசிய, தடை செய்யப்பட்ட பொருட்களை வடக்கே கொண்டு செல்ல அனுமதிக்குமாறு அரசிடம் கேட்பது என்பனவெல்லாம் புலிகளைப் பலப்படுத்த கோரப்படும் கோரிக்கைகளாகவே கொள்ளப்படுகின்ற துரதிஸ்டமே இங்கே நிலவுகின்றது. யுத்தத்தை ''மனிதாபிமான அடிப்படையில்'' நடாத்துவது பற்றி இவர்கள் பேசுகின்ற போதும் நடைமுறையில் ''புலிகளுக்கும் சுவறிவிடும்'' என்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள தடைகளை நியாயப்படுத்துவதிலேயே இவர்களும் போய் நிற்கிறார்கள்.

மனிதாபிமான யுத்தம் என்பது ஒன்றுக்கொன்று முரணான ஒரு எதிர் எதிர் கோடிகளைச் சேர்ந்த விடயங்களின் சேர்க்கையாகும். அதுவும், ஒருநாட்டிலே சிவில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அரசு ஒருபோதும் சொல்லமுடியாத செய்ய முடியாத ஒரு விடயமாகும். இன்றைய நிலையில் மனிதாபிமானம் என்பது யுத்தத்தை நிறுத்துவதன் மூலம் மட்டுமே நிறுவப்படக் கூடிய ஒன்றாகும்.

உண்மையில், தமிழீழம் கோரி புலிகள் போரிடுவதும், அதை வழங்க முடியாது என்று கூறி அரசு யுத்தத்தில் ஈடுபடுவதும் அவரவர் அரசியல் நிலைப்பாட்டில் நின்று நியாயப்படுத்தப்படக் கூடியவை தான். காலம் காலமாக ஒடுக்கப்பட்ட, அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டு இரண்டாம் தர பிரஜைகள் நிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள் என்ற முறையில் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து புலிகள் போன்ற ஒரு அமைப்பு உருவாகுவதும் போராடுவதும் ஆச்சரியமான விடயமல்ல. அவ்வாறே முழு இலங்கையையும் சிங்கள மக்களதே என்று கூறி இனவாதத்தை தனது அரசியல் இருப்புக்கான அடிப்படைகளாகக் கொண்டுள்ள இலங்கை அரசு போன்ற ஒரு அரசு இவ்வாறான ஒரு யுத்தத்தை எதிர்ப்பது ஒன்றும் புதுமையான விடயம் அல்ல.

ஆனால் இவற்றை புரிந்து கொண்டு, நாட்டிற்கும் மக்களுக்கும் மாபெரும் சுமைகளை ஏற்படுத்தி வரும் யுத்தத்தை தவிர்க்கவும், ஏற்பட்டுள்ள முரண்பாட்டை அரசியல்ரீதியாக தீர்த்து வைக்கவும் வேண்டும், அப்படிச் செய்ய முடியும் என்று கூறி அதற்காக பாடுபட்டு வந்த இப்பத்திரிகையாளர்க்கும், பிற புத்திஜீவிகளுக்கும் இப்போது என்ன நடந்து விட்டது? இந்த யுத்தத்தில் அரசின் பக்கம் நியாயம் இருப்பதாக கூறி, இலங்கை அரசாங்கத்தின் வெற்றியை தமது வெற்றியாக கொண்டாட இவர்களுக்கு எப்படி முடிகிறது?

இன்றுள்ள யுத்த வெற்றி நிலை - யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவது --மகிழ்ச்சியூட்டும் ஒரு விடயமே என்று ராவய பத்திரிகை கூட எழுதுகிறது.

உண்மையில் இதற்கு இரண்டு காரணங்கள் தான் இருக்க முடியும்.

ஒன்று; இந்த யுத்தத்தின் பின்னால் எழுந்து வரும் இனவாத அரசியல் எழுச்சியின் போக்குடன் ஒத்துப்போகாமல் எதிர்க்கும் தமது பலத்தை இவர்கள் இழந்துவிட்டிருக்க வேண்டும். அதாவது இன்றைய வெற்றியை தமிழர்களுக்கெதிரான சிங்களவரது வெற்றியாக காட்டி வரும் போக்குடன் இவர்கள் தம்மை சமரசம் செய்து கொண்டிருக்க வேண்டும்.

அல்லது நடப்பில் உள்ள அரசாங்கத்தை இன்னமும் தமது அரசாங்கமாக, நாட்டில் ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் மீட்டுத் தரும் அரசாங்கமாக ஒரு புரட்சிகரமான அரசாங்கமாக நம்பிக் கொண்டிருக்க வேண்டும். இதனால் அதன் புரட்சிகர நடவடிக்கைக்கு ஆதரவு தருவது அவசியம் என்று கருத வேண்டும்.

ஆனால் இந்த இரண்டும் உண்மையல்ல என்பதை இன்று விளங்கிக் கொள்ள இவர்களுக்கு முடியாமல் இருக்கலாம். ஆனால் பரிதாபம் என்னவென்றால், காலம் கடந்து இவர்கள் இதை விளங்கிக் கொள்ளும் போது இந்தப் போக்குகளினால் இவர்கள் விழுங்கப்பட்டிருப்பார்கள்.

எனவே, நிகழ்ச்சிகளின் போக்கில் இழுபட்டுச் செல்லாமல் அவற்றில் இருந்து விடுபட்டு நின்று அவற்றை பார்க்கத் தவறக் கூடாது.

அப்போது தான் ஜனநாயக முற்போக்குக்கு இவர்கள் தம்மை அர்ப்பணித்துள்ளதற்கு உண்மையான அர்த்தம் உண்டு.




திருமலை நகரில் பொலிஸாரின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னரைவிட தீவிரமடைந்து வருகின்றன. திருமலை நகருக்குள் அடிக்கடி இடம் பெற்றுவரும் கொலைகளில் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பதனால் அவர்கள் நகருக்குள் ஊடுருவியிருக்கிறார்கள் என்ற சந்தேகம் பொலிஸாருக்கு இருந்து வருகிறது. இதனால் அவர்கள் அடிக்கடி சுற்றிவளைப்புக்களை புதுப்புது முறைகளில் மேற்கொள்கின்றனர்.

தற்போது பஸ்களில் வரும் பொலிஸார் வீதிகளில் மறைந்து நின்று வருவோரையும் போவோரையும் மறித்து பஸ்களில் ஏற்றுகின்றனர். இதில் பாடசாலை மாணவர்கள் உட்பட அவர்களின் சந்தேகத்துக்குட்படும் அனைவரும் ஏற்றப்பட்டு குப்புறப்படுக்க வைத்து தாக்கப்படுகின்றனர். திருமலை மாவட்ட அடையாள அட்டை இல்லை எனின் அவர் சற்று விசேசமாகக் கவனிக்கப் படுவாராம். இந்த அதிரடிக் கைது நடவடிக்கையில் தீவுப்பகுதியிலிருந்து வந்து லொஜ் ஜொன்றில் தங்கியிருக்கும் தமிழ் ஆயுதக் குழுவொன்று சம்பந்தப்பட்டிருக்கிறது என்பது பரவலாக அறியப்பட்டிருக்கிறது. இவர்கள் முகமூடியணிந்து தங்கள் காட்டிக் கொடுப்புக் கைக்காரியங்களை செய்து வருகின்றனர். சில வேளைகளில் ஆட்டோக்களிலும் வந்து திடீரென இறங்கி ஆட்கனள் அள்ளிச் செல்கின்றனர்.

நவம்பர் மாத இறுதிவரையே இவ்வாறான சுற்றிவளைப்புகள் ஏற்படும் என்று பொலிஸார் தெரிவித்திருப்பினும் தமிழ்க் குழுவின் அதிரடி நடவடிக்கையால் மக்கள் பெரிதும் பாதிப்புற்றிருக்கின்றனர்.

## யாழ் ஆஸ்பத்திரி வடமராட்சிலும் தென்மராட்சியிலும்

வடமராட்சி, தென்மராட்சி தவிர்ந்த அனைத்து குடாநாட்டு வைத்தியசாலைகளும் மூடப்பட்டுள்ளன. யாழ்.போதனை வைத்தியசாலையின் ஒரு பகுதி, பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கும் (மந்திகை) மறுபகுதி, சாவகச்சேரி வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்டுள்ளது. ஆனால், நடைமுறைப்பிரச்சனைகளினால், யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள சகல உபகரணங்களும் மேற்குறிப்பிட்ட இரு வைத்தியசாலைகளுக்கும் மாற்றப்பட முடியாது என்பது தெரிந்ததே. இந்நிலையில், இவ்விரு வைத்தியசாலைகளும் போதிய வசதிகளற்றவை என்பது தெளிவானது.

குடாநாட்டில் இருந்து பாரியளவில் மக்கள் இடப்பெயர்ச்சி நடைபெறுவதால், வைத்தியசாலை ஊழியர்கள் பலவாறு சிதறுண்டுள்ளனர். இதனால் எல்லா ஊழியர்களும், எல்லா நேரமும் வேலைக்குச் சமூகமளிப்பார்கள் என எதிர்பார்க்க முடியாமல் உள்ளது. அத்துடன் அரசாங்கம், கடந்த நான்கு மாதங்களாக, வங்கிகளுக்குப் பணம் அனுப்பாமையினால், சம்பளங்கள் ஒழுங்காக வழங்கப்பட முடியாமல் உள்ளது. இவ்வாறான பிரச்சினைகளால் இவ்விரு வைத்தியசாலைகளதும் வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

## இராணுவத்தின் வெற்றியை நம்பி முஸ்லிம்கள் பலியாகக் கூடாது!

'ரிவிரச' நடவடிக்கைகளின் போது இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை குடியமர்த்தப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது பற்றி வடக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பின் முக்கிய பிரதிநிதி ஒருவர் வெளியிட்ட கருத்துக்களை இங்கே தருகிறோம்.

''.... இவ்வாறான ஓர் நிலையுடன் வடக்கு முஸ்லிம்கள் உடன்படமாட்டார்கள் அல்லது உடன்படக்கூடாது என்பதே எமது அபிப்பிராயம். உண்மையில் இராணுவம் இன்னும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றவில்லை. யாழ்ப்பாண நகரம் குறிப்பாக சோனகத்தெருப்பகுதியே யாழ் முஸ்லிம்கள் வாழ்ந்த பிரதேசம். இப்போது கைப்பற்றப்பட்டவை முஸ்லிம்கள் வாழ்ந்த பிரதேசமல்ல. இராணுவத்தின் இந்த வெற்றியை நம்பி முஸ்லிம்கள் பலியாவது நல்லதல்ல. அத்துடன் வடக்கு முஸ்லிம்களின் தீர்வு அரசுடனானதும் புலிகளிடனானதுமான பேச்சு வார்த்தைகள் மூலம் பெறப்படுவதையே விரும்புகிறோம். அவர்களின் (புலிகளின்) கை ஓங்கியிருந்த நேரத்தில் விரட்டப்பட்ட நாம் இவர்களின் 'கை' ஓங்கியிருக்கிற நேரத்தில் குடியமர்த்தப்படுவதானது (எங்களுக்குப்) பாதுகாப்பானதல்ல. பிரபாகரன் நேற்றைய (26.11.95) BBC தமிழ்சேவைக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு கூறியிருக்கிறார்...'' இது எங்களது தற்காலிகப் பின்னடைவே. இந்திய இராணுவத்துடனான மோதல்களின் போதும் இப்படி ஏற்பட்டது. பின்னர் நாம் எமது இராணுவ நடவடிக்கைகளால் மீண்டும் பலம் பெற்றோம். அதுபோல் இதிலும் நாம் வெற்றி பெறுவோம்....''

மீண்டும் புலிகளின் வசம் இராணுவம் கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள் வரும் என்ற நம்பிக்கை எங்களை விரட்டிய புலிகளின் தலைவருக்குண்டு. எனவே... இப்போது எடுக்கப்படும் குடியேற்ற முடிவுகள் எங்களுக்குப் பாதகமானதாகவே அமையும். இது விடயத்தின் முஸ்லிம்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும். அரசு புலிகள் மூலம் சமரசத்தீர்வு காணப்பட வேண்டிய ஒரு முக்கிய பிரச்சினையாக மாறியுள்ள வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் பிரச்சினை ஒரு நிரந்தரத் தீர்வு பெறும்வரை இவ்வாறான தற்காலிக, பாதகமான முடிவுகளுக்கு முஸ்லிம்கள் உடன்படக் கூடாதென்பது எனது நிலைப்பாடும் வேண்டுகோளுமாகும்....''

## பணிச்சபையைமிரட்டுகிறாாம் பாதிரியார்!

திருமலை. உமர் மலை குழந்தை இயேசு ஆலய பங்கு மேய்ப்புப்பணிச் சபையின் முன்னாள் உறுப்பினர் ஜோர்ஜ் அருள்நாதர், "கத்தோலிக்க குருக்களின் பிரச்சினையில் நீ தலையீடு செய்வதை உடனடியாக நிறுத்தாவிடில் ஒரு கிழமைக்குள் இல்லாது ஒழிக்கப்படுவாய்" என தொலைபேசி மிரட்டலுக்குள்ளாகியுள்ளார். இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இவ்வாலயத்தின் குருக்கள் இருவரும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சார்ந்த சிலரும் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த ஒக்.17ம் திகதி காலை 9.25க்கு இடம் பெற்ற இத் தொலைபேசி மிரட்டல் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

1986ம் ஆண்டு குழந்தை இயேசுஆலயம் கட்டப்படுவதற்கு முன்னர் அவ்விடத்தில் குழந்தை இயேசுவின் திருச்சுரூபமும். உண்டிய்லும் இருந்து வந்துள்ளது. பின்னர் இடம் பெற்ற ஆலய திருத்த விஸ்தரிப்பு வேலைகளின் போது அவை சில காலத்திற்கு இல்லாமலிருந்தன. இதனால் மக்கள் மத்தியில் தவறான தப்பபிப்பிராயங்களும் உண்டாகியது. பின்னர் 95மே11அன்று பங்குத் தந்தையின் தலைமையில் கூடிய கூட்டத்தில் திருச்சுரூபம் மீளவும் வைக்கப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. அன்றிரவே திருச்சுருபமும் வைக்கப் பட்டது. ஆனால் இதற்கும் தனக்கும் சம்பந்தமில்லை எனக் குருவானவர் அக் கூட்டத்தில் தெரிவித்தார். இதன் பிறகு. இது சம்பந்தமாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு பங்குச்சபை பொறுப்பேற்கும் எனவும் முடிவெடுக்கப்பட்டது. அவ்விடத்தில் முன்பிருந்தது போன்று உண்டியலும் செப்.21ம் திகதி வைக்கப்பட்டது.

உண்டியல் வைக்கப்பட்டவுடன் திருச்சுரூபம் பற்றி அக்கறையில்லாமலும். தனக்கு பொறுப்பில்லை என்றும் கூறிய பங்குக் குருவானவர். செப். 22ம் திகதியன்று பங்குச்சபை செயலாளரை அழைத்து உண்டியல் பணம் தனக்கு தரப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். இதற்கு உடன்படாத செயலாளர் பீட்டருக்கு எதிராக பங்குதந்தை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இது ச்ம்பந்தமாக உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தும் நோக்குடன் செயலாளர் அவர்கள் அவசர கூட்டமொன்றைக் கூட்டுவதற்கு எழுத்துமூல அறிவித்தல் கொடுத்திருந்தார். பங்குத்தந்தைக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்டது. எனினும் அவர் அதைப் புறக்கணித்துவிட்டார்.

செப்.28ல் கூடிய கூட்டத்தில் தற்காலிக தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டு பங்குத் தந்தையுடன் சமரசம் காணும் முயற்சியில் சிலர் அனுப்பி வைக்கப்பட்டனர். எனினும அவர் அவர்களைப் புறக்கணித்துவிட்டார்.

இதன் பின்பு கடந்த ஒக். 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலைப் பூசையின் போது பங்குச் சபையைக் கலைத்து விட்டதாக அறிவித்த பங்குத் தந்தை அன்று மதிய போசனத்திற்குப் பின்னர் வேறு ஒரு குருவானவரையும் அழைத்து வந்து அத் திருச்சுருபத்தை சுற்றியிருந்த தடுப்பையும். உண்டியலையும் உடைத்து அலங்கோலப் படுத்தியுள்ளார்.

இது சம்பந்தமான செய்தி தினமுரசு பத்திரிகையிலும் (8 14) வெளிவந்திருந்தது. இதன்ப்படி மேற்சொன்ன தொலைபேசி மிரட்டல் இடம் பெற்றுள்ளது. அது தவிர திருமலை தினமுரசு நிருபர் பயமுறுத்தப் பட்டுள்ளார். ஒக்.19 காலை முரசு நிருபரிடம் இதில் சம்பந்தப்பட்ட இரு குருக்களும் சில பெரும்பான்மையினத்தவரும் சென்று அச் செய்தி பொய் என மறுப்புச் செய்தியை அனுப்பு மாறு பயமுறுத்தியுள்ளார்.

அதன் பின்னர் அதே தினம் காலை 10.45 மணியளவில் முன்னாள் பங்குச் சபை செயலாளர்கள் இருவரின் வீட்டுக்கு முரசு நிருபரிடம் சென்ற அதே நபர்கள் சென்றுள்ளார்கள். அங்கே மேற்படி செயலாளர் இல்லாததால் அவர்களின் மனைவிமாரிடம் முரசில் வந்த செய்திக்கு மறுப்புச் செய்தி அனுப்பவேண்டும் இல்லாவிட்டால் உங்களுக்குஎம்மால் ஆபத்து ஏற்படும் எனப் பயமுறுத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பிரதம ஆசிரியர்: சேரன். எல்லாத் தொடர்புகட்கும்: இல.4, ஜெயரட்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. 593615